www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

மார்ச் - 2003
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00



பார்ப்பன
பயங்கரவாத
எதிர்ப்பு மாநாட்டு
சிறப்பிதழ்



# தமிழகத்தை இந்துத்துவத்தின் கல்லறையாக்குவோம்!

படிப்பகம்

www.padippakam.com

**ஒரு நாயையோ அல்லது குதிரையையோ அடித்தால் கூட மிருக வதைத் தடைச் சட்டத்தின் கீழ்க் கைது செய்யலாமென இந்நாட்டின் சட்டம் கூறுகிறது. ஆனால், ஐந்து மனிதர்கள் பகிரங்கமாகப் படுகொலை செய்யப்பட்டும் கூட கொலைகாரர்கள் உடனடியாகப் பிணையில் விடுவிக்கப்பட்டார்கள்.**



கொலை செய்யப்பட்டவர்களின் இரு குடும்பத்தினர்

ஜஜ்ஜார், ஹரியானா :

# இராவணனை எரித்த கைகள்தான் தலித் மக்களையும் எரித்தன!

*உள்ளூர் சாதி ஆதிக்கத்தால் அச்சுறுத்தப்பட்டதன் விளைவாக, கொலை செய்யப்பட்ட **ஜஜ்ஜார்** கிராமத்து தலித்துகளின் உறவினர்கள் மாநாட்டிற்கு வருவதற்கு இயலவில்லை. இதனையொட்டி, 'நிஷாந்த்' கலைக் குழுவின் **தோழர் சம்சுல் இசுலாம்** துலேனா சம்பவம் குறித்த ஒரு செய்தித் தொகுப்பளித்தார்:*

ஹரியானாவில் நடைபெற்ற படுகொலையானது, இந்திய வரலாற்றில் மிகவும் அதிர்ச்சியூட்டக் கூடிய சம்பவம்.

ஒவ்வொரு நாளும் இந்நாட்டின் ஒவ்வொரு மூலையிலும், தலித் மக்கள் கொலை செய்யப்படுகிறார்கள். ஒடுக்கப்படுகிறார்கள். ஆனால், இச்செய்திகள் செய்தித்தாள்களில் இடம்பெறுவதில்லை. உண்மையில், இச்செய்திகள் புறக்கணிக்கப்படுகின்றன. முசுலீம்களும், கிறிஸ்தவர்களும் தாக்கப்படுவதற்கான காரணமும், அவர்கள் ஏற்கெனவே தலித்துக்களாக இருந்து, இந்து மதக் கொடுமைகளின் காரணமாக மதம் மாறியதுதான்.

அக்டோபர் 16, 2002 அன்று தில்லியிலிருந்து 16 கி.மீ தொலைவிலுள்ள ஜஜ்ஜார் எனும் ஊரில் இக்கொடூரம் அரங்கேறியுள்ளது. வி.இ.ப குண்டர்களும், ஆரிய சமாஜக் காலிகளும் இக்கொலையை நடத்திய முறையானது, தவிர்க்கவியலாமல் அதன் குரூரத்தன்மையை பெரிய செய்தியாக பத்திரிக்கைகளில் வெளியிட வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியது.

ஜஜ்ஜாரின் தலித் மக்கள் மேல்சாதியினரின் கொடுமைக்கெதிராகப் போராடியதனால், சுயமரியாதையுடன் எதிர்த்து நின்றதனால், பலகாலமாய்க் கறுவிக் பொறுமிக் கொண்டிருந்த மேல்சாதி வெறியர்கள் அக்டோபர் 16–ஆம் தேதியன்று தங்களுடைய திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டார்கள்.

தோல் விற்பனைக்காக, இறந்து போன பசுக்களின் தோலை உரித்துக் கொண்டிருந்தவர்கள், உயிரோடிருந்த பசுவைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்கள்.

காவல் நிலையத்தினருகே திட்டுத் திட்டாக இரத்தம் உறைந்து கிடந்தது. கருகிப் போன மனித உடல்கள் சிதறிக் கிடந்தன. அடித்துக் கொல்லப்பட்ட ஐவரில், இருவர் உயிரோடு எரிக்கப்பட்டனர்.

கொலை செய்யப்பட்ட தலித்துக்கள் இறந்த மாட்டின் தோலை உரித்து விற்கும் தங்கள் வழக்கமான தொழிலைத்தான் செய்து வந்தனர். தசரா பண்டிகையை முடித்து வந்த வெறி கொண்ட மேல்சாதிக் கூட்டமொன்று அவர்களைக் காவல் நிலையம் வரை அடித்து இழுத்து வந்து, காவல்நிலைய வாயிலிலியே வைத்து, ''கோமாதா வாழ்க'' என்று வெறிக் கூச்சலிட்டபடியே குரூரமாகக் கொலை செய்தது. இது துரிதகதியில் திடீரென்று நடைபெற்ற சம்பவமல்ல. மாலை 6.30 மணிக்குக் காவல் நிலையத்திற்கு அடித்து இழுத்து வரப்பட்டு, 9.30 மணிக்கு மேல்தான் படுகொலை செய்யப்பட்டனர்.

நகர மாஜிஸ்திரேட், டி.எஸ்.பி, நகராட்சி கமிஷனர், பகுதி மேம்பாட்டு அலுவலர், மற்றும் 50 போலீசுக்காரர்கள் முன்னிலையில்தான் இப்படுகொலை நடைபெற்றுள்ளது. ஆனால், யார் கொலை செய்யப்பட்டார்களோ அவர்களுக்கு எதிராகவே காவல்துறை முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்தது. ஒரு படி மேலாக, உள்ளூர் வி.இ.ப மற்றும் சிவசேனா அமைப்பின் தலைவர்கள் கொலை செய்தவர்கள் மீது எந்நடவடிக்கையும் எடுக்கக் கூடாதென்று மனுக்கொடுத்தார்கள்.'' (இந்தியன் எக்ஸ்பிரஸ், 17–10–2002).

ஒரு நாயையோ அல்லது குதிரையையோ அடித்தால் கூட மிருக வதைத்தடைச் சட்டத்தின் கீழ்க் கைது செய்யலாமென இந்நாட்டின் சட்டம் கூறுகிறது. ஆனால், ஐந்து மனிதர்கள் பகிரங்கமாகப் படுகொலை செய்யப்பட்டும்கூட கொலைகாரர்கள் உடனடியாகப் பிணையில் விடுவிக்கப்பட்டார்கள்.

இத்தனைக்கும், கொலை செய்யப்பட்ட தலித்துக்கள் இறந்த மாட்டுத் தோலை உரித்து விற்பதற்கான முறையான உரிமத்தை நகராட்சியிடமிருந்து பெற்றிருந்தனர்.

தசரா பண்டிகையென்பது, இராவணனை இராமன் வெற்றி பெற்றதைக் கொண்டாடும் பண்டிகை. அப்பண்டிகை முடித்து வந்தவர்கள்தான் இத்தலித்துக்களைக் கொலை செய்திருக்கிறார்களென்பது முக்கியமானதாகும்.

குஜராத்தைக் குறித்து இன்றளவும் செய்திகள் வந்து கொண்டிருந்த போதிலும் ஜஜ்ஜார் மெல்ல மெல்ல மறக்கடிக்கப்பட்டு வருகிறது. இந்து மதத்தின் மனுதர்மக் கொடுங்கோன்மையை, அதன் உயிர்நாடியான சாதிய ஒடுக்குமுறையின் வெறியாட்டத்தை ஊடகங்களும், அரசும் திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்து வருகின்றன. □



படிப்பகம்

www.padippakam.com

**கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே**

- புதிய கலாச்சாரம்
- மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

- போர்: **20**
- குரல்: **10**
- மார்ச் - 2003

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா: US$ 9

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@hotmail.com

தொலைபேசி: 044-23718706

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
15-வது தெரு அருகே,
அசோக் நகர், சென்னை-600 083.

அலுவலக நேரம்:
காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை

# இரண்டு பயங்கரவாதிகள்! இரண்டு அகழ்வாராய்ச்சிகள்!

பாபர் மசூதி வளாகம் தொடர்பாக 1949 முதல் உறங்கிக் கொண்டிருக்கும் சிவில் வழக்கை விசாரித்து வரும் அலகாபாத் உயர்நீதி மன்றம் விசித்திரமான உத்தர வொன்றைப் பிறப்பித்துள்ளது. அந்த வளாகத்தைத் தோண்டி ஒரே மாதத்திற்குள் தொல்லியல் ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டுமென அகழ்வராய்ச்சி வல்லுநர்கள் பணிக்கப்பட்டிருக்கிறார்கள். கீழ்க்கண்ட காரணங்களால் இந்தத் தீர்ப்பே சட்டவிரோ தமானது என்கிறார்கள் சட்ட வல்லுனர்கள்.

''சிவில் வழக்கில் தனது தரப்பு சாட்சியங்களை முன்வைப்பது வாதியின் பொறுப்பு; நீதிமன்றம் வாதியின் சார்பில் துப்பு துலக்க முடியாது.'' ''கோயிலா மசூ தியா என ஆராய முடியாதென்று ஏற்கனவே உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்புக்கும், வழக்கு முடியும் வரை அந்த வளாகம் உள்ளபடியே பராமரிக்கப்பட வேண்டுமெனச் சென்ற ஆண்டு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கும் இது எதிரா னது.'' ''பல நூற்றாண்டுகளாக இசுலாமிய மக்களுக்கு உள்ள அனுபவ பாத்தியதையை மறுப்பதும், சிவில் வழக்கில் பூமிக்கடியில் ஆதாரம் தேடுவதும் அடிப்படையிலேயே முறைகேடானது'' எனப் பல்வேறு காரணங்கள் இத்தீர்ப்புக்கு எதிராகப் பட்டியலிடப் படுகின்றன.

இவை ஒருபுறமிருக்கட்டும். 50 ஆண்டுகட்கும் மேலாக ஒரு சாதாரண சிவில் வழக்கை விசாரித்துத் தீர்ப்பளிக்கத் துப்பில்லாத நீதிமன்றம், இந்தத் தீர்ப்பின் வாயி லாகத் தொல்லியல், புவியியல், வரலாற்றியல், மானுடவியல், சமூகவியல் போன்ற எல்லா அறிவியல் துறை அறிஞர்களின் கூற்றுக்களையும் ஆராய்ந்து தீர்ப்பு அளிக்கவல்ல பேரறிஞராகத் தன்னைத் தானே நியமித்துக் கொண்டுள்ளது - கலிலி யோவின் ஆய்வு மீது தீர்ப்பெழுதிய திருச்சபையைப் போல!

தோண்டட்டும்! எத்தனை ஆண்டு ஆழம் தோண்ட வேண்டும்? சென்ற ஆண்டு அயோத்தி அடிக்கல் நாட்டு விழாவையொட்டி நடந்த குஜராத் படுகொலையின் எலும் புகள் மண்ணைக் கிளறியவுடனே கிடைக்கும்; அவை நீதிமன்றத்துக்குத் தேவை யில்லை. 1984 வரை வட இந்தியாவின் நிலப்பிரப்பில் எங்கு தோண்டினாலும் இசு லாமிய மக்களின் எலும்புகளும், மசூதிகளின் இடிபாடுகளும், சூலங்களும், ஆர்.எஸ்.எஸ்.ஸின் துண்டறிக்கைகளும் கிடைக்கக் கூடும்; அவையும் நீதிமன்றத் துக்குத் தேவையில்லை. ஒரு நூற்றாண்டு பின்னோக்கிச் சென்றால் 1857-இல் பிரிட் டிஷாருக்கு எதிராகப் போராடி உயிர் நீத்த இந்து - முசுலீம் சிப்பாய்களின் மண்டை யோடுகள் கிடைக்கும். அவையும் தேவையில்லை; 2000 ஆண்டு ஆழம் தோண்டலாம். அயோத்தியில் அழிக்கப்பட்ட பவுத்த சமண விகாரைகளின் தடயம் கிடைக்கும். அவையெல்லாம் நீதிமன்றத்துக்குத் தேவையில்லை. பாபர் ஆட்சிக்காலம் மட்டுமே நீதிமன்றத்துக்குத் தேவை. அதற்கு முன்னும் பின்னும் புதைந்திருக்கும் உண்மைகள் தேவையில்லை.

இப்படியொரு ஆராய்ச்சி உலகில் எங்காவது நடக்குமா? நடக்கிறது. ஈராக்கிலும் இதேதான் நடக்கிறது. ஐ.நா. மன்றத்தின் சார்பாக பிளிக்ஸ் குழு ஈராக்கில் இதைத்தான் செய்து வருகிறது. 1989-க்குப் பிறகு இன்றுவரை உயிரியல், ரசாயன, அணு ஆயு தங்கள் மற்றும் ஏவுகணைகளை சதாம் உசேன் தயாரித்து ஒளித்து வைத்திருக்கிறாரா என்று பூமிக்கு அடியிலும் பள்ளம் தோண்டி ஆராய்ந்து வருகிறது பிளிக்ஸ் குழு. 1989-க்கு முன் ஈரானை அழிப்பதற்காக சதாம் உசேனுக்கு அமெரிக்கா வழங்கிய பேர ழிவு ஆயுதங்கள், அதற்கும் முன் ஈராக்கில் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு நடத்த அமெ ரிக்கா அளித்த கொடைகள்... இவை பற்றி பிளிக்ஸ் குழு ஆராயாது. அதேபோல் 1990-இல் அப்பன் புஷ் ஈராக்கில் வீசிய அணு ஆயுதங்களையோ, தொடர்ந்து 13 ஆண்டுகளாக ஈராக்கின் மீது தொடுக்கப்பட்டிருக்கும் அறிவிக்கப்படாத யுத்தத்தில் மரித்த இலட்சக்கணக்கான குழந்தைகளின் கல்லறைகளையோ பிளிக்ஸ் தோண்ட மாட்டார்.

அலகாபாத் உயர்நீதி மன்றத்துக்கும் பிளிக்ஸ் குழுவுக்குமிடையிலான ஒற்று மையும் அமெரிக்க பயங்கரவாதிகளுக்கும் பார்ப்பன பயங்கரவாதிகளுக்குமிடையி லான ஒற்றுமையும் இத்துடன் முடியவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



அமெரிக்காவால் முன்மொழியப்பட்ட பிளிக்ஸ் குழு ''பேரழிவு ஆயுதங்கள் எதுவும் பூமிக்கு அடியில் கூட இல்லை'' என்று ஐ.நா.வில் அறிக்கை தருகிறது. ''ஆயுதங்கள் இருக்கின்றன என்பதற்கு எங்களிடம் ஆதாரம் இருக்கிறது. ஆனால் அதைக் காட்டமாட்டோம்'' என்கிறது அமெரிக்கா. 1992-இல் மசூதியை இடித்தபோதே தொல்லியல் ஆதாரங்களைக் 'கண்டுபிடித்து விட்ட' விசுவ இந்து பரிசத், ''தனது கண்டுபிடிப்புக்களை யாரும் ஆய்வு செய்து தீர்ப்பு கூற முடியாது'' என்கிறது.

''ஐ.நா. மன்றத்தின் ஒப்புதலோடு தான் ஈராக் மீது போர் தொடுப்போம்'' என்று மென்மையாகப் பேசுகிறார் காலின் பாவெல் - நீதிமன்றத்தின் ஒப்புதலோடுதான் கோயில் கட்டுவோமென்று பேசும் வாஜ்பாயியைப் போல.

''எந்த நீதிமன்றத் தீர்ப்பும் எங்களைக் கட்டுப்படுத்தாது. கோயில் கட்டியே தீருவோம்'' என்கிறார் சிங்கால். ''யார் வந்தாலும் வராவிட்டாலும் அமெரிக்கா போர் தொடுக்கும்'' என்று பிரகடனம் செய்யும் ரம்ஸ் பீல்டு போல.

தொல்லியல் துறையினர் தோண்டத் தொடங்குமுன்பே பாபரின் குற்றத்தை ஒப்புக் கொண்டு இடத்தை ஒப்படைப்பதன் மூலம் இந்துக்களின் நல்லெண்ணத்தைப் பெறுமாறு முசுலீம்களுக்கு அறிவுரை சொல்கிறது விசுவ இந்து பரிசத். ''பிளிக்ஸ் குழு தனது ஆய்வை முடிக்கும் முன்பே குற்றத்தை ஒப்புக் கொண்டு ஈராக்கை ஒப்படைத்து விட்டு ஓடு!'' என்று சதாம் உசேனுக்கு அறிவுரை கூறுகிறார் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜாக் ஸ்ட்ரா.

ஆர்.எஸ்.எஸ்.ஸிற்கும் அமெரிக்க பயங்கரவாதிகளுக்குமிடையிலான இந்த ஒப்புமை இவர்களுடன் முடியவில்லை. ஆர்.எஸ்.எஸ்.ஸை எதிர்ப்பதாகக் கூறும் காங்கிரசு முதல் மார்க்சிஸ்டு வரையிலான கட்சிகளும், அமெரிக்காவின் போரை எதிர்க்கும் ஜெர்மனி முதல் சீனா வரையிலான நாடுகளும் தங்களது சமரச வாத அணுகுமுறையிலும் இதே வகையான ஒப்புமையை வெளிக் காட்டுகின்றனர்.

''இடித்த மசூதியைக் கட்டிக் கொடு'' என்று கேட்கத் துணிவின்றி ''நீதிமன்றத் தீர்ப்புக்குத் தலைவணங்குவோம்'' என்று பின்வாங்கிய 'எதிர்'க் கட்சிகள் இப்போது நீதிமன்றத் தீர்ப்பை எதிர்க்க முடியாமல் முனகுகிறார்கள். வளைகுடாப் போரின் குற்றங்களுக்காக அமெரிக்காவைக் கூண்டிலேற்றும் துணிவில்லாதவர்கள், ''ஐ.நா. மன்றத்தின் தீர்ப்புக்குத் தலைவணங்குவோம்'' என்கிறார்கள். அமெரிக்காவோ ஐ.நா.வை மிரட்டுகிறது; உறுப்பினர்களை விலைக்கு வாங்குகிறது.

பிளிக்ஸ் குழுவும் தொல்லியல் ஆய்வாளர்களும் தோண்டிக் கொண்டிருக்கிறார்கள்; ஆனால் அவர்கள் தோண்டிக் கண்டுபிடிக்கவிருக்கும் உண்மைக்கும், பாசிஸ்டுகள் அமல்படுத்தவிருக்கும் திட்டத்திற்கும் எவ்விதத் தொடர்புமில்லை. அமெரிக்காவின் திட்டம் உலக மேலாதிக்கம்; ஆர்.எஸ்.எஸ்.ஸின் திட்டம் இந்துராஷ்டிரம்.

ஒப்புமைகள் இத்துடன் முடிவடைகின்றன. அமெரிக்காவின் போர்வெறியை எதிர்த்து இலட்சக்கணக்கான மக்கள் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் தெருவில் இறங்கிப் போராடுகிறார்கள்; ஈராக்கிற்குச் செல்லும் இராணுவ தளவாடங்களை மறிக்கிறார்கள்; பாராளுமன்றங்களை முற்றுகையிடுகிறார்கள். இந்த மக்கள் எழுச்சிதான் அமெரிக்காவை அச்சுறுத்துகிறது. போரைத் தாமதிக்கச் செய்கிறது.

இதற்கு ஒப்புமை சொல்லத்தக்க போராட்டங்கள் எதுவும் நம் நாட்டில் நடக்கவில்லை. போராட்டங்களை உருவாக்குவோம்! உருவாக்கத் தவறினால் அவமானப்படுவோம்! அடிமைப் படுவோம்! ❑

## அறிவிப்பு

*தஞ்சை மாநாட்டில் ...*

**சம்சுல் இசுலாம் ஆற்றிய உரை**
**வைக்கம் விசுவநாதனின் நேருரை**
**ஓவியக்காட்சி குறித்த மதிப்புரை**

**ஆகியவை அடுத்த இதழில் வெளிவரும்.**

| | | |
|---|---|---|
| முன் அட்டை ஓவியம் | : | முகிலன் |
| அட்டை வடிவமைப்பு | : | ஸ்பார்ட்டகஸ் |
| இதழ் வடிவமைப்பு | : | துரை |
| நேருரைகள் தொகுப்பு | : | அரசு |
| கருத்தரங்க உரைகள் தொகுப்பு | : | பாலன் |

''எங்களால் நம்ப முடியவில்லை. இத்தனை ஆயிரம் மக்கள் எங்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கிறார்களா? நம்ப முடியவில்லை. இந்த மாநாட்டில் நீங்கள் வரைந்து வைத்துள்ள ஓவியங்களைக் கண்டோம். இதுவே குஜராத்தாக இருந்தால் இதில் ஒரு ஓவியத்தைக் கண்டிருந்தால் கூட ஆர்.எஸ்.எஸ். காரர்கள் அரங்கத்தையே கொளுத்தியிருப்பார்கள்.''

''இந்த முறை மோடியின் பதவியேற்பு விழாவுக்கு ஜெயலலிதா வந்தவுடனே 'சரி, குஜராத்துக்கு அடுத்தது தமிழ் நாடுதான்' என்று நாங்கள் பேசிக் கொண்டோம். இந்தக் கூட்டத்தைப் பார்த்த பிறகு அவர்கள் அவ்வளவு சீக்கிரம் இங்கே ஜெயித்துவிட முடியாது என்ற நம்பிக்கை வருகிறது... இருந்தாலும் எச்சரிக்கையாக இருங்கள்!''

- மாநாடு முடிந்து விடைபெற்றுக் கொள்ளும்போது குஜராத் முசுலீம் மக்கள் - அகதிகள் எங்களிடம் கூறிய கருத்துக்கள் இவை.

''இருந்தாலும் எச்சரிக்கையாயிருங்கள்'' என்ற அவர்களது குரல்தான் நினைவில் நிற்கிறது. 'இருந்தாலும்' என்ற ஒரு சொல்லின் பின்னே ஆயிரம் அனுபவங்களை அவர்கள் தேக்கி வைத்திருக்கக்கூடும். அது, பக்கத்து வீட்டு 'இந்து' இழைத்த நம்பிக்கைத் துரோகமாக இருக்கலாம்; போலீசின் மீது அவர்கள் வைத்த மூட நம்பிக்கையாக இருக்கலாம்; காங்கிரசு கட்சி மீது கொண்ட அசட்டுத்தனமான நம்பிக்கையாகவும் இருக்கலாம்; அல்லது ''அவ்வளவு கொடூரமாக நடந்து கொள்ள மாட்டார்கள்'' என்று ஆர்.எஸ்.எஸ். காலிகளைப் பற்றியே கூட ஒரு மயிரளவு நம்பிக்கை அவர்களிடம் இழையோடியிருக்கலாம்.

'இருந்தாலும்' என்ற அந்த ஒரு சொல் 2500 முசுலீம்களின் இரத்தத்தில் தோய்த்தெடுக்கப்பட்ட சொல். இரண்டு லட்சம் அகதிகளின் கண்ணீரில் தோய்த்தெடுக்கப்பட்ட, ஈரம் உலராத சொல்.

தமிழகத்திலோ அதே சொல் நேரெதிரான பொருளில் பயன்படுத்தப்படுகிறது. ''பா.ஜ.க. அரசை தி.மு.க., பா.ம.க, ம.தி.மு.க. போன்ற கட்சிகள் ஆதரிப்பது உண்மைதான். இருந்தாலும் அவர்கள் நினைத்தால் கவிழ்த்துவிட முடியும்'' ''ஜெயலலிதாவின் ஆட்சி பா.ஜ.க.வின் பினாமி ஆட்சி என்பது உண்மைதான்.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழகத்தை இந்துத்துவத்தின் கல்லறையாக்குவோம்!

இருந்தாலும் அடுத்த தேர்தலில் அவர் தோற்பது உறுதி.'' ''பார்ப்பனக் கும்பலின் கொட்டம் அதிகரித்திருப்பது உண்மைதான். இருந்தாலும் பெரியார் பிறந்த மண்ணில் அவர்கள் வெற்றிபெற்றுவிட முடியாது.''

இந்த மெத்தனமும் சவடாலும் திண்ணை வீரமும்தான் தமிழகத்தை இந்த நிலையில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றன. ஆலயங்களில் அன்னதானம், அர்ச்சகர்களுக்கு ஓய்வூதியம், ஆதி திராவிட மாணவர் விடுதிகளை சங்கராச்சாரியிடம் ஒப்படைத்தது என்ற அடுக்கடுக்கான இந்துத்துவச் செயல்திட்டங்களின் வரிசையில் இறுதியாக வந்தது மத மாற்றத் தடைச்சட்டம்.

மதமாற்றத் தடைச்சட்டத்தை ஜெயலலிதா கொண்டு வந்தவுடனேயே இச்சட்டத்திற்கெதிரான பிரச்சார இயக்கத்தைத் தொடங்கினோம்.

''மதமாற்றத் தடைச் சட்டம் என்பது தனியொரு சட்டமல்ல, அது தமிழ் நாட்டைப் பார்ப்பன நாடாக்கும் சதியின் அங்கம்'' என்பதை விளக்கி ஒரு சிறிய நூலை வெளியிட்டோம். மதமாற்றத் தடைச்சட்டத்துக்கு ஆதரவாக ஜெயா - ஆர்.எஸ்.எஸ். கும்பல் நடத்திய எல்லா பொய்ப் பிரச்சாரங்களுக்கும், பெரும்பான்மைச் சமூகத்தினரிடையே மத மாற்றம் குறித்து நிலவிவரும் தவறான அபிப்ராயங்களுக்கும் விடையளிக்கும் அந்தச் சிறு நூலை தமிழகத்தில் 23,000 பிரதிகள் விற்பனை செய்தோம்.

சிறுபான்மைச் சமூகத்தினரின் பல்வேறு பத்திரிக்கைகளும், தலித் இதழ்களும், முரசொலியும் தமது வாசகர்களுக்கு இந்நூலைச் சிபாரிசு செய்து மதிப்புரை எழுதின.

சிறுபான்மை அமைப்பினர் நடத்தும் கூட்டங்களில் சென்று ஆதரவு தெரிவிப்பதும் அங்கே இந்து மதவெறியை எதிர்த்துப் பேசுவதும் எளிது. ஆனால் தம்மை இந்து என்று கருதிக் கொள்கிற பெரும்பான்மை மக்கள் மத்தியில் இச்சட்டத்திற்கு எதிரான கருத்தை உருவாக்குவதுதான் கடினமான ஆனால் அவசியமான பணி. இந்தச் சிறுநூல் அவ்வாறுதான் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது.

இச்சட்டத்திற்கெதிராகத் தமிழகமெங்கும் நடத்தப்பட்ட அரங்குக் கூட்டங்களிலும் ஏராளமானோர் பங்கேற்றனர். கூட்டத்திற்கான விளம்பரச் சுவரொட்டி ஒட்டிய தோழர்கள் கம்பம் நகரில் கைது செய்யப்பட்டனர். அரங்குக் கூட்டத்திற்கு போலீசு அனுமதி தேவையில்லையெனினும் கூட்டம் நடத்தக்கூடாது என்று தடைவிதித்தது போலீசு.

போலீசு அதிகாரிகள் இதற்கு அளித்த விளக்கம்தான் மிகப்பெரிய கேலிக்கூத்து. ''மதமாற்றத் தடைச்சட்டத்தைத் திரும்பப் பெறாவிட்டால் கம்பம் கோயிலைக் குண்டு வைத்துத் தகர்ப்போம்' என்று உங்கள் பெயரில் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் மொட்டைக் கடுதாசி போட்டிருக்கிறார்கள். எனவேதான் உங்களுக்கு அனுமதி மறுக்கிறோம்'' என்று கூறி, தங்களுடைய நிலைமையைப் புரிந்து கொள்ளும்படி வேண்டுகோளும் விடுத்தார்கள். கோத்ரா ரயில் பெட்டி எப்படிக் கொளுத்தப்பட்டிருக்கும் என்ற உண்மையை வாசகர்கள் புரிந்து கொள்ள இச்சம்பவம் உதவும்.

***

குஜராத் படுகொலைக்குப் பின்னரும் அங்கே மோடி பெற்ற வெற்றி, ''நாட்டையே குஜராத் ஆக்குவோம்'' என்று கூச்சலிட்ட ஆர்.எஸ்.எஸ் காலிகளின் வெறி, பார்ப்பனக் கொடுங்கோன்மையை மீட்டுருவாக்கம் செய்ய வன்மத்துடன் முயன்று வரும் தமிழகப் பார்ப்பனக் கும்பலின் சதிகள், அதற்கு அரணாய் நிற்கும் ஜெ. அரசு - இந்தச் சூழல் உடனடியாக ஒரு எதிர்ப்பியக்கம் தொடங்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியது.

தமிழகமெங்கும் வறட்சி, தஞ்சையில் பட்டினிச் சாவு, அரசுக் கல்லூரி தனியார்மயம், அரசு ஊழியர், ஆசிரியர் போராட்டங்கள் மீதான ஜெ அரசின் அடக்குமுறை, ஆட்குறைப்பு, பேருந்து தனியார்மயம், சாலைப் பணியாளர் நீக்கம் - என அன்றாட வாழ்வின் பிரச்சினைகள் மக்களை அலைக்கழித்துக் கொண்டிருந்தன. இவையனைத்தும் தனித்தனி பிரச்சினைகளல்ல; நாட்டை அடிமையாக்கும் மறுகாலனியாக்கக் கொள்கைகளின் விளைவுகளே என்பதை மக்களுக்குப் புரிய வைப்பதே பெரும் பணியாக இருந்தது. இந்நிலையில் பார்ப்பன பயங்கரவாதத்திற்கு எதிரான பிரச்சாரத்தை மக்களிடம் கொண்டு செல்வது என்பது பெரும் சவாலாகத்தான் இருந்தது. எனினும் இது எதிர்கொண்டு தீரவேண்டியதொரு சவால்.

பார்ப்பன பயங்கரவாதம் என்பது மறுகாலனியாக்கக் கொள்கைகளின்

ம.க.இ.க கலைக்குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சி






படிப்பகம்

www.padippakam.com

பாதிப்புகளிலிருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்பும் வெறும் தந்திரமல்ல; அது பார்ப்பன, பனியா, ஆளும் வர்க்கக் கும்பலின் இந்து ராஷ்டிரக் கனவு. மறுகாலனியமும் மனுதருமமும் பிசைந்து உருவான கலவைதான் பார்ப்பன பயங்கரவாதம்.

மறுகாலனியாக்கத்திற்கும் - பார்ப்பன பயங்கரவாதத்திற்கும், பட்டினிச் சாவுக்கும் - சாதியக் கொடுங்கோன்மைக்கும் இடையிலான இயங்கியல் உறவை எடுத்தியம்பும் வகையில் எழுதப்பட்ட மாநாட்டு அறிமுகப் பிரசுரமும், இவற்றை சுருக்கெனத் தைக்கும்படி சொல்லும் முழக்கங்களும் 2.5 இலட்சம் பிரதிகள் தமிழகமெங்கும் விநியோகிக்கப்பட்டன. முழக்கங்கள் அச்சிட்ட கையேடு மட்டும் 25,000 பிரதிகள் விற்றது.

சுவரிலே இந்த முழக்கங்களை எழுதுவதொன்றும் எளிய வேலையாக இல்லை. ''தலித் மக்கள் கோயிலுக்குள் வரக்கூடாது'' என்று நேரடியாகச் சொல்லாமல் ''நாங்கள் கட்டிய கோயிலுக்குள் யார் வரலாமென்பதை நாங்கள்தான் முடிவு செய்வோம்'' என்று சொத்துரிமையின் பெயரில் சாதி ஆதிக்க உரிமையை நிலைநாட்டுவது போல, கருத்துரிமைக்கான தடையும் சட்டத்தால் நிலைநாட்டப்பட்டுள்ளது. ''தனியார் சுவரில் எழுதக்கூடாது; அரசு சுவரிலும் எழுதக்கூடாது'' என்ற சட்டம் ஷகிலா திரைப்படச் சுவரொட்டி ஒட்டும்போதோ, 'அம்மா' என்று 50 அடி நீளத்தில் சுவரொட்டி ஒட்டும்போதோ சட்டம் வேலை செய்வதில்லை.

ஆனால் 'பார்ப்பன' என்ற ஒரு சொல் எழுதப்பட்டவுடனே தீப்பொறி பட்டதுபோல சட்டம் விழித்துக் கொள்கிறது. அப்படித் தானாக விழித்துக் கொள்ளாத இடங்களில் அதிகாரிக்கு ஆர்.எஸ்.எஸ். தார்க்குச்சி போடுகிறது. வேலூரில் சி.எம்.சி. மருத்துவமனைக்கு எதிரே பெரிய அளவில் எழுதப்பட்டிருந்த சுவரெழுத்துகளை தாசில்தாரே முன்நின்று வெள்ளையடித்தார். கரூரில் ஆர்.எஸ்.எஸ். உத்தரவின் பேரில் போலீசு வெள்ளையடித்தது. கோவையிலோ ''பிராமண சமூகத்தின் மனம் புண்படும்படி எழுதக்கூடாது'' என்று எழுத்துபூர்வமாகவே போலீசு உத்தரவிட்டது. திருநெல்வேலியில் சுவரெழுத்து எழுதிய மாணவர்கள் கைது செய்யப்பட்டார்கள். உடனே சட்டக்கல்லூரி மாணவர்கள் சாலைமறியலில் ஈடுபடவே கைதான தோழர்கள் விடுவிக்கப்பட்டனர்.

பிராமண சமூகத்தின் மனம் புண்படுவதாகவும் பிராமண இளைஞர்கள் தெருவில் இறங்கிச் சுவரெழுத்துக்களை அழிப்பார்கள் என்றும் குடந்தை பிராமணர் சங்கம் அறிவித்தது. அவ்வாறு செய்தால் அவர்கள் உடலும் புண்பட

**இசைச் சித்திரத்தில் ஒரு காட்சி**



**சிறுபான்மை மதத்தினரும், பர்தா அணிந்த இசுலாமியப் பெண்களும் இம்மாநாட்டில் கலந்து கொண்டதை எமது அமைப்பின் நேர்மைக்கும், எமது அரசியல் முழக்கத்தின் சரியான தன்மைக்கும் கிட்டிய அங்கீகாரமாகவே கருதுகிறோம்.**

நேருமென்பதைத் தெரிவித்தபின் அவர்கள் அமைதி அடைந்தார்கள்.

பிரச்சினைகளை எதிர்கொள்ளாமல் எந்த இடத்திலும் சுவர் முழக்கங்களை எழுதிவிடவில்லை. எல்லா ஊர்களிலும் தோழர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. தஞ்சையில் மட்டும் 5 வழக்குகள்!

அதே நேரத்தில் திருச்சியில் இந்து இளைஞர் மாநாடு நடத்திய ஆர்.எஸ்.எஸ். கும்பல், நகரில் ஒரு இடத்திலும் மாநாட்டுச் சுவரெழுத்தின் மீது கை வைக்கத் துணியவுமில்லை.

''சுவரில் எழுதுவதெல்லாம் பெரிய வேலையா?'' என்று சில அறிஞர்கள் பேசுகிறார்கள். ஆண்மைக் குறைவுக்கு லேகிய விளம்பரம் எழுதுபவர்களைப் பார்த்து அந்தப் பேரறிஞர்கள் இந்த முடிவுக்கு வந்திருக்கக்கூடும்.

சுவரில் எழுதும் ஒவ்வொரு தோழரும் போலீசை எதிர்கொள்ள வேண்டும்; எழுதும் போதே படிக்கின்ற மக்கள் கேட்கும் கேள்விகளை எதிர்கொண்டு பதில் சொல்ல வேண்டும். அவர்களது நம்பிக்கை, கண்ணோட்டம், அபிப்ராயங்கள் ஆகியவற்றைக் கேள்விக்குள்ளாக்கும் முழக்கங்களை எழுதும்போது எழுதுபவருக்கு பிரஷ் பிடிக்கத் தெரிந்தால் மட்டும் போதாது; பேசவும் தெரிந்திருக்க வேண்டும்; அடி வாங்கவும் கொடுக்கவும் தெரிந்திருக்க வேண்டும்.

தினமணியில் நடுப்பக்கக் கட்டுரைக்கு இடம் பிடிப்பதைக் காட்டிலும், வாரப் பத்திரிகை நிருபர்களைக் காக்காய் பிடிப்பதைக் காட்டிலும், சுவரில் எழுத இடம் பிடிப்பதும் எழுதுவதும் அதைப் பாதுகாப்பதும் கடினம்.

இந்த மாநாட்டின் வெற்றி என்பது தஞ்சை மாநாட்டுத் திடலில் நிரம்பியிருந்த ஆயிரக்கணக்கான மக்களை வைத்து மட்டும் மதிப்பிடப்படவில்லை. அந்த இரண்டு நாட்களில் அங்கே கூடியவர்கள் ஆயிரக்கணக்கில் என்றால், அதற்காக கடந்த 3 மாதங்களில் எமது தோழர்கள் சந்தித்திருக்கும் மக்களோ லட்சக் கணக்கில்!

25 காசு, 50 காசு, ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் என சில்லறையாகத் திரட்டப்பட்ட மாநாட்டு நிதி மட்டும் 2 லட்சம் ரூபாய்! இதற்காக எமது தோழர்கள் சந்தித்திருக்கும் மக்கள் பல லட்சம் பேர். நிதி வசூல் என்பது வெறும் நிதி வசூல் அல்ல, அதுவேதான் கருத்துப் போராட்டத்தின் களம்.

''இந்து என்று சொல்லாதே'' எனப் பேருந்தில் ஏறிப் பேசினால் ''வேறு என்ன என்று சொல்வது?'' என்று ஒரு கேள்வி வரும். அதற்குப் பதிலளிக்காமல் அந்தப் பேருந்தில் 5 காசு கூட வசூலிக்க முடியாது. ''நீ கிறித்தவனின் கைக்கூலி''



படிப்பகம்

www.padippakam.com

என்று ஒரு ஆர்.எஸ்.எஸ்.காரன் குற்றம் சாட்டினால் நெற்றியில் பொட்டு வைக்காத பெண் தோழர்கள் அங்கேயே கலகம் செய்ய வேண்டும்.

''இந்து என்று சொல்லாதே - பார்ப்பான் பின்னே செல்லாதே'' என்று அச்சிடப்பட்ட சட்டையணிந்து சென்னை மின்சார ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்த ஒரு தோழரை மடக்கி ''இப்படிப்பட்ட சட்டையெல்லாம் போட்டுக் கொண்டு ரயிலில் வரக்கூடாது'' என்று எச்சரிக்கிறார் ஒரு பரிசோதகர். ''ஆபாச பனியன்களுக்கு இந்தத் தடை உண்டா?'' என்று எதிர்க் கேள்வி எழுப்புகிறார் அந்தத் தோழர். வாயடைத்துப் போன பரிசோதகரின் சார்பில் வேறொரு பயணி ஆஜராகிறார்: ''சார் உங்க பாதுகாப்புக்காகத்தான் சொல்றாரு''. ''அப்படியா, நம் எல்லாருடைய பாதுகாப்புக்காகத்தான் இந்தச் சட்டையின் வாசகம்'' என்று கூறி விளக்குகிறார் அந்தத் தோழர்.

மயிலாடுதுறையில் பேருந்தில் பிரச்சாரம் செய்துவிட்டு உண்டியல் ஏந்துகிறார் ஒரு தோழர். சட்டையின் உள்பக்கம் கையை விடுகிறார் ஒரு பயணி. 'காசை எடுக்கிறார் போலும்' என்று காத்திருந்தால் பூணூலை இழுத்துக் காட்டுகிறார். 'என் சாதியைத் திட்டிப் பேசுகிறாய், நான் எப்படிப் பணம் தருவேன்' என்ற பொருளில். அருகாமையில் இருந்த பார்ப்பனரல்லாதார் இருவர் ''பிராமின்ஸ் எதிர்த்துப் பேச மாட்டாங்கன்ற தைரியத்துல பேசுறான். நம்ம சாதியச் சொன்னா சும்மா உட்றுவமா'' என்று பேசிக் கொள்கிறார்கள்.

''என் சாதி பெரிய சாதின்னு ஆதிக்கம் செய்யிற எவனாயிருந்தாலும் பேசுவோம்; பயப்பட மாட்டோம். அப்படி ஆளுங்க பிறப்பால பார்ப்பான் இல்லைன்னாலும் சிந்தனையிலும் செயல்லயும் பார்ப்பான்தான்'' என்று அந்தத் தோழர் பதிலடி கொடுக்கிறார். பூணூலைக் காட்டிய பார்ப்பனர் கூப்பிட்டு இரண்டு ரூபாய் உண்டியலில் போடுகிறார்.

உண்டியலில் காசு போட்ட பார்ப்பனர் தன் சாதி உணர்வைக் கழட்டிப் போட்டுவிடவில்லை. ஆனால் பூணூல் போடாமலேயே பார்ப்பனீயத்தை அணிந்து கொண்டிருக்கும் பார்ப்பனரல்லாதவர்கள் இருக்கிறார்களே இவர்கள்தான் பார்ப்பன பயங்கரவாதிகளின் இலக்கு. இவர்களுடைய ஆதரவின்றி ஆர்.எஸ்.எஸ். ஒரு போதும் வெற்றியடைய முடியாது. குஜராத் படுகொலை நம் கண்ணெதிரில் தெரியும் ஆதாரம்.

நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த பார்ப்பனரல்லாத சாதியினர் மத்தியில் மாநாட்டுப் பிரச்சாரத்திற்கு வரவேற்பு இருந்ததைக் காண முடிந்தது. ஆனால் இது ஒரு குறிப்பிட்ட அளவுதான். பத்து பேர் உள்ள அலுவலகத்தில் ஒரு பார்ப்பனரிருந்தால் பிரசுரத்தை வாங்கத் தயங்கியவர்கள் பலர். ஜெயலலிதாவின் ஆட்சி என்பது பாதிக் காரணமென்றால், நடுத்தர வர்க்கக் கோழைத்தனம் மீதிக் காரணம்.

''ஒரு குறிப்பிட்ட சாதியை மட்டும் ஏன் சொல்கிறீர்கள்?'' ''பார்ப்பனர்கள் முன்னைப் போல இல்லை'' ''அவர்களைப் போல முன்னேறத் தெரியவில்லையென்றால் அது நம்ம தப்பு'' - இவையெல்லாம் பார்ப்பனரல்லாத நடுத்தர வர்க்கத்தினர் பலர் வாயிலிருந்து உதிர்ந்த முத்துக்கள். தமிழகத்தில் பார்ப்பன எதிர்ப்பு உணர்வு விளைந்து முற்றி அறுப்புக்கு நிற்பதாகவும், அதை ம.க.இ.க.வினர் அலுங்காமல் அறுத்துக் கொண்டு போவதாகவும் அரற்றுவோர் ஒருமுறையாவது மக்களைச் சந்திக்க முயற்சிக்கட்டும்.

அடிமாடு நாடகம் - வி.வி.மு , கம்பம்



**பிராமண சமூகத்தின் மனம் புண்படுவதாகவும் .பிராமண இளைஞர்கள் தெருவில் இறங்கிச் சுவரெழுத்துக்களை அழிப்பார்கள் என்றும் குடந்தை பிராமணர் சங்கம் அறிவித்தது. அவ்வாறு செய்தால் அவர்கள் உடலும் புண்பட நேருமென்பதைத் தெரிவித்தபின் அவர்கள் அமைதி அடைந்தார்கள்.**

பார்ப்பனர்கள் மீதும், அருவெறுக்கத்தக்க அந்தப் பண்பாடு மீதும் இவர்கள் கொண்டிருக்கும் காதலுக்குக் காரணம் இவர்களது வர்க்கம்; அனுபவித்து வரும் வாழ்நிலை; அவர்களது சிந்தனையில் சம்மணமிட்டு அமர்ந்திருக்கும் சாதி உணர்வு.

சிறுபான்மையினருக்கும் இது பொருந்தும். ஆர்.எஸ்.எஸ். கும்பலால் மிரட்டப்படும் இன்றைய சூழலிலும், ''மாநாட்டுப் பிரசுரம் விநியோகிக்க கல்லூரிக்குள் நுழையக்கூடாது'' என்று தடுத்த கிறித்தவக் கல்லூரி முதல்வர்கள் உண்டு. கல்லூரிக்குள் அரசியல் நுழையக் கூடாதாம்! இடதுசாரி அரசியல் நுழைந்த கல்லூரிகள்தான் இன்று சங்க பரிவாரத்திற்கெதிரான போராட்டத்தில் முன் நிற்கின்றன. சிவப்புக் கொடி நுழைவதைத் தடுத்தால் அங்கே காவிக் கொடி படரும் என்பதை அவர்கள் பட்டுத்தான் தெரிந்து கொள்வார்கள் போலும்!

ஆனால் இப்பேர்ப்பட்ட பாதிரியார்களின் கொள்கைப் பிடிப்பு எவ்வளவு என்பதை அடையாளம் காட்டும் சம்பவம் திருச்சியில் நடந்தது. சங்கராச்சாரி கையால் 'சேவாரத்னா' விருது வாங்கினார் தூயவளனார் கல்லூரி முதல்வர். இதனை அம்பலப்படுத்தி பு.மா.இ.மு. வெளியிட்ட பிரசுரத்தை மாணவர்களும் ஆசிரியர்களும் வரவேற்றனர். ''நானே சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்'' என்று காம்பவுண்டு சுவரில் எழுதி வைத்திருக்கும் வாசகத்தில் 'நான்' என்பது கட்டிடத்தையும், காலிமனையையும் சொத்துக்களையும்தான் குறிக்கிறது என்ற உண்மையை விசுவாசிகளும் விரைவில் புரிந்து கொள்வார்கள்.

பார்ப்பன பயங்கரவாதத்திற்கெதிரான பிரச்சாரத்தை இன்னும் விரிவாகவும் விடாப்பிடியாகவும் தமிழக மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும் என்பதுதான் மாநாட்டுக்கு முந்தைய பிரச்சாரத்திலிருந்து நாங்கள் பெற்றுள்ள அனுபவம்.

மாநாட்டைப் பொறுத்தவரை தமிழ



படிப்பகம்

www.padippakam.com



கத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் பல்வேறு அமைப்புக்களைச் சார்ந்த மற்றும் எந்த அமைப்பையும் சாராத ஏரா ளமானோர் வந்திருந்தனர் என்பது கண்கூடான உண்மை. குறிப்பாக, சிறு பான்மை மதத்தினரும், பர்தா அணிந்த இசுலாமியப் பெண்களும் இம்மா நாட்டில் கலந்து கொண்டதை எமது அமைப்பின் நேர்மைக்கும், எமது அர சியல் முழக்கத்தின் சரியான தன்மைக்கும் கிட்டிய அங்கீகாரமாகவே கருதுகிறோம்.

''ஆர்.எஸ்.எஸ். பாசிசக் கும்பலை 'பார்ப்பனப் பயங்கரவாதிகள்' என்று வரையறுத்து அதனடிப்படையில் நமது செயல்திட்டத்தை வகுத்துக் கொள்ள வேண்டும்'' என்பதை நாமறிந்த வரையில், அனைத்திந்திய அளவில் முதன்முறையாக இந்த மாநாடுதான் முன்வைத்துள்ளது. குறுகிய கால அவகா சத்தில் இத்தனைப் பெரிய மாநாட்டை நடத்தி முடிக்க ஏராளமான தோழர்களும், நண்பர்களும், ஆதரவாளர்களும் மிகக் கடுமையாக உழைத்துள்ளனர். பார்ப் பனப் பாசிசக் கும்பலை ஒழித்துக் கட்டவேண்டும் என்ற உத்வேகம்தான் அனைவரையும் இரவு பகலாக இயக்கியது; இனியும் இயக்கும்.

பார்ப்பன பயங்கரவாதத்தின் சோத னைச்சாலை குஜராத் என்றால், தமிழகம் அதன் கல்லறை! நிரூபித்துக் காட்டுவோம்!!

- சூரியன்

# மோடியைக் காட்டிலும் கொடிய கேடிகள்!

**மா**நாட்டைப் பற்றி தமிழகத்தின் பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் வெளியிட்ட செய்தி என்ன என்பதை வாசகர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். மாநாட்டுக்கு இரு தினங்கள் முன்பே தஞ்சையில் பத்திரிக்கையாளர் சந்திப்பு நடத்தியும் மாநாட்டுக்கு முன் எந்தப் பத்திரிக்கையும் செய்தி வெளியிட வில்லை.

மாநாடு குறித்து ஒரு வரி கூடச் செய்தி வெளியிடாமல் புகைப்படங் களை மட்டும் வெளியிட்டது தினமணி. புகைப்படங்களிலும் ''பாப்பன பயங்கர வாத எதிர்ப்பு மாநாடு'' என்ற தொடரில் 'பார்ப்பன' என்ற சொல் படத்தில் வராமல் 'பயங்கரவாத எதிர்ப்பு மாநாடு' என்று மட்டும் தெரிவது போலத் தணிக்கை செய்திருந்தது.

ஜூனியர் விகடனுக்கு அப்படி யொரு புகைப்படமும் கிடைக்கவில்லை போலும்! ஒரு மாட்டின் படத்தைப் போட்டு ''உசுப்பேற்ற பசுமாட்டு பிரி யாணி'' என்ற தலைப்பில் செய்தி வெளி யிட்டது – ஏதோ மாட்டுக்கறி பிரியாணி தின்பதற்காகத்தான் மாநாடு கூட்டப் பட்டது என்பதைப் போல! அதிலும் அமைப்பின் பெயரைப் போடாமல் ஒரு இருட்டடிப்பு!

குமுதம் என்ற பெயரில் சங்கிலித் தொடர் விபச்சார விடுதி நடத்திவரும் கும்பல், குமுதம் ரிப்போர்ட்டரில் ''மாட்டுக்கறி பிரியாணியுடன் ஒரு மாநாடு'' என்ற தலைப்பில் செய்தி வெளி யிட்டது. செய்தியின் முதல் வரியே ''இது சாதித் துவேசத்தைத் தூண்டும் மாநாடு'' என்பதுதான். அதன்பின் கட்டுரையின் இறுதியில் ''திண்ணியம் சம்பவத்தில் மலம் தின்ன வைக்கப்பட்டதாகக் **கூறப் படும்** ராமசாமியை அறிமுகப்படுத்தி னார்கள்'' என்று ஒரு வரி. உலகறிந்த ஒரு கொடுமையை, போலீசே வழக்குப்பதிவு செய்த ஒரு குற்றத்தை **கூறப்படும்** என்று எழுத வேண்டுமானால் எழுதிய கையின் சாதி வெறியை அறுத்தெடுத்துத்தான் ஆராய வேண்டும்.

குமுதத்தின் தரகு வேலை அதோடு முடியவில்லை. ''குஜராத் மக்களை அழைத்து வரப் பொறுப்பேற்ற பெண்மணி அதற்கான தொகையைக் கறாராகப் பேசி வாங்கிக் கொண்ட பின்னரே மேடையேறி மொழிபெ யர்த்தார்'' என்று ஒரு கேவலமான அவ தூறையும் வெளியிட்டுள்ளது.

குஜராத் மக்களை நாங்கள் நேரடி யாகத் தொடர்பு கொண்டு அழைத்தோம். வாழ்க்கையை இழந்த அன்றாடக் கூலி களான அந்த மக்கள் தம் துன்பத்தையும் பொருட்படுத்தாது தமிழகம் வந்தனர். நமது வேண்டுகோளை ஏற்று மொழி பெயர்ப்பு செய்வதற்காக வந்த ஷெரி ஃபா புதுக்கோட்டையைச் சேர்ந்தவர். அவரும் தன்னுடைய பணிக்காகச் சல்லிக் காசு கூட வாங்கவில்லை.

இவற்றையெல்லாம் சொல்லி மறுப்புச் செய்தி கொடுத்தும் குமுதம் ரிப்போர்ட்டர் வெளியிடவில்லை.

''கவரில் எலும்பை வைத்துக் கொடுத்தால் கடித்துவிட்டு வாலாட்டும் நாய்கள், கவர் கொடுக்காவிட்டால் குரைக்கத்தான் செய்யும். நாய்களுக்குத் தராதரம் தெரியுமா?'' என்று குமுதத் திடம் அனுபவப்பட்டவர்கள் கருதலாம், ஆனால் நாய்களிடம் அனுபவப்பட்டவர் களைக் கேட்டால் அவர்கள் வேறு வழி முறைகளைக் கையாளுமாறு யோசனை சொல்கிறார்கள்.

குஜராத் எங்கோ இருப்பதாக நினைக்க வேண்டாம். இதோ இங்கேதான் இருக்கிறது. மோடியைக் காட்டிலும் கொடிய நயவஞ்சகமான கேடிகள் -- வேறு யார், இந்தப் பத்திரிக் கைகள்தான்!

❑

## எங்கே இருக்கிறது பார்ப்பனச் சாதிவெறி என்போரே....!

09.03.2003 சென்னைப் பதிப்பு தினத்தந்தியில் வெளியான செய்தி இது:

''சென்னை மேற்கு மாம்பலத்தில் உள்ள அயோத்தியா மண்டபத்தில் ஸ்ரீராம் சமாஜின் சார்பில் ராமநவமி உற்சவம் நடந்தது. காஞ்சி மடாதிப திகள் இருவரும் கலந்து கொண்டனர்.

இதில் வேதனை தரும் விஷயம் என்னவென்றால், ஒலி பெருக்கியி லேயே ''பிராமணர்கள் தவிர வேறு யாரும் உள்ளே வரக் கூடாது'' என்று திரும்பத் திரும்பச் சொன்னார்கள். ஆனால் போலீசுக்காரர்களுக்கும், பத்திரிக்கை போட்டோகிராபர்க ளுக்கு மட்டும் விதிவிலக்கு என்றனர்.

''வரக்கூடாது என்றால் போலீ சுக்கும், பத்திரிகை போட்டோகிராப ருக்கும் மட்டும் ஏன் விதிவிலக்கு?'' என்று கேள்வி எழுப்பியிருக்கிறது தினத்தந்தி.

''எங்கே இருக்கிறது பார்ப்பனச் சாதி வெறி'' என்று கேட்போருக்கு இந்தச் செய்தி ஒரு பதில். இப்படிக் காறி முகத்தில் உமிழ்ந்த பிறகும் பத்தி ரிகையாளர்களுக்கு அங்கென்ன வேலை என்பது நம் கேள்வி.

இப்படியொரு செய்தியை வெளி யிட்டிருக்கும் தினத்தந்திதான், நமது மாநாட்டின் பெயரில் 'பார்ப்பன' என்று இருப்பதால் அதைத் தணிக்கை செய்து ''ம.க.இ.க.வின் மாநாடு'' என்று இரண்டங்குலத்திற்குச் செய்தி வெளியிட்டது.

அதே நேரத்தில் குடந்தை பிரா மணர் சங்கம் ம.க.இ.க.–விற்கு எதி ராகக் கொடுத்த கண்டன அறிக் கையில் ''பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாட்டை கண்டிப்பதாக'' அவாளே எழுதியிருந்ததால் 'நம்மா ளுக்கு' அதை வெளியிடுவதில் தயக் கமில்லை.

ஆர்.எஸ்.எஸ்ஸை ஊட்டி வளர்ப் பவர்கள் யார் என்று இன்னுமா விளங் கவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# குட்டக் குட்டக் குனிந்து கொண்டிருந்தால்...

வழக்குரைஞர் பி. திருமலைராசன்



"நீதித்துறை இந்துத்துவமயமானால்..." எனும் தலைப்பில் உரையாற்றினார் வழக்குரைஞர் தோழர் பி. திருமலைராசன் (செயலர், கீழமை நீதிமன்றங்களின் வழக்குரைஞர் சங்கக் கூட்டமைப்பு, தமிழ்நாடு):

கோவையைச் சேர்ந்த போக்குவரத்துக் காவலர் செல்வராசுவின் படுகொலை, மதப் பிரச்சினையின் காரணமாக நடந்ததல்ல. கோவையின் ஒப்பணக்கார வீதியைச் சேர்ந்த வியாபாரிகளிடமிருந்து மாமூல் வசூலிக்கும் உரிமை, கட்டப் பஞ்சாயத்து செய்யும் உரிமை, அல்–உம்மாவிற்கா, இல்லை, பி–1 போலீசு நிலையத்திற்கா என்ற பிரச்சினைதான் பெரிதாகி செல்வராசு கொலையில் முடிந்தது. அல்–உம்மாவிற்கும், போலீசுக்கும் இடையே நடந்த கட்டப் பஞ்சாயத்துத் தகராறில் விழுந்த கொலைக்கு மதச்சாயம் பூசியது ஆர்.எஸ்.எஸ்.

பாலக்காட்டில் இருந்து ஐநூறுக்கும் அதிகமான ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள் கோவைக்குள் கொண்டு வரப்பட்டு, நடத்தப்பட்ட கலவரத்தில் 19 முசுலீம் இளைஞர்கள் நடுத்தெருவில் கொல்லப்பட்டனர். மும்பய் கலவரத்தைப் போலவே, கோவை கலவரத்திலும் போலீசார் முசுலீம்களுக்கு எதிராக இந்து மதவெறியர்களோடு கைகோர்த்துக் கொண்டனர். செல்வராசு கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட முசுலீம்களுக்குச் சிறப்பு நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. ஆனால், கோவை கலவரத்திற்காக, 19 முசுலீம் இளைஞர்களைக் கொன்றதற்காக எந்தவொரு இந்து மதவெறியனும் தண்டிக்கப்படவில்லை.

மேலவளவு பஞ்சாயத்துத் தலைவராக இருந்த முருகேசன் படுகொலை வழக்கில் 41 பேர் மீது குற்றம்சுமத்தப்பட்டது. இக்குற்றவாளிகளுள் 7 பேருக்குத் தான் இந்தியத் தண்டனைச் சட்டம் 302 - பிரிவின்படி ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. மீதிப்பேர், நிரபராதிகளாகக் கருதப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். இக்குற்றவாளிகளை வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழும் தண்டிக்க அதிகாரமிருந்தும் கூட, நீதிமன்றம், மேல் சாதி வெறியர்களுக்கு எதிராகத் தனது அதிகாரத்தைப் பயன்படுத்த மறுத்து விட்டது.

விசாரணையும், குறுக்கு விசாரணையும் முடிந்து தீர்ப்பு வர வேண்டிய நேரத்தில், மீண்டும் சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். அது, சாட்சிகளை பிறழ் சாட்சிகளாக மாற்றும் முயற்சி எனக் கூறி நான் எனது எதிர்ப்பைப் பதிவு செய்தேன். நான் எதிர்பார்த்தபடியே, இவ்விசாரணையின் பொழுது வழக்கின் முக்கிய சாட்சிகளுள் ஒருவரான கிருஷ்ணன் பிறழ் சாட்சியாக மாறினார்.

அந்த வழக்கு நடந்து கொண்டிருந்த போதே வட்டாட்சியர் இக்கொலை பற்றி ஓர் அறிக்கையை அரசுக்கு அனுப்பியிருந்தார். அந்த அறிக்கையில் யாரோ ஒரு ஏழு பேரைக் குற்றவாளிகளாகக் காட்டியிருந்தார். மாவட்ட ஆட்சியாளரோ, உள்துறைச் செயலரோ உத்தரவு போடாமல், வட்டாட்சியர் தன்னிச்சையாக ஒரு அறிக்கையைத் தயார் செய்து அனுப்பியது சட்டப்படி குற்றமாகும். வழக்கைச் சீர்குலைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, பொய்யான தகவல்களைக் கூறி இந்த அறிக்கை தயார் செய்யப்பட்டது. வன்கொடுமைத் தடுப்புச் சட்டப் பிரிவு 3 பி–யின் கீழ், பொய்யான தகவல்களை அளித்த குற்றத்திற்காக, சம்பந்தப்பட்ட வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர், போலீசு ஆய்வாளர், போலீசு இயக்குனர் ஆகியோரைத் தண்டித்திருக்க முடியும். ஆனால், அவர்கள் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படவில்லை.

இது எல்லாவற்றுக்கும் மேலாக, போலீசால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை சந்தேகத்திற்குரியது எனக் கூறி, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட மேல்சாதிவெறி பிடித்த குற்றவாளிகளைப் பிணையில் அனுப்பி விட்டது, சென்னை உயர்நீதி மன்றம். தமிழக அரசு இதை எதிர்த்து, இது நாள் வரையிலும் வழக்கு தொடுக்கவில்லை.

நாடாளுமன்றத் தாக்குதல் வழக்கில் செல்ஃபோன் உரையாடல்களைத் தக்க ஆதாரம் இன்றி, சாட்சியமாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்ற தில்லி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பையும் மீறி, செல்ஃபோன் உரையாடலை மட்டுமே முக்கிய ஆதாரமாகக் காட்டி, குற்றம் சாட்டப்பட்டுள்ள முசுலீம்களைத் தண்டித்து இருக்கிறது, தில்லி குற்றவியல் நீதிமன்றம். இந்த வழக்கில் தண்டிக்கப்பட்ட அனைவரும் நாடாளுமன்றத் தாக்குதலில் நேரிடையாக ஈடுபடாதவர்கள். ஆனாலும், இந்திய சாட்சியச் சட்டப் பிரிவு 10 பயன்படுத்தப்பட்டு, சதி ஆலோசனையில் பங்கு பெற்றவர்கள் என்ற அடிப்படையில் தண்டிக்கப்பட்டனர்.

காசுமீர் முசுலீம்களைத் தண்டிக்கப் பயன்படுத்தப்பட்ட இந்தச் சட்டப் பிரிவை, மேலவளவுப் படுகொலை வழக்கில் நீதிமன்றம் பயன்படுத்தவில்லை. அப்படிப் பயன்படுத்தியிருந்தால், குற்றம் சுமத்தப்பட்ட 41 பேரையும் தண்டித்திருக்க முடியும்.

நீதி மன்றங்களின் இந்த மக்கள் விரோதத் தன்மைகளை, தீர்ப்புகளைச் சுட்டிக் காட்டினால், நீதிபதிகள் நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தைக் காட்டிப் பய்முறுத்துகிறார்கள். எனவே, இந்த நீதித்துறையின் அடக்கு முறைகளுக்கு எதிராகப் போராடத் தயாராக இருப்பதைத் தவிர நம்முன் வேறு வழியில்லை. குட்டக் குட்டக் குனிந்து கொண்டிருந்தால், அவர்கள் குட்டிக் கொண்டேயிருப்பார்கள். ❑

**காசுமீர் முசுலீம்களைத் தண்டிக்கப் பயன் படுத்தப்பட்ட சட்டப் பிரிவை, மேலவளவுப் படுகொலை வழக்கில் நீதிமன்றம் பயன்படுத்தி இருந்தால், குற்றம் சுமத்தப்பட்ட 41 பேரையும் தண்டித்து இருக்க முடியும்.**

www.padippakam.com

## திண்ணியம்

## மனுதர்மக் கொடுங்கோன்மையின் நீட்சி :

# இந்து மதமல்ல, இந்து 'மலம்!

எங்கள் ஊரில் கள்ளர் சாதியினர் பெரும்பான்மையாக வசிக்கின்றனர். 25 தலித் குடும்பங்கள் வசிக்கின்றன. அவற்றில் வெட்டியான் வேலை செய்யும் நான்கு குடும்பங்களில் நானும் ஒருவன்.

சென்ற கலைஞர் ஆட்சியின் பொழுது பஞ்சாயத்துத் தலைவராக இருந்த ராஜலட்சுமி சுப்பிரமணியனிடம் தொகுப்பு வீடு வேண்டுமென்று கோரி 2000 ரூபாய் பணம் கொடுத்தோம். பணம் கொடுத்து மூன்றாண்டுகளாகியும் அவர்கள் வீடும் கட்டித் தரவில்லை; கொடுத்த பணத்தைத் திருப்பிக் கொடுக்கவும் இல்லை. அரசிடமிருந்து வீடுகள் ஒதுக்கப்பட்டபொழுது, ராஜலட்சுமியின் கணவர் சுப்பிரமணியன் ஒரு வீட்டிற்கு ரூ. 8000/- எனச் சட்ட விரோதமாக விலை நிர்ணயம் செய்து வசூலித்தார். எங்களிடம் அவ்வளவு பணமில்லாததால், ஏற்கெனவே நாங்கள் கொடுத்த பண்த்தையேனும் திருப்பிக் கொடுக்க வேண்டினோம். நாங்கள் எவ்வளவோ கெஞ்சி மன்றாடியும் மூன்றாண்டுகளுக்கும் மேலாக அப்பணத்தைத் தராமல் அவர்கள் இழுத்தடித்து வந்தனர்.

அமைச்சர் நேருவிடம் மனுக் கொடுத்துப் பார்த்தோம். அதற்கும் பலனில்லை. ஒருமுறை, நான் சுப்பிரமணியனிடம் சென்று, ''ஐயா, உங்கள் காலில் கும்பிட்டு வேண்டுமானால் விழுகிறேன், எங்கள் பணத்தைக் கொடுத்து விடுங்கள்'' எனக் காலில் கும்பிட்டு விழுந்தேன். பலமுறை இழுத்தடித்தபின், இறுதியாக 'உன்னால முடிஞ்சதைப் பார்த்துக்கோ' என்றும் சொல்லி விட்டார்.

இச்சூழலில் எங்கள் ஊர்க் கோயில் திருவிழாவும் வந்தது. பறையர் இனத்தைச் சேர்ந்த ஒருவரும், கள்ளர் இனத்தைச் சேர்ந்த ஒருவரும் காப்புக் கட்டிக் கொள்வது வழக்கம். சீட்டுக் குலுக்கிப் போடப்பட்டதில், என் பெயர் வந்தது. நான் கள்ளர் சாதிப் பெரிய மனிதர்களிடம் சென்று, ''நாங்க குடுத்த பணத்த ராஜலட்சுமி சுப்பிரமணியன் திருப்பிக் குடுக்கலன்னா காப்புக் கட்ட முடியாது. அந்த பணத்த கேட்டு வாங்கிக் குடுங்க'' என்றேன். திருவிழா முடிந்த பின்னர் வரவு-செலவுக் கட்டத்தில் எங்கள் பிரச்சினையைப் பேசித் தீர்க்கலாம் எனச் சமாதானப்படுத்தினர். பொறுமையாகக் காத்துக் கொண்டிருந்தோம். ஆனால், திருவிழா முடிந்து ஒரு வாரமாகியும் எவரும் வாய் திறக்கவில்லை.

வேறு வழியின்றி மறுபடியும் மே - 20, 2002 அன்று எங்கள் ஊரின் கள்ளர் சாதியினரிடம் சென்று முறையிட்டேன். ''ஐயா, உங்களுக்கு அடிமைத் தொழில் செஞ்சு வாழற எங்ககிட்டயே பணத்த வாங்கிட்டு திருப்பித் தர மாட்டேங்கறீங்களே, அந்தப் பணத்த திருப்பித் தர்ற வரைக்கும் நாங்க உங்க வீட்டு நல்லது கெட்டதுகளுக்கு வெட்டியான் வேல செய்ய மாட்டோமுங்க'' என்று தெரிவித்தேன். தற்போதைய பஞ்சாயத்துத் தலைவரான வேதவல்லி காமராஜன் 'அடுத்த திருவிழாவுக்குப் பெறவு பேசித் தீக்கலாம்' என்றார். ''ஐயா, ஏற்கெனவே ஒரு திருவிழா முடிஞ்சிருச்சு. இப்ப அடுத்த திருவிழாவும் முடிஞ்சிரும். எங்கப் பிரச்சினை மட்டும் தீரவே போறதில்லை. அதுனால, இனி நாங்க நாலு வெட்டியான் குடும்பமும் ஒங்களுக்கு வெட்டியான் வேல செய்ய மாட்டோம்'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினேன்.

நேரே வீட்டிற்குச் சென்று என் தப்பை(பறையை) எடுத்துக் கொண்டு, கள்ளர் தெருக்களுக்குப் போனேன். ராஜலட்சுமி சுப்பிரமணியனிடம் நாங்கள் கொடுத்த பணத்தை வாங்கித் தரக் கோரியும், அதுவரை நாங்கள் அடிமைத் தொழில் செய்ய முடியாதெனவும் தப்படித்துக் கொண்டே அறிவித்தேன். என்னுடைய மைத்துனர் இராமசாமியும், பெரியம்மா பையன் முருகேசனும் உடன் வந்தார்கள். யாரும் எங்களை வழி மறித்து, 'ஏன் தண்டோரா போடுகிறாய்' என்றோ, 'நாங்க கேட்டு வாங்கித் தர்றோம்' என்றோ கூறவில்லை. காலை 11 மணியளவில் நாங்கள் அனைத்துத் தெருவிலும் தப்படித்து விட்டு வீட்டிற்குத் திரும்பிச் சென்று விட்டோம்.

முன்னாள் உபதலைவர் சேட்டு என்பவரின் முன்னிலையில்தான் நாங்கள் ராஜலட்சுமியிடம் பணம் கொடுத்தோம். அன்று மாலை, சேட்டுக்கு இரண்டு பாக்கெட் சாராயம் வாங்கிக் கொடுத்து, பணம் கொடுத்த போது தான் அங்கில்லையென்று சொல்லுமாறு சொல்லிக் கொடுத்திருக்கின்றனர். அந்த சேட்டு எங்களிடம் வந்து காலையில் தண்டோரா போட்டதற்குக் கூட்டம் கூட்டியிருப்பதாகவும், என்னை அழைத்து வரச் சொன்னதாகவும் கூறினான். நானும் அவனோடு சென்றேன்.

பஞ்சாயத்து அலுவலகத்துக்கு முன்பாக நிழற்குடையில் ஆசிரியர் சுப்பிரமணியன், நாயுடு இனத்தைச் சேர்ந்த அசோக், இராசேந்திரன் ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

சுப்பிரமணியன் என்னை அருகில் வருமாறு கூப்பிட்டார். நானும் சென்றேன். ''யார்ரா ஒன்னய தண்டோரா போடச் சொன்னது'' எனக் கேட்டார். ''யாரும் சொல்லலீங்க. எங்களுக்கு நாயம் கிடைக்கல. அதுனால, நானாத்தான் தண்டோரா போட்டேன்'' என்றேன்.

''பறப்பயலுக்கு இம்புட்டுத் திமிரா? என்னய எதுத்துக்கிட்டு நீ இந்த ஊர்ல வாழ்ந்துருவியா?'' என்றபடியே, தன் கழுத்திலிருந்த துண்டை எடுத்து, என் குரல்வளையைச் சுற்றி இறுக்கத் தொடங்கினார். என்னைக் கீழே தள்ளி செருப்புக் காலோடு என் குரல் வளையில் மிதிக்கத் தொடங்கினார்.

என் மனைவி கைக்குழந்தையை வைத்துக் கொண்டு என்னை அடிக்க வேண்டாமென்று என் மீது விழுந்து கெஞ்சினாள். இதனால், என் மனைவியும் குழந்தையும் கூட மிதிபட்டார்கள். இதனை சுமார் 250-க்கும் மேற்பட்டவர்கள் நின்று வேடிக்கை பார்த்துக்


படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருந்தனர். அவ்வாறு மிதிக்கப் பட்டதன் விளைவாக எனக்குச் சிறுநீரும் மலமும் வெளியேறி விட்டன.

''செருப்பால அடிச்சாதாண்டா பறப்ப யலுக்கெல்லாம் புத்தி வரும். இனிமே எங்கள எதுத்துக்கிட்டு நீ எதுவும் செய்ய முடியாது. 25 குடும்பம் இருந்துகிட்டு நீ எங்கள எதுத்து தண்டோராவா போடுற?'' என்றபடி மீண்டும் மீண்டும் அடித்தார். சுப்பிரமணியனின் சம்பந்தி தலையிட்டு, ''இதற்கு மேல் அடித்தால் இவன் செத்துப் போயிருவான், பண்ண தப்புக்கு கால்ல கும்புட்டு வுழுந்து எந்திரிச்சுப் போ'' என்றார். சுப்பிரமணியன் காலில் கும்பிட்டு விழுந்தேன். பிறகு நானும் என் மனைவியும் அங்கிருந்து அகன்றோம்.

வீட்டுக்குச் செல்லும் வழியில் மறுபடியும் இராஜலட்சுமியின் மகன் பாபுவும், முன்னாள் தலைவர் சோமசுந்தரமும் என்னை மறித்தனர். என்னோடு காலையில் வந்த இராமசாமியையும், முருகேசனையும் கூட்டிக் கொண்டு, மன்னிப்புக் கேட்டு மறுபடியும் ஊர் முழுக்கத் தண்டோரா போட வேண்டுமென்றனர்.

மறுநாள் காலை 12 மணிவரை நான் ஊரில்தான் இருந்தேன். அதன் பிறகு என் மாமனாரின் ஊர்த் திருவிழாவுக்காக நானும் என் மனைவியும் கிளம்பிச் சென்றோம். உள்ளூர பயந்து போயிருந்த இராமசாமியும், முருகேசனும் ஆசிரியர் சுப்பிரமணியனிடம் மன்னிப்பு கேட்டு விடலாம், இரண்டு அடி கூட வாங்கிக் கொள்ளலாம் என்ற முடிவில் அவரைச் சந்திக்கச் சென்றிருக்கின்றனர்.

சுப்பிரமணியனுடைய பழைய வீடு மெயின்ரோட்டில் உள்ளது. சுப்பிரமணியனுடைய மனைவி ராஜலட்சுமியும், ஐந்தாறு சொந்தக்காரர்களும் அங்கே இருந்திருக்கின்றனர். இவர்கள் உள்ளே சென்று மன்னிப்புக் கேட்டிருக்கின்றனர். தரையில் அமரச் சொல்லி என்னிடம் கேட்டதைப் போன்றே யார் தூண்டியதெனக் கேட்டிருக்கின்றனர். இவர்கள் ''யார் சொல்லியும் போகலீங்க. அவன்தான் போனான், நாங்க கூடப் போனோம்'' என்று உண்மையை மீண்டும் மீண்டும் சொல்லியிருக்கின்றனர். உடனே, பழுக்கக் காய்ச்சிய இரும்பைக் கொண்டு இராமசாமிக்குத் தொடையிலும், முருகேசனுக்குக் கழுத்திலும் சூடு போட்டிருக்கின்றனர், சுப்பிரமணியனுடைய சித்தப்பா மகன் குடியரசு என்பவர் முருகேசனை எட்டி உதைத்துத் தரையில் மோதியதில், முருகேசன் பல் தெறித்துப் போனது. முருகேசனுக்கு உடல் முழுக்க ஐந்தாறு இடங்களில் சூடு வைத்திருக்கின்றனர். இவையனைத்தையும் வீட்டுக்கு வெளியே மக்கள் கூடி நின்று வேடிக்கை பார்த்திருக்கின்றனர்.

பிறகு, ஒரு கிழிந்த தப்பை வாங்கிக் கொடுத்து, மன்னிப்புக் கேட்டு ஊர் முழுக்க அடித்துச் செல்லச் சொல்லியிருக்கின்றார். உடனே, சுப்பிரமணியன், ''நேத்திக்கு நல்லா கொட்டினீங்களாமே, இன்னிக்கு ஏண்டா சத்தமே வரல. நீங்க இப்படியெல்லாம் சொன்னா திருந்த மாட்டீங்க. எடுத்துக்கிட்டு வாங்கடா பீயை'' என்று அவர் கத்த, அவருடைய சொந்தக்கார்ரர்கள் ஒரு இரும்பு முறத்தில் மலத்தைக் கொண்டு வந்து வைத்திருக்கின்றனர். இராமசாமி வாயில் முருகேசனும், முருகேசன் வாயில் இராமசாமியும் மலத்தை ஊட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கின்றனர்.

''என்ன சார், இத்தனைப் பேர் சேந்துகிட்டு அடிச்சீங்க. மிதிச்சீங்க. சூடு போட்டீங்க. இப்ப பீயத் திங்கச் சொல்றீங்களே'' என்று கேட்டிருக்கின்றனர். மறுபடியும் இருவரது கைகளிலும் சூடு வைக்கவே, இதற்கு மேலும் தாமதித்தால் சூடு வைத்தே கொன்று போடுவார்கள் என்றெண்ணிய இருவரும் வேறு வழியின்றி.உலகில் அடிமைக் காலந்தொட்டு இதுவரையில் எங்கும் நடைபெறாத கொடுமையாக இராமசாமி வாயில் முருகேசனும், முருகேசன் வாயில் இராமசாமியும் மலத்தை அள்ளி வைத்திருக்கின்றனர்.

''பறப்பயலுகளுக்கு இம்புட்டுத் திமிரா. கள்ளன எதுத்துக்கிட்டு இனி நீங்க எதுவும் செய்ய முடியாது. நாளைக்கு காலையில எங்ககிட்ட வந்தாத்தான் ஒங்களுக்குச் சோறு. கால காலத்திற்கும் பறப் பயலுக்கு இந்தப் புத்தி இருக்கணும்'' என்று சொல்லியிருக்கிறார். அந்த கிழிந்த தப்பிற்கு தலைக்கு 75 ரூபாய் பணமும் கேட்டிருக்கின்றனர். இருவரும் தங்களிடம் இருந்த 100 ரூபாயைக் கொடுத்துவிட்டு. சுப்பிரமணியன் காலில் விழுந்து கும்பிட்டு வீடு திரும்பியிருக்கின்றனர். இதைக் கேள்விப்பட்ட நானும் ஊருக்குத் திரும்பினேன்.

காயங்களுக்கு நாட்டு மருந்தைப் போட்டுக் கொண்டு கிட்டத்தட்ட இருபது நாட்களுக்கு மேல் வெளியுலகுக்குத் தெரிவிக்காமலே இருந்தோம். ஒன்றரை வருடங்களுக்கு முன்னால் எங்கள் பகுதியில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பைத் துவக்கினோம். நானும் அவ்வமைப்பில் உறுப்பினராக இருக்கிறேன். எங்கள் ஊரின் மாணவர் ஒருவர் மூலமாகக் கேள்விப்பட்டு விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பினரும், மனித உரிமை அமைப்புகளும் எங்களைத் தொடர்பு கொண்டனர். அவர்கள் அளித்த தைரியத்தின் விளைவாக சுப்பிரமணியன் மீது வழக்கு தொடர்ந்தோம்.

அவனை மாவட்ட கலெக்டர் குண்டர் சட்டத்தில் போட்டார். அவன் மீது ஏற்கெனவே ஆறு வழக்குகள் உள்ளன. ஆனால், அரசாங்கம் அவன் மீது குண்டர் சட்டம் அமலாக்கப்பட்டதை ஏற்றுக் கொள்ளவில்லை. அதன் விளைவாக அவன் வெளியில் வந்தவுடன் கள்ளர் சாதியினர் அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டு எங்களுக்கு வேலையின்றி செய்து விட்டனர். நாங்கள் இன்று வாழ வழியின்றி வறுமையில் வாடுகிறோம்.

தாழ்த்தப்பட்ட மக்கள் ஒன்றுபட வேண்டும். நாம் சாகத்தான் போகிறோம், மீண்டும் பிறக்கப் போவதில்லை. எனவே, எத்தகைய வன்கொடுமை நடந்தாலும், உடனடியாக அதனை வெளிச்சத்துக்குக் கொண்டு வர வேண்டும்'' □


வன்கொடுமைக்கெதிராக....

**''யார்ரா ஒன்னய தண்டோரா போடச் சொன்னது'' எனக் கேட்டார் சுப்பிரமணியன்.**

**''யாரும் சொல்லலீங்க. எங்களுக்கு நாயம் கிடைக்கல. அதுனால, நானாத்தான் தண்டோரா போட்டேன்''**

**திண்ணியம் கருப்பையா பேசுகிறார்**



படிப்பகம்

www.padippakam.com

## ஐயா வைகுந்தர் வழிபாடு:

# "கருவறைக்குள் பார்ப்பான் எதற்கு? நாங்களே தமிழில் வழிபடுகிறோம்"

**திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் கீழிருந்த குமரி மாவட்டத்தில் மனுதர்ம விதிகள் ஆட்சி செய்த காலத்தில், பார்ப்பனப் பிடியிலிருந்து வெளியேறிசாணார் (நாடார்) சாதியினருக்கான புதிய வழிபாட்டு முறையை ஐயா வைகுந்தர் என்பார் உருவாக்கினார். இன்றளவும் அவ்வழிபாட்டினர் குமரியில் வாழ்ந்து வருகிறார்கள். ஐயா வைகுந்தர் வழிபாடு குறித்தும், அக்காலத்தின் சாதியக் கொடுமைகள் குறித்தும் மாநாட்டில் திரு. சுயம்பு (வயது 50) எடுத்துரைத்தார்.**

"ஐயா வைகுந்தர் வாழ்ந்த காலத்தில் சாதிக்கொடுமை தலைவிரித்தாடியது. அரசன் பதினெட்டு வகைச் சாதிகளாக மக்களைப் பிரித்து வைத்து ஆட்சி செய்து கொண்டிருந்தான். அவற்றில் நாடார் சாதியினரைப் பதினெட்டாம் சாதியாக வைத்துத் துன்புறுத்திக் கொண்டிருந்தான்.

அம்மக்கள் கோவில் தெருக்களில் செல்வதற்கும், உயர்சாதியினரின் தெருக்களில் செல்லவும், குளம், கிணறுகளில் தண்ணீர் எடுக்கவும், குளிக்கவும், காற்றோட்டமுள்ள வீடுகளில் வசிக்கவும் கூட தடை விதிக்கப்பட்டிருந்தது. நாங்கள் திருமணங்களில் தாலி கட்டுவதற்குக் கூட வரி விதிக்கப்பட்டது. பசுக்கள், மண்வெட்டிகள், அரிவாள்களுக்கும் கூட வரி விதிக்கப்பட்டது. பனைத் தொழில் செய்பவர்கள் பனை மரத்திற்கும் கூட வரி செலுத்த வேண்டும். வரி செலுத்த இயலாதவர்கள் ஊழியம் என்ற பெயரில் கொத்தடிமைகளாகக் கூலியின்றி வேலைசெய்ய வேண்டும். சாணார் மக்கள் தீண்டத்தகாதவர்களென்றும் தள்ளி வைக்கப்பட்டனர். பெண்கள் மேலாடை அணிவதற்கும், தெய்வத்தை வழிபடுவதற்கும் கூடத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கூட "திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் நிலவும் சாதியக் கொடுமைகளைப் போன்று உலகில் வேறெங்கும் கண்டதில்லை" என எழுதியுள்ளனர். இக்கொடுமைகளைக் கண்டதனால் தான் விவேகானந்தர் குமரிக்கு வந்த பொழுது, "திருவிதாங்கூர் சமஸ்தானம் பைத்தியக்காரர்கள் வாழும் இடம்" எனக் குறிப்பிட்டார்.

இவற்றால் வெகுண்ட ஐயா வைகுந்தர் கொடுமைகளுக்கு ஆளான மக்களிடம், "மார்பில் ஆடையணியுங்கள். முட்டுக்குக் கீழ் துணி கட்டுங்கள். தங்கத்தில் தாலி கட்டுங்கள். இடுப்பில் குடம் வைத்துத் தண்ணீர் எடுங்கள். கோவில்களை நீங்களே கட்டுங்கள். நீங்களே கருவறையில் சென்று பூசை செய்யுங்கள், வணங்குங்கள்" என்றார். இதனைத் தொடர்ந்து மேலாடை அணிந்ததற்காகக் கர்ப்பிணிப் பெண்ணை ஏரில் கட்டி வைத்து அடித்துக் கொன்றனர். சிலரைச் சுடுமணலில் நாள் முழுவதும் நிற்க வைத்தார்கள். மேலாடை அணிந்த பெண்களின் மார்புகளை வெட்டினார்கள்.

இவ்வகையில், மன்னரையே எதிர்த்து, மக்களை ஒன்று சேர்த்து மன்னரிட்ட சட்டதிட்டங்களையெல்லாம் மிதித்து மன்னராட்சியை ஒழித்து மக்களாட்சி ஏற்பட வழிவகுத்துக் கொடுத்தார் ஐயா வைகுந்தர். அவர் மக்களோடு இணைந்து வாழ்ந்தார். மன்னரின் படைகள் அவரைக் கைது செய்ய முற்பட்ட பொழுது, மக்களனைவரும் மன்னரின் படைகளை எதிர்த்து வீரப் போரிட்டனர்.

172 ஆண்டுகளுக்கு முன்பே, கருவறையில் சென்று வழிபடும் நிலையை ஐயா வைகுந்தர் ஏற்படுத்தினார். எங்கள் வீட்டுச் சடங்குகளில் பார்ப்பனர்களை அனுமதியாமல் நாங்களே நடத்திக் கொள்கிறோம். தமிழிலேயே வழிபாடு செய்கிறோம். இன்றளவும் ஐயா வைகுந்தரை மக்கள் தெய்வமாகக் கருதி வழிபட்டு வருகிறார்கள்." □







படிப்பகம்

www.padippakam.com

# மனுதருமக் கொடுங்கோன்மை எங்கே என்போரே - இதோ இங்கே...

# "மீசைக்கு வரி, மார்புக்கு வரி, தாலிக்கு வரி..."

***திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் கீழிருந்த குமரி மாவட்டத்தில் அன்று நிலவிய சாதிக் கொடுமைகளையும், சாணார் சாதியினர் (நாடார்கள்) எவ்வாறு ஒடுக்கப்பட்டனர் என்பதையும், இன்று தங்களுடைய ஒடுக்கப்பட்ட வரலாற்றை மறந்து ஆதிக்கச் சாதியினராக சாதியக் கொடுமைகளை நிகழ்த்தும் பிற்படுத்தப்பட்ட சாதியினர் குறித்தும் வழக்குரைஞர் இலஜபதிராய் எடுத்துரைத்தார்:***

''இராமன் சீதையைக் கரம் பிடித்த கதையையும், மகாபாரதக் கட்டுக்கதைகளையும், பகவத்கீதையின் பிதற்றல்களையும் அறிந்திருக்கும் நம் மக்கள், முத்துக்குட்டி என்றழைக்கப்பட்ட சமூகப் போராளியின் போராட்டங்கள் குறித்தோ அல்லது நமது சகோதரிகள் மேலாடை (மாராப்பு) அணியக் கூட அனுமதிக்கப்படாத அவலங்கள் குறித்தோ அறியாமலிருப்பது வருந்தத்தக்க ஒன்றாகும்.

1754–ல் திருதாங்கூர் சமஸ்தானத்தின் இராணுவச் செலவுகளுக்காக, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மட்டும் 'தலைஇறை' எனும் வரி விதிக்கப்பட்டது. இத்தலைஇறையைக் கட்ட முடியாமல் பலரும் வாழ வழி தேடி திருநெல்வேலிக்குத் தப்பியோடினர். 1807–ல் மட்டும் ஈழவர், நாடார், சாம்பவர் சாதி மக்களிடம் 'தலை இறை' யாக வசூலிக்கப்பட்ட தொகை 88,000 ரூபாய். இவ்வரி வசூலிப்பு, ஆடவரின் மீசைக்கு வரி, வளைந்த கைப்பிடியுள்ள குடைக்கு வரி, பெண்களின் மார்புக்கு வரி எனப் பல்வேறு வகைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது.

இப்பார்ப்பனியக் கொடுங்கோன்மையை எதிர்த்த முத்துக் குட்டி என்பார், தமது 'அகிலத் திரட்டு' எனும் நூலில் அன்று நடைமுறையிலிருந்த பல்வேறு வரிகளைப் பதிவு செய்கிறார். ''தாலிக்கு ஆயம்; சருகு முதல் ஆயம்; கம்பு தடிக்கு ஆயம்; தாளமேறும் சான்றோருக்கு ஆயம்; அரிவாள் தூர்வெட்டிக்கு ஆயம்; வட்டிக்கு ஆயம்; வலங்கை சென்றோர் கருப்புக் கட்டிக்கும் ஆயம் வைத்தானே கருநீசன்'' என்று குறிப்பிடுகிறார்.

மேற்கண்ட சாதிக்கொடுமைகள் நடைபெற்ற பொழுது, இந்துமத மடாதிபதிகளோ சைவ மடாதிபதிகளோ, சங்கராச்சாரிகளோ அச்சாதிக் கொடுமைகளை எதிர்த்துக் குரல் கொடுக்கவில்லை.

1937–வரையிலும் கூட ஒடுக்கப்பட்ட சாதியினர் ''தமது வீட்டுக் கதவுகளை'' குறிப்பிட்ட உயரத்துக்கு மேல் வைக்கக்கூடாது; அவர்கள் பொன் நகைகளையோ, வெள்ளி நகைகளையோ அணியக் கூடாது; அவர்கள் வீட்டில் செம்புப் பாத்திரங்களை உபயோகிக்கக் கூடாது; வீடுகளில் பசுமாடுகள் வளர்க்கக் கூடாது; நிலம் வைத்திருக்கக் கூடாது'' போன்ற கடுமையான விதிகள் அமுலாக்கப்பட்டன. இன்றும் நமது சட்டங்கள் மூலமாகவும், நீதிமன்றங்கள் மூலமாகவும் மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ நடைமுறைப்படுத்தப்பட்டுத்தான் வருகின்றன.

ஒடுக்கப்பட்ட சாதியினர் செல்லப் பெயர்களைச் சூட்டிக் கொள்ள அனுமதி மறுக்கப்பட்டனர்; 'சோறு' என்பதற்குப் பதிலாக 'கஞ்சி' என்றே சொல்ல வேண்டுமென்றும், தமது வீடுகளை 'குடிசை' என்றே அழைக்க வேண்டுமென்றும் இழிவுபடுத்தப்பட்டனர். குமரி மாவட்டத்தின் ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த பெண்கள் மேலாடை அணிய அனுமதி மறுக்கப்பட்டனர். ''அந்நடைமுறை நீடித்திருந்தால் நல்லதுதான், இன்று குமரி சுற்றுலா மையமாக மாறியிருக்கும்'' என்று உயர்சாதி இளைஞனொருவன் வக்கிரமாகக் குறிப்பிடுகின்றான்,



**''புதிய கலாச்சாரம்'' உரிமையாளர் மற்றும் இதர விவரங்கள்**
**படிவம் IV (விதி 8-இன் படி)**

1. வெளியிடும் இடம் : 3, 4வது தெரு, செகந்நாதபுரம், சேத்துப்பட்டு சென்னை -600 031.
2. வெளியிடும் காலம் : மாதம் ஒருமுறை
3. அச்சிடுபவர் பெயர் : இரா.சண்முகராசு
   இந்தியக் குடிமகனா? : ஆம்
   முகவரி : எழில் பிரிண்ட்ஸ், 110, 2-ஆம் தளம், மாநகராட்சி வணிக வளாகம் 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.
4. உரிமையாளர் மற்றும் வெளியிடுபவர் பெயர் : வி. வல்லபேசன்
   இந்தியக் குடிமகனா? : ஆம்
   முகவரி : 3, 4வது தெரு, செகந்நாதபுரம், சேத்துப்பட்டு சென்னை -600 031.
5. ஆசிரியர் பெயர் : வி. வல்லபேசன்
   இந்தியக் குடிமகனா? : ஆம்
   முகவரி : 3, 4வது தெரு, செகந்நாதபுரம், சேத்துப்பட்டு சென்னை -600 031.

வி. வல்லபேசனாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.

1.3.2003

(ஒ-ம்) வி. வல்லபேசன்
வெளியிடுபவர்.

1993–ல் அப்பாபாலு - இங்க்ளே எனும் வழக்கின் தீர்ப்பில் நீதிபதி கே.ராமசாமி என்பவர் வேதனையோடு குறிப்பிட்டதைப் போல, 'இன்னும் இந்த நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களைப் பாதுகாப்பதற்காக வன்கொடுமைச் சட்டம் உள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால் இந்த அரசியலமைப்புச் சட்டம் பெயரளவில்தான் உள்ளது.'

''பசு புனிதமானதென்றும், இந்துக்கள் பசுமாமிசம் உண்ண மாட்டார்கள்'' என்றும் நாடு முழுவதும் பிரச்சாரம் செய்கிறார்கள். ஆனால், குமரி மாவட்டத்திலுள்ள 60,000 பார்ப்பனர்களைத் தவிர்த்து மற்ற அனைவரும் பசுமாமிசம் உண்பவர்கள்தான். அம்மக்களை இன்று ஆர்.எஸ்.எஸ் காரர்கள் தந்திரமாகத் தங்கள் பின்னால் அணிதிரட்டி வருகிறார்கள். ஆணாதிக்கக் கொடுங்கோலன் ராமனுக்கு, தன் மனைவி சீதையைச் சந்தேகப்பட்டுத் தற்கொலை செய்யத் தூண்டிய ராமனுக்குக் கோவில் கட்ட முற்படுகிறார்கள்.

1746–ல், மார்த்தாண்ட வர்மா எனும் திருவனந்தபுரத்து மன்னன் தனது அரண்மனையைக் கட்டும் பொழுது, அரண்மனையின் பலத்துக்காக வேண்டி ஈழவர், நாடார், முக்குலர் சாதிகளைச் சேர்ந்த 15 குழந்தைகளைப் பலி கொடுத்தான். அத்திருவனந்தபுரம் அரண்மனை மட்டுமன்றி, நம்முடைய ஒட்டுமொத்த அரசியலமைப்புச் சட்டமும் கூட ஒடுக்கப்பட்ட சாதிகளின் பலிபீடங்களின் மேல்தான் நிறுவப்பட்டுள்ளது.'' □



படிப்பகம்

www.padippakam.com

"நான் எப்படி இந்து இல்லையோ, அதுபோல எனது மரபும் இந்து மரபில்லை. இந்துத் தத்துவ மரபு என்பது பார்ப்பன மரபு. இந்தியத் தத்துவ மரபு என்பது தமிழர், தெலுங்கர், மராத்தி, குஜராத்தி மக்களின் மரபு. இது, பார்ப்பன மரபு அல்ல.

"சாங்கியம், யோகம், மீமாம்சம், வைசேசிகம், நியாயம், வேதாந்தம் இவைதான் இந்தியத் தத்துவ மரபு. கபிலர் தொடங்கி, புத்தர் வழியாக வள்ளலார் வரை - இந்தியத் தத்துவ மரபிற்கு இடைவிடாத, தொடர்ச்சியான வரலாற்றுப் பாரம்பரியம் உண்டு."

"வேதங்கள், உபநிடதம், ஆரண்யகங்கள், சாஸ்திரம், இதிகாசம், புராணம் இவைதான் இந்துத் தத்துவ மரபு."

"இந்துத் தத்துவ மரபான வேதங்களில் என்ன இருக்கிறது எனப் பார்ப்போம். ரிக் வேதம், ஒரு கலப்படச் சோறு; அதில் உள்ள பாடல்கள் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாதவை. அப்பாடல்களில் சில முட்டாள்தனமானவை. சில அறிவுக்குப் பொருந்தக் கூடியவை; அவை திராவிட மக்களுக்குச் சொந்தமானவை; அதை ஆரியர்களே ஒப்புக் கொண்டு, அத்தகைய பாடல்களின் கீழ் 'திராவிட ரிக்கு' எனக் குறிப்பிட்டுள்ளனர்."

"நம்ம ஊரு பேட்டையில சில பேர் இப்படி பேசிக்குவான் - 'மாப்ள என்ன அவன் அந்தப் பக்கமா போனா ராங் பண்றான்; ரொம்ப பயமாயிருக்குது... நீ மட்டும் ஊன்னு சொல்லு... அவனைக் கீய்ச்சிடுறேன்' - இதை சமசுகிருதத்தில் மொழி பெயர்த்தால், அதுதான் யசுர் வேதம்."

"கற்பூர தீப ஆராதனை காட்டுவது எப்படி? என்பது போன்ற 'அரிய' சடங்குகளைப் பற்றிக் கூறுவதுதான் அதர்வண வேதம். ஆனால், கற்பூரம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பே, கற்பூர ஆராதனை காட்டுவது எப்படி என்று வேதத்தில் உள்ளதாகக் கதை விடுகிறார்கள். 2,600 ஆண்டுகளுக்கு முன்பு பிறந்த புத்தரைப் பற்றிய குறிப்புகள் கூட 5,000 ஆண்டுகளுக்கு முந்தைய வேதத்தில் இருக்கிறது என ஃபிலிம் காட்டுகிறார்கள்".

"சாம வேதம், ஒரு காமக் களஞ்சியம்; பத்து ஆண்கள் சேர்ந்து கொண்டு, ஒரு பெண்ணை எப்படியெல்லாம் பாலியல் பலாத்காரம் செய்யலாம் என விவரித்துக் கூறுகிறது, அந்த வேதம். பாலியல் உறவு வக்கிரங்களைப் பற்றிப் பேசும் சாம வேதத்தைப் பார்ப்பனர்கள் கலைஞானம் உடையது எனத் தூக்கிக் கொண்டாடுகிறார்கள். இதன்படி பார்த்தால், நமது திரைப்பட இயக்குநர்கள் சாம வேதத்தின்படி படம் எடுக்கிறார்கள் என்றுதான் கூறவேண்டும்."



**2,600 ஆண்டுகளுக்கு முன்பு பிறந்த புத்தரைப் பற்றிய குறிப்புகள் கூட 5,000 ஆண்டுகளுக்கு முந்தைய வேதத்தில் இருக்கிறது என ஃபிலிம் காட்டுகிறார்கள்.**

பேரா. பெரியார்தாசன்

# இந்தியத் தத்துவ மரபு இந்துத் தத்துவ மரபில்லை, இல்லவே இல்லை!

'பிரபஞ்சம் எதில் இருந்து வந்தது?' என ஆராய்வது ஆரண்யகங்கள். அசகமர்ணர், பிருகஸ்பதி, நாராயணன் ஆகியோர் இந்தத் தத்துவ விசாரணையில் ஈடுபட்டவர்கள். 'பிரபஞ்சம் நீரில் இருந்து வந்தது' என ஒருவர் கூறினால், அடுத்த ஆள் சும்மா இருக்க முடியாதில்லையா? 'நீர் எதில் இருந்து வந்தது? எனக் கேள்வி எழுப்புவான். 'நீர் நெருப்பிலே இருந்து வந்தது' என இன்னொருவன் 'கண்டுபிடித்து'ச் சொன்னால், 'நெருப்பு எதில் இருந்து வந்தது?' என அடுத்த கேள்வி வரும். இதற்கு நெருப்பு கருமுட்டையில் இருந்து வந்தது என ஆரண்யகம் பதில் கூறுகிறது."

"பிரம்மம் வேறு; ஆன்மா வேறா? என்ற கேள்வியை எழுப்பும் உபநிடதம், இரண்டும் ஒன்றுதான்; இரண்டுக்கும் இடையே அவித்யா (அறியாமை) தான் குறுக்கே கோடு போடுகிறது என வெங்காயத் தோலை உரித்த கதையாகப் பதில் சொல்லுகிறது."

"நான், ஜெயேந்திர சங்கராச்சாரியை பேட்டி எடுக்கச் சென்ற பொழுது, 'உபநிடதங்கள் எத்தனை?' என்ற கேள்வியை அவரிடம் கேட்டேன். "எத்தனையோ இருக்கு... எப்டி சொல்றது" என்று பதில் சொன்னார் அவர். "எத்தினியோ இருக்கட்டும்; ஒரு அஞ்சாறைச் சொல்லுங்கள்" என மீண்டும் கேட்டேன். அதற்கும், "எத்தனையோ இருக்கு" என்பதுதான் அவரது பதில். அதற்கு நான், 'உபநிடதம் எத்தனை என்று தெரியாத நீங்கள் பெரிய சாதி; தெரிஞ்ச நான் சின்ன சாதியா?' எனக் கோபமாகக் கேட்டேன். இது குமுதம் ரிப்போர்டர் பத்திரிகையில் 'உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும்' என்று நான் சொன்னதாக வெளியாகியிருந்தது.

"தத்துவம் என்பதை வாழ்க்கை நெறியாகவும், சிந்தனையின் தெளிவு என்றும் புரிந்து கொண்டால், இந்துத் தத்துவ மரபு இந்திய மக்களின் தத்துவ மரபில்லை எனப் புரிந்து கொள்ளலாம்."

இந்தியத் தத்துவ மரபுக் கூறான சாங்கியம் மனித மனத்தைப் பற்றி, எண்ணுதலைப் பற்றிப் பேசுகிறது. இதை உருவாக்கியவர் கபிலர். சிந்தனையைப் பற்றி, எண்ணத்தைப் பற்றிப் பேசும் இத்தத்துவக் கூறை, பார்ப்பனர்கள் எண்ணிக்கை பற்றிப் பேசுவதாகத் திரித்து அதற்கு 'சங்க்யா' எனப் பெயர் கொடுத்து விழுங்கி விட்டார்கள். சாங்கியத்தை உருவாக்கிய கபிலரை 'கபிலா' எனப் பெயர் மாற்றித் திருடிக் கொண்டார்கள்.

"மனமும், உடலும் இணைந்து செயல்படுவது பற்றிப் போதிப்பது யோகம்; மீமாம்சம் உழைக்கும் மக்களின் செயல் திறனைப் பற்றிப் பேசுகிறது. பார்ப்பனர்களோ உழைக்காத கூட்டம். எனவே மீமாம்சம் இந்து மரபாக இருக்க வாய்ப்பே யில்லை."

"தர்க்கம், மெய்ப்பொருள் காண்பதற்கு விவாதிப்பது; இந்து மரபிலோ விவாதிப்பதற்கு இடமே கிடையாது. 'நான் சொல்றேன், நீ நம்பு' என்பதுதான் இந்து மரபு."

"வைசேசிகம் பொருள் அறிவு பற்றிப் பேசுவது. இந்து மரபிற்குப் பொருளைப் பற்றிய அறிவே இல்லாததால்தான் 'வாழ்வாவதே மாயம்; மண்ணாவதே திண்ணம்' எனப் பிதற்றுகிறது."

"இவைதான் இந்து தத்துவ மரபுக்கும் இந்தியத் தத்துவ மரபுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள். அப்படியென்றால், இந்துத் தத்துவ மரபில் மிஞ்சியிருப்பது என்ன? கொஞ்சம் குடுமி மயிரும் கோவணமும் தவிர, இந்துத் தத்துவ மரபில் வேறெதுவும் இல்லை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்." ☐



படிப்பகம்

www.padippakam.com

# மொகலாய ஆட்சிக்குட்படாத பகுதிலில்தான் அதிகமான மதமாற்றம் நடந்துள்ளது

## இர்பான் அலி எஞ்சினியர்

**ஒரு மனிதனின் மதத்தை பலரும் பெயரை வைத்துக் கண்டுபிடிக் கலாம் என்றார்கள். இந்தோனேஷியாவைச் சேர்ந்த, புகழ் பெற்ற முசுலீம் மார்க்க அறிஞரின் பெயர் லெட்சுமணன்.**



''இசுலாமிய மக்களும் இசுலாமிய பயங்கரவாதமும்'' எனும் தலைப்பில், மும்பய் நகரில் செயல்பட்டு வரும் ''சமூகம் மற்றும் மதச்சார்பின்மைக்கான ஆய்வு மையம்'' என்ற அமைப்பின் உறுப்பினரும் வழக்குரைஞருமான திரு. இர்ஃபான் அலி எஞ்சினீயர் உரையாற்றினார். ''பயங்கரவாதம், தீவிரவாதம் என்பதெல்லாம் மக்கள் சார்ந்தவையாக இருப்ப தில்லை; அரசுதான் பயங்கரவாதியாக இருக்கிறது'' எனக் குறிப் பிட்டுத் தனது உரையைத் தொடங்கினார்.

''முசுலீம்கள் முரட்டுத்தனமான மத நம்பிக்கை கொண்ட வர்கள்; மதக் கடுங்கோட்பாட்டுவாதிகள்; இறுக்கமான மதச் சமூகம் முசுலீம் சமூகம். முசுலீம்களின் நாட்டுப்பற்று சந்தேகத் திற்குரியது; முசுலீம் மதமும், கிறித்தவ மதமும் வெளிநாட்டில் இருந்து இந்தியாவிற்கு வந்ததால், அவர்கள் இந்தியாவிற்கு விசு வாசமானவர்களாக இருப்பதில்லை.''

— இந்தப் பொய்களை ஆர்.எஸ்.எஸ். 365 நாட்களும் இடைவிடாது பிரச்சாரம் செய்து வருகிறது. பெருவாரியான மக்களும்கூட இந்தப் பொய்களை உண்மையென்று நம்பத் தொடங்கிவிட்டார்கள். ஆனால், உண்மை மாறானது என்பதற்கு அநேக உதாரணங்களைத் தர முடியும்.

எனது தந்தை - திரு. அஸ்கார் அலி எஞ்சினீயர் கேரள முசு லீம்களின் வாழ்க்கையை ஆய்வு செய்தபொழுது, கேரளாவைச் சேர்ந்த ஒரு முசுலீம் பெண்ணை மொழிபெயர்ப்பாளரின் உதவி யோடு பேட்டி காணச் சென்றார். அப்பொழுது அந்தப் பெண் மொழி பெயர்ப்பாளரிடம், ''மலையாளம் தெரியாத இவர் எப்படி முசுலீமாக இருக்க முடியும்!'' எனக் கேட்டார். அப்பெண்ணைப் பொறுத்தவரை மலையாள மொழியையும், முசுலீம்களையும் பிரித்துப் பார்க்க முடியாது.

நான் சார்ந்திருக்கும் சமூகம் மற்றும் மதச் சார்பின்மைக்கான ஆய்வு மையத்தின் கூட்டத்தில், ''வழிபாட்டு முறையைத் தவிர, வேறெந்த விதத்தில் ஒரு மனிதனின் மதத்தைக் கண்டுபிடிக்க முடியும்'' என்ற கேள்வியைக் கேட்டபொழுது, பலரும் பெயரை வைத்துக் கண்டுபிடிக்கலாம் என்றார்கள்.

இந்தோனேஷியாவைச் சேர்ந்த, புகழ் பெற்ற முசுலீம் மார்க்க அறிஞரின் பெயர் லெட்சுமணன். லெபனான் நாட்டில் வாழும் கிறித்தவர்களின் பெயர்களைக் கேட்டால் அவர்களை முசுலீம் என்று நீங்கள் கருதக்கூடும். அப்துல்லா போன்ற பெயர்கள் முசுலீம் மதப் பெயர்கள் அல்ல. அவைகள் அரேபிய மொழிப் பெயர்கள்.

''அடுத்ததாக, தாடி வைத்திருந்தால், அவன் முசுலீம் என்றார்கள். ஆர்.எஸ்.எஸ்.காரர்களால் தேசிய வீரனாகக் கொண்டாடப்படும் சிவாஜிகூட தாடி வைத்திருந்தார். அதனால் அவர் முசுலீமாகி விடுவாரா?''

அரியானா மாநிலத்தில் உள்ள மேவார் பகுதியில் வாழும் மியோ முசுலீம்கள், மகாபாரத, இராமாயணக் கதைகளைக் கூறு வதில் நிபுணத்துவம் பெற்றவர்கள். மியோ முசுலீம்கள், இந்து முறைப்படி நெருப்பை ஏழுமுறை வலம் வந்தும், இசுலாமிய முறைப்படியும் திருமணம் செய்து கொள்கிறார்கள்.

இசுலாமிய நெறிமுறைகளைக் கட்டுப்பாட்டோடு கடைப்பி டிக்க வேண்டும் எனப் போதிக்கும் தப்லீக் இயக்கம், மியோ முசு லீம்களை, 'உண்மையான' முசுலீம்களாக மாற்ற முயன்ற பொழுது, 'மியோ முசுலீம் மியோவாகவே வாழ்வான்' எனக் கூறித் திருப்பி அனுப்பி விட்டனர்.

1980-களில் விசுவ இந்து பரிசத், மியோ முசுலீம்களை இந்துவாக்க முயன்று தோற்றுப் போனது.

குஜராத்தைச் சேர்ந்த பரிணாம் பந்தி முசுலீம்கள் இசுலாமிய - இந்து பாரம்பரியப்படி வாழ்ந்து வருகின்றனர். அந்த முசுலீம் குடும்பங்களில் அண்ணன் குடுமி வைத்திருந்தால், தம்பி தாடி வைத்திருப்பான். இறந்து போனவர்களைப் புதைக்கவும் செய்வார்கள்; எரிக்கவும் செய்வார்கள். அவர்களின் மதக் கோட்பாடு, கீதை, குரான் இரண்டும் கலந்தது. அவர்களின் மதப் புனித நூலை பரிணாம் பந்தி முசுலீம்களைத் தவிர, பிற முசு லீம்கள் கூடத் தொட முடியாது.

மொகலாய மன்னர்கள் வாள் முனையில் கட்டாயமாக மதம் மாற்றினார்கள் என்பது ஆர்.எஸ்.எஸ்.இன் குற்றச்சாட்டு. ஆனால் உண்மை என்னவென்றால், மொகலாய ஆட்சிக்கு உட்பட்ட தில்லி, ஆக்ரா பகுதிகளை விட அந்த ஆட்சிக்கு உட்ப டாத எல்லைப் பகுதிகளில் வங்காளம், பஞ்சாப், எல்லைப்புற மாகாணம் ஆகிய இடங்களில்தான் பெருவாரியான மதமாற்றம் நிகழ்ந்துள்ளது.

சூஃபி ஞானிகள் மனிதத்துவத்தையும், அன்பே கடவுள் என்றும், எல்லோரும் கடவுளை வழிபடலாம் என்றும் போதித் ததுதான் சூத்திர சாதி மக்களை இசுலாத்தை நோக்கி ஈர்த்தது. மத மாற்றம் மேல்சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான நடவடிக்கை என்ப தற்கு மிகச் சிறந்த உதாரணம் 1981-இல் நடந்த மீனாட்சிபுர மத மாற்றம்.

கலாச்சார மாற்றம் இரண்டு அரசியல் காரணங்களுக்காக நடக்கிறது. முசுலீம் மதத்திலுள்ள மேல் சாதியினருக்கு ஷெரீப் முசுலீம்கள் என்று பெயர். ஓரளவு வசதி வாய்ப்பு வரப் பெற்ற கீழ்ச் சாதியைச் சேர்ந்த நடுத்தர வர்க்க முசுலீம்கள், ஷெரிப் முசு லீம்களைப் போல மாற விரும்புகின்றனர். உடனே, தங்கள் வீட்டுப் பெண்கள் பர்தா அணிய வேண்டும் எனக் கட்டாயப் படுத்துகின்றனர். இரண்டாவதாக, இந்து மதவெறியர்களின் தாக்குதல், சில முசுலீம்களை மதக் கடுங்கோட்பாட்டுவாதிகள் பக்கம் தள்ளிவிடுகிறது.

இந்த முசுலீம் மதக் கடுங்கோட்பாட்டுவாதிகள் எண்ணிக் கையில் மிகக் குறைவானவர்கள். ஆனால், இந்த எண்ணிக்கை வளர வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். விரும்புகிறது; ஏனென்றால், ஆர்.எஸ்.எஸ்.இன் வளர்ச்சியும், முசுலீம் மதக் கடுங்கோட்பாட்டுவாதிகளின் வளர்ச்சியும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. □



படிப்பகம்

www.padippakam.com

# உலகமயமாக்கம் - இந்துத்துவம்

## ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள்

முனைவர் ஆனந்த் தெல்தும்ப்டே

"ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள்" என்ற தலைப்பில் முனைவர் ஆனந்த் தெல்தும்ப்டே ஆழமான தன் உரையை எளிமையான எடுத்துக்காட்டுகள் மூலம் அளித்திருக்கிறார். தவிர்க்க இயலாத காரணங்களால் மாநாட்டில் கலந்து கொள்ள வில்லை; கீழே, அவரது உரையின் சுருக்கம்:

ஏகாதிபத்திய உலகமயமாக்கம் ஒரு புறமும், பார்ப்பன பயங்கரவாதம் மறு புறமும் ஆக இருமுனைத்தாக்குதல் நம் மீது தொடுக்கப்பட்டுள்ளது. உலகமய மாக்கலுக்கு எதிரான மக்கள் இயக்கங்கள் சர்வதேச அளவில் வளர்ந்து வருகின்றன.

உலகமயமாக்கத்திற்கு எதிரான இத்த கைய இயக்கங்கள் வரவேற்கத்தக்க வையே. எனினும் மாறுபட்ட சித்தாந்தங் களைக் கொண்ட பல்வேறு அமைப்புகள் இத்தகைய எதிர்ப்பியக்கத்தை நடத்து வதால் அவற்றுக்கிடையே இந்த எதிர்ப்பி யக்கத்தின் திசைவழி குறித்துத் தெளி வின்மை நிலவுகிறது. இந்த அமைப்புக்கள் நடத்தும் இயக்கங்கள் அரசு சாரா நிறுவனங்களின் (தன்னார்வக் குழுக்களின்) ஏற்பாடுகளே என்பதைக் கவனிக்கும்போது ஐயம் மேலிடுகிறது. மாற்று உலகை அமைப்பது என்ற அவர் களின் கோட்பாடு ஏகாதிபத்தியவாதி களின் உதவியோடுதான் செயல்படுத்தப் படும் போலும்! உலகமயமாக்கம் என்பது முதலாளித்துவத்தின் இறுதிக்கட்டம்தான் என்பதிலும் இது தவிர்க்க இயலாமல் சோசலிசத்துக்கு இட்டுச் செல்லும் என்ப திலும் நம்பிக்கை உடைய சக்திகள் தன்னார்வக் குழுக்களின் நடவடிக்கை களால் திருப்தி அடைந்து விட முடியாது.

இந்தியாவில் நிலைமை பாரதூரமாக உள்ளது. உலகமயமாக்கத் தாக்குதலின் அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்குள் இந்துத்துவ அமைப்புகளின் தொடர்ச்சி யான வெறியாட்டங்களை மக்கள் எதிர் கொள்கின்றனர். உலகமயமாக்கத்தை விட அபாயகரமானது இந்துத்துவமே என்று ஒருசாரார் கருதுகின்றனர். இதற்கு மாறாக உலகமயமாக்கமே பேராபத்து விளைவிக்கக் கூடியது என்று கருது வோரும் உளர்.

உதாரணமாக, இந்துத்துவத்தைத் தீவி ரமாக எதிர்த்து வரும் மதச்சிறுபான்மை யினர் உலகமயமாக்கத்தை அவ்வளவாக எதிர்ப்பதில்லை. தனியார்மயத்தின் விளைவாக இடஒதுக்கீட்டு வாய்ப்பு களைப் பறிகொடுத்து வரும் தலித்துக்கள் உலகமயமாக்கத்தை எதிர்த்த போதிலும் இந்துத்துவ எதிர்ப்பில் போதிய அக்கறை காட்டுவதில்லை. இதைவிட மோசமா னது என்னவெனில், தலித்துக்கள் சங்கப் பரிவாரங்களின் கவர்ச்சிவாத அரசிய லுக்கு இரையாகி இந்துத்துவத்தின் காலாட்படையாக மாறி வருவதுதான். பழங்குடியினர் பலரும் மீண்டும் இந்துக் களாக மதம் மாறி வருகின்றனர். உலகம யமாக்கம் பெண்களை அதிக அளவில் பாதிக்கிறது என்று பல ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. அவர்கள் உலகமயமாக் கத்தை எதிர்க்க முன்வந்த போதிலும் இந்துத்துவத்தை எதிர்க்க முன்வர வில்லை என்பது கவனத்துக்குரியது. இதுபோல் உலகமயமாக்கத்தின் விளை வாகத் தங்களின் கல்வியைப் பறி கொடுத்து வரும் மாணவர்களும் இந்துத் துவத்தின் அபாயம் பற்றிச் சரிவர உணர வில்லை. மறுபுறத்தில், இந்துத்துவ எதிர்ப்பில் முனைப்பு காட்டி வரும் பல மதச்சார்பற்ற சக்திகள் உலகமயமாக் கத்தின் ஆதரவாளர்களாக இருந்து வரு கின்றனர்.

உலகமயமாக்கமும் இந்துத்துவமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை அல்ல; அவை ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங் களே. இதைப் புரிந்து கொள்ளாத தெளி வின்மை மக்கள் திரள் இயக்கங்களைக் கட்டுவதில் பின்னடைவை ஏற்படுத்தி ஆளும் வர்க்கங்களுக்குச் சாதகமாக முடியும்.

உலகமயமாக்கமும் இந்துத்துவமும் மட்டுமல்ல, பாசிசமும் இவற்றோடு நெருக்கமான தொடர்பு உடையதாகும். ஏகாதிபத்திய உலகமயமாக்கலின் அடிப் படைத் தத்துவம் நவீன தாராளவாதம் ஆகும். இந்துத்துவமோ சங்கப்பரிவாரங் களின் அரசியல் – பண்பாட்டுச் செயல் திட்டம் ஆகும். உலகமயமாக்கம், இந்துத் துவம் இவ்விரண்டும் தம்மை வெளிப் படுத்திக் கொள்ளும் ஊடகமே பாசிசம் ஆகும்.

தனிநபரின் அதீத 'சுதந்திரம்' என்ப துதான் நவீனதாராளவாதத்தின் அடிப் படைக் கோட்பாடு. இக்கோட்பாடு எத்த கைய கூட்டுச் செயல்பாட்டையும் கூட்டுத் தன்மையையும் அடியோடு நிரா கரிக்கிறது; இவ்விதத்தில் இது கம்யூனிசத் துடன் முரண்படுகிறது; இவற்றை எல்லாம் அகற்றி விட்டு அதனிடத்தில் நபர்க ளுக்கு இடையிலான போட்டி மனப்பான் மையை உயர்த்திப் பிடிக்கிறது; மானுட முன்னேற்றத்தின் தாரக மந்திரம் இப்போட்டி மனப்பான்மையே என்று கூச்சலிடுகிறது.

நவீன தாராள வாதத்தை அடிப்படையாகக் கொண்ட உலகமய மாக்கத்தில் ஏழை எளியோர் அதிகாரமற் றோர்க்கு இடமே கிடையாது; 'திறமை'யற்றோர்க்கும் அங்கு இடம் கிடையாது. சந்தைச் செயல்பாடுகளில் சாமர்த்தியம் காட்டத் தெரியாமல் இருப் பதுதான் திறமையின்மையாகும். நவீன தாராளவாதம் சமத்துவத்தை அடியோடு எதிர்க்கிறது; சுதந்திரமான தொழில் முனைவோரின் உரிமைகளை உயர்த்திப் பிடிக்கிறது. தத்துவார்த்த மட்டத்தில், சமத்துவம் என்பது இயற்கைக்கு முரணா னது என்று அது வாதாடுகிறது. இக்கோட் பாட்டின்படி, சமத்துவமின்மைதான் மனிதக் குழு முன்னேற்றத்தின் உந்து சக்தி; அதுபோலவே, சகோதரத்துவத் தையும் இது நிராகரிக்கிறது.

இந்துயிசத்தின் அடிப்படையாகவும் தனிநபர்வாதமே இருந்து வருகிறது. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய தகுதியின் அடிப்படையில்தான் அவனுக் குரிய சாதி அந்தஸ்தை இந்த உலகில் அடைகிறான். தன்னுடைய சாதிக்கு விதிக்கப்பட்ட கடமையைச் செவ்வனே செய்வதன் மூலம்தான் அடுத்த பிற வியில் ஒரு மனிதன் உயர் சாதியில் பிறக்கும் வாய்ப்பைப் பெறுகிறான் என்கி றது இந்துயிசம்.

கோட்பாட்டு ரீதியாக மட்டுமின்றி அதைத்தாண்டியும் இந்துத்துவம், நவீன தாராளவாதம் ஆகிய இரண்டுக்குமான ஒப்புமைகள் பரவிக் கிடக்கின்றன. சான்றாக, இவை இரண்டும் சமத்துவத் துக்கு முற்றிலும் எதிரானவை. சமத்துவ மின்மை (அசமத்துவம்) என்பதுதான்



படிப்பகம்

இயற்கையானது என்று இவை இரண்டுமே கருதுகின்றன.

நவீன தாராளவாதம் வழங்கும் சுதந்திரம் காசுக்கு வாங்கப்படும் ஒரு பண்டமாகும். ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான எதையும் - உணவு, உடை, உறைவிடம் உட்பட எதையும் பணத்தைக் கொடுத்தால் பெற்றுக் கொள்ளலாம். உங்களிடம் பணம் இல்லையென்றால் உங்களுக்குச் சுதந்திரம் இல்லை. எனவே நவீன தாராளவாதம் வழங்கும் சுதந்திரம் பணத்தில் உள்ளது. அது பணம் படைத்தவர்களின் சுதந்திரம் ஆகும்.

''இந்துயிசம் சுதந்திரம் என்பதையே அறியாதது'' என்று கருதுவது சரியல்ல. இரு பிறப்பாளர்களான பார்ப்பன, சத்திரிய, வைசிய வர்ணத்தினர்க்கு அது போதுமான சுதந்திரத்தை வழங்குகிறது. இவர்களுக்குச் சேவை செய்யப் பிறந்த சூத்திரர்களுக்கு இந்தச் சுதந்திரம் இல்லை. பஞ்சமர்களோடு ஒப்பிடும் வகையில் சூத்திரர்களும் சுதந்திரத்தைக் கோரமுடியும். வர்க்கங்கள் தம் சிறப்புத் தன்மையை இழந்து சாதிகளாக உருமாறிய பின் சுதந்திரம் வாங்கத்தக்கதாகி விட்டன.



மறுகாலனியாக்கத்தை நோக்கி...



முனைவர் ஆனந்த் தெல்தும்ப் டே

அநேகமாக எந்த அளவுகோலின்படி பார்த்தாலும் இந்துத்துவத்திற்கும் புதிய தாராள வாதத்திற்குமிடையில் வியக்கத்தக்க ஒத்த தன்மைகள் இருப்பதை நாம் காண்கிறோம்.

இவ்வாறு இந்துத்துவம் என்பது உலகமயமாக்கத்தின் வெறும் பின்தொடர்ச்சி அல்ல; அதன் பண்பு ரீதியான பிரதிபலிப்பும் ஆகும். அரசு மற்றும் குடிமைச் சமூக அமைப்புகள் பாசிசமயமாகி வருவது உலகமயமாக்கத்தின் பின்விளைவு மட்டுமின்றி இந்துத்துவப் பரவலின் இயல்பான விளைவும் ஆகும். ஏனெனில், இந்துத்துவம் தன் பிறப்பிலேயே ஒரு பாசிச ரகம்.

பாசிசப் பண்பு என்பது இந்துத்துவத்தின் பிறவி அடையாளம். மராட்டியத்தில் பூனாவின் பார்ப்பன மன்னர்களான பேஷ்வாக்களின் வீழ்ச்சிக்குப் பின்னர் மராட்டியத்தின் பார்ப்பனச் சக்திகள் ஒன்றுதிரண்டு இழந்த ஆட்சியைப் பெறுவதற்கு முயன்றனர். பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்த பூனா பார்ப்பனர்களின் கலகம் உண்மையில் இந்த வகையைச் சேர்ந்ததுதான். காலனிய எதிர்ப்புப் புரட்சிகரப் போராட்டங்களாக இவற்றைப் பார்ப்பனர்கள் வர்ணித்தபோதிலும், சாராம்சத்தில், அது பழமைவாதப் பிற்போக்கு வகையிலானதே. தங்களுக்கேற்ற ஒரு வலதுசாரிப் பழமைவாதப் புரட்சியைத் தேடிக் கொண்டிருந்த பார்ப்பனர்கள் முசோலினியின் பாசிசத்தில் புகலிடம் தேடினர்.

சங்கப் பரிவாரங்களின் முழக்கமான ''ஒரே தேசம், ஒரே கலாச்சாரம், ஒரே மதம், ஒரே மொழி'' என்பது ''ஒரே மக்கள், ஒரே தேசம், ஒரே தலைவர்'' என்ற நாஜி முழக்கத்தின் எதிரொலியே.

1947 – க்குப் பிறகு பல்வேறு வெகுஜன அமைப்புக்களைக் கட்டமைத்த ஆர்.எஸ்.எஸ் சங்கப் பரிவார அமைப்புகளை நிறுவியது. கம்யூனிச எதிர்ப்பை லட்சியமாகக் கொண்ட ஆர்.எஸ்.எஸ் உள்நாட்டு 'எதிரிகளா'ன முசுலீம் மீது பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டது. சிறுபான்மையினரைப் பற்றி வதந்திகளைப் பரப்பி வெகுஜனங்களிடம் வெறியைக் கிளப்பியது. ஜெர்மனியில் ஹிட்லர் யூதர்களுக்கு எதிராகக் கையாண்ட அதே தந்திரத்தை இவ்வாறு ஆர்.எஸ்.எஸ். கையாண்டது. ஆரிய மாட்சிமையை மீட்டெடுப்பதாக ஹிட்லர் கூறியது போல, ஆர்.எஸ்.எஸ்ஸும் இந்தியாவில் வேதங்களின் மாட்சிமையை மீட்டெடுக்க வேண்டும் என்று முழங்கியது. மேலும் ஆப்கானிஸ்தான், வியட்நாம், இந்தோனேசியா, தாய்லாந்து ஆகிய தொலைதூர நாடுகளையும் உள்ளடக்கிய அகண்ட பாரதத்தை உருவாக்க வேண்டும் என்று கூறுவதன் மூலம் மேலாதிக்க விஸ்தரிப்பு வெறியை ஏற்படுத்துகிறது.

ஒன்று தெளிவாகத் தெரிகிறது– சங்கப் பரிவாரங்களால் தோற்றுவிக்கப்பட்டதுதான் இந்துத்துவம் என்றபோதிலும், அது அவர்களோடு முடங்கிவிடவில்லை என்பது கூர்ந்து கவனிக்கத்தக்கது. இன்று அது இந்திய ஆளும் வர்க்கத்தின் தத்துவமாகப் பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது.

இந்திரா காந்தி இரண்டாம் முறையாகப் பிரதமர் ஆன காலந்தொட்டே இந்துத்துவம், ஆளும் வர்க்கத்தின் தத்துவமாகத் திகழ ஆரம்பித்தது என்பதும், ராஜீவ்காந்தியின் பதவிக் காலத்தில் இது குறிப்பிடத்தக்க வகையில் வெளிப்பட்டது என்பதும் கவனத்துக்குரியது. இதே காலக்கட்டத்தில்தான் தாராளமயச் சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன. நரசிம்மராவ் ஆட்சியின்போது உலகமயமாக்கம் திணிக்கப்பட்டபோதே இந்துத்துவச் சக்திகளின் ஏறுமுகமும் தென்படத் தொடங்கியது. பாரதீய ஜனதாக் கட்சி அல்லது காங்கிரசின் மிதவாத, தீவிரவாத, இந்துத்துவ ரகங்களுக்கு இடையில் உண்மையில் எவ்வித வேறுபாடும் இல்லை. திராவிடப் பாரம்பரியத்துக்குச் சொந்தம் கொண்டாடிய போதிலும், ஜெயலலிதா தமது பார்ப்பனியத்தை பாரதீய ஜனதாவுடன் ஐக்கியப்படுத்துகிறார்; கலைஞரோ பாரதீய ஜனதாவுடன் கூட்டணி கண்டுள்ளார்.

இவற்றில் எல்லாம் இருந்து கிடைக்கும் படிப்பனை என்ன? இந்துத்துவத்தையும் உலகமயமாக்கத்தையும் எதிர்ப்பது என்பதன் பொருள் என்னவெனில், தேர்தல் அரசியலில் இதற்கான தீர்வு இல்லை என்று உணர்வதே ஆகும், தீர்வு, மக்கள் திரள் போராட்டங்களில் இருக்கிறது– பாசிசச் சக்திகளுக்கெதிரான தெருச்சண்டையில் இருக்கிறது.

பாசிச இந்துத்துவத்தை உலகமயமாக்கலில் இருந்து பிரித்துப்பார்க்க முடியாது. எனவே, ஒன்றுக்கு எதிரான போராட்டம் என்பது மற்றொன்றுக்கு எதிரான போராட்டமாகவும் இருந்தே தீர வேண்டும். எனவே, இவற்றுக்கு எதிரான மக்களின் போராட்டங்கள் அரசியல் ரீதியானவை மட்டுமின்றி கலாச்சார ரீதியானவை என்பதாகவும் அமைய வேண்டும் உள்ளூர் அளவில் மட்டுமின்றி உலகு தழுவியதாகவும் அமைய வேண்டும். பார்ப்பன பயங்கரவாதத்தை எதிர்க்கும் போதே ஏகாதிபத்தியவாதிகளின் உலகமயமாக்கலை எதிர்த்தும் போராட வேண்டும். இது காலத்தின் கட்டாயம். □

www.padippakam.com

கடந்த ஆண்டு பிப்ரவரியில், வி.இ.ப.வும், பஜ்ரங்தள்ளும் மீண்டும் ராமர் கோயில் பிரச்சினையைச் சூடேற்றிவிட்டு, நாடெங்கும் கலவரச் சூழ்நிலையை ஏற்படுத்தின.

இதையடுத்து, குஜராத் மாநிலம் கோத்ராவில் ஒரு ரயில் பெட்டி மர்மமான முறையில் உள்ளிருந்தே எரிக்கப்பட்டது.

கோத்ராவைக் காட்டி, இந்து மத வெறிக் கும்பல் குஜராத்தில் முசுலீம் இனப்படுகொலையை நடத்தியது.

எல்லைப் பகுதியில் ஐந்து இலட்சம் படை வீரர்கள் குவிக்கப்பட்டு, செயற்கையான பதட்ட நிலை உருவாக்கப்பட்டு, பாக்.எதிர்ப்பு இந்திய தேசியவெறி தூண்டிவிடப்பட்டது.

மத்தியப் பிரதேச மாநிலத்தில், இந்து மதவெறிக் கும்பலே ஒரு பசு மாட்டை வெட்டிக் கொன்றுவிட்டு, மதக் கலவரத்தை நடத்தினார்கள்.

கேரளாவில் ஒரு பாதிரியாரின் கையை வெட்டினார்கள்.

தமிழகத்திலோ 'புரட்சித் தலைவி' அன்னதானத் திட்டம், மத மாற்றத்தடைச் சட்டம் எனக் கொண்டு வந்து தமிழர்களின் தலையை வெட்டுகிறார்.

அதனால்தான் இந்த ஆண்டு தமிழ் மக்கள் இசை விழாவை நடத்தாமல், இசை விழாவின் தொடர்ச்சியாக இப்பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாட்டை நடத்துகிறோம்.

''நாங்கள் அனைவரும் இந்துக்கள்; நாங்கள் இந்துக்கள் என்பதால், அக்மார்க் தேச பக்தர்கள்; முசுலீம்கள் தேசத்துரோகிகள்; இசுலாமிய பயங்கரவாதம்தான் நாட்டின் தலையாய பிரச்சினை'' – இவைதான் ஆர்.எஸ்.எஸ் அரசியலின் மையமான விசயங்கள். இவை ஒவ்வொன்றையும் எதிர்க்காமல், குறிப்பாக, ''இந்து'' மதம் என அழைக்கப்படுவதை மறுக்காமல், பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பில் ஓர் அங்குலம் கூட நகர முடியாது.

ஒரு கையில் கோகோ - கோலாவைப் பிடித்துக் கொண்டு, வாயில் வந்தே மாதரத்தை உதிர்ப்பதுதான் இந்து தேசபக்தியின் யோக்கியதை; தங்களது அமெரிக்கக் கைக்கூலித்தனத்தை மறைத்துக் கொள்ளவே, ஆர்.எஸ்.எஸ். கும்பல் முசுலீம்களையும், முஷாரப்பையும் எதிரியாகக் காட்டுகிறது.

முசுலீம்கள் அனைவரும் பாக். கைக்கூலிகள்; சந்தேகத்துக்குரியவர்கள் என்ற பா.ஜ.க.வின் கண்ணோட்டம் பெருவாரியான 'இந்து' மக்களைத் தொற்றிக் கொண்டுவிட்டது. பா.ஜ.க.வில் உறுப்பினராக இல்லாதவர்கள் கூட, சிந்தனையில் ஆர்.எஸ்.எஸ்.காரர்களாக இருக்கும் அபாயத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆர்.எஸ்.எஸ்.ஐ எதிர்ப்பவர்களிடையே ஒற்றுமை ஏன் இல்லை எனக் கேட்கப்படுகிறது. ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்றால், ஆர்.எஸ்.எஸ்.ஐ எதிர்க்கும் கண்ணோட்டத்திலும் வழிமுறையிலும் உடன்பாடு இருக்க வேண்டும்; அந்த வழிமுறை பகுத்தறிவுக்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டும்.

இன்று குஜராத்திலும், மத்தியப்பிரதேசத்திலும் எங்கெல்லாம் கலவரங்கள் நடக்கின்றனவோ, அங்கெல்லாம் ஆர்.எஸ்.எஸ். பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன. இந்தப் பள்ளிக் கூடங்களைத் திறந்து கொள்ள அனுமதித்ததே மொரார்ஜி தேசாயின் ஜனதா அரசுதான்.

அன்றைய ஜெயப்பிரகாஷ் நாராயணன் தொடங்கி இன்றைய வை.கோ. வரை, பல்வேறு மதச்சார்பற்ற ஓட்டுக் கட்சித் தலைவர்களும் ஆர்.எஸ்.எஸ்.இன் வளர்ச்சிக்குச் சேவை செய்திருக்கின்றனர்.

''காந்தி இந்து மதத்தைப் பற்றி இப்படிச் சொல்லியிருக்கிறார்; விவேகானந்தரும், பாரதியும் அப்படிச் சொல்லி இருக்கிறார்கள்'' என ஓட்டுக் கட்சிகள் ஆர்.எஸ்.எஸ். பிராண்டு இந்து மதத்திற்கு எதிராக அவர்களை மேற்கோள் காட்டுகிறார்கள். காந்தி மதமாற்றத்தைக் கண்டித்தும், விவேகானந்தர் முசுலீம்களை எதிர்த்தும், பாரதி இந்து சாம்ராஜ்யத்தைப் புகழ்ந்தும் கூறியிருப்பதை எடுத்துப் போட்டு, மதச்சார்பற்ற ஓட்டுக் கட்சிகளின் கைகளைக் கொண்டே, அவர்களின் கண்களைக் குத்துகிறது ஆர்.எஸ்.எஸ்.

இந்து மதவெறியின் வலது கை ஆர்.எஸ்.எஸ். என்றால், காந்தியும்,



# வெட்கப்படுவோம்..
# அவமானத்திலிருந்

## பார்ப்பனியம் ஒரு தீண்டாமைச் சி

தோழர் கதிர

*கருத்தரங்கின் முதல்நாள் நிகழ்ச்சிகளுக்கு தலைமையேற்றுத் தொடங்கி வைத்த ம.க.இ.க. மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் கதிரவன் ''பார்ப்பன பய கரவாதம் என்று ஏன் குறிப்பிடுகிறீர்கள்? தனியார்மய தாக்குதல் தீவிரமாக இருக்கும் பொழுது இதைச் செய்கி களே?'' என இந்த மாநாடு குறித்து எழுப்பப்பட்ட கேள் களுக்குப் பதில் அளிக்கும் விதமாகத் தனது தலை உரையை நிகழ்த்தினார்.*

*''சாணிப்பாலும், சவுக்கடியும் மறைந்து போய்விட்ட லேயே, பார்ப்பனியம் ஒழிந்து போய்விட்டதாகக் கருத மு யாது. 'உன் சாதித் தொழிலைத்தான் நீ செய்ய வேண்டு இதை மீறினால் தண்டனை' என்பதுதான் பார்ப்பனிய இந்தப் பார்ப்பனியம்தான் இந்து மதத்தின் கொள்கை. இ வெறும் மதக் கொள்கையல்ல; அரசியல் கொள்கை. இந்த பார்ப்பனியச் சித்தாந்தத்தைக் கடைப்பிடிப்பவர்களை அவர்கள் எந்தச் சாதியில் பிறந்திருந்தாலும், பார்ப்பன களைப் போலத்தான் பார்க்க முடியும்.''*



படிப்பகம்

www.padippakam.com



# ...ன் ஆத்திரம் பிறக்கும்!

மருதையன், பொதுச் செயலர், ம.க.இ.க.

பாரதியும் அதன் இடது கை. காந்தி இந்து மதவாதத்தின் மதவாதப் பிரிவைச் சேர்ந்தவர் என்பதை அம்பேத்கரும், பெரியாரும் அம்பலப்படுத்தி இருக்கிறார்கள்.

ஆனால் மதச்சார்பின்மை பேசும் கட்சிகளோ இந்துமதம் ஜனநாயக பூர்வமானது என்றும் இந்துமதவெறியர்களான ஆர்.எஸ்.எஸ்.ஸிடமிருந்து இந்து மதத்தை மீட்க வேண்டுமென்றும் பேசுகிறார்கள்.

இது பொய். கிறித்தவத்தை ஏசுவும், இசுலாமியத்தை நபிகள் நாயகமும் தோற்றுவித்தனர் என்றால் இந்து மதத்தைத் தோற்றுவித்தவன் பிரிட்டிஷ்காரன். இந்து என்றொரு மதம் எப்போதும் இருந்ததில்லை. இன்று இந்து மதம் என்றழைக்கப்படும் மதம் பார்ப்பன மதம் தான்.

இந்து – இந்தி – இந்தியா என்பதுதான் பார்ப்பன பயங்கரவாதத்தின் சித்தாந்தம். இதை நேருக்கு நேர் எதிர்த்து நிற்காமல் எதிரிகளை முறியடிக்க முடியாது. மதச் சார்பற்ற ஓட்டுக் கட்சிகளோ இந்திய ஒருமைப்பாடு, பாக். எதிர்ப்பு, முசுலீம் பயங்கரவாதம் ஆகிய பிரச்சினைகளில் ஆர்.எஸ்.எஸ். உடன் கைகோர்த்துக் கொள்கிறார்கள்.

வி.இ.ப.வுக்கு வேண்டியதைச் செய்து கொடுக்கத்தான் பா.ஜ.க. நாடாளுமன்றத்தைப் பயன்படுத்துகிறது. ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு நாடாளுமன்றத்தின் மீது நம்பிக்கை கிடையாது. போலீசு, இராணுவத்திற்கு வெளியே, கொள்கை ரீதியாகத் திரட்டப்பட்ட படையைக் கொண்டிருக்கிறது ஆர்.எஸ்.எஸ். இந்தச் சுயேச்சையான படைதான் குஜராத்தின் இனப்படுகொலையை நடத்தியது.

இப்படிப்பட்ட எதிர்ப்புரட்சிக் கும்பலை, அதற்கு எதிரான கொள்கை, அரசியல் ரீதியாகத் திரட்டப்பட்ட படை இல்லாமல் வீழ்த்த முடியாது. இது வன்முறை என்றால், தீவிரவாதம் என்றால், வேறு வழி என்ன என்பதை மதச்சார்பின்மை பேசுவோர் கூற வேண்டும்.

ரத யாத்திரை சென்ற இடங்களில் எல்லாம் ஆயிரக்கணக்கான முசுலீம்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால், இப்படுகொலைக்காக, இதுவரை எந்தவொரு இந்து மதவெறியனும் தண்டிக்கப்படவில்லை. மாறாக, கிரிமினல் அத்வானி துணைப் பிரதமராக அமர்ந்திருக்கிறார். நீதித்துறை, போலீசு, அதிகார வர்க்கம் என அரசு இயந்திரம் முழுவதும் அவர்களின் கையில் இருக்கும் பொழுது, எதை நம்பித் தேர்தல் பாதைக்கு வருவது? முசுலீம்கள் எந்த அடிப்படையில் இந்த நாட்டுக்கு விசுவாசமாக இருக்க முடியும்?

நாட்டின் பிரச்சினைகளுக்கு ஆர்.எஸ்.எஸ். இன் ஒரே பதில் – முசுலீம் பயங்கரவாதம். ஆனால், உண்மையில் பார்ப்பன பயங்கரவாதம்தான் பிரச்சினை; மறுகாலனி ஆதிக்கம் தான் பிரச்சினை.

அரசியல் கோரிக்கைகளுக்காக மக்கள் போராட வருவார்களா எனச் சந்தேகப்படுபவர்கள், தயவு செய்து தொலைக்காட்சிப் பெட்டிகளைத் திறந்து பாருங்கள். ஈராக் மீது போர் தொடுப்பது அமெரிக்கப் பொருளாதாரத்துக்கு நல்லது; அந்தப் போரில் அமெரிக்காவிற்கு ஆதாயம் இருக்கிறது என்கிறார் அமெரிக்க அதிபர் புஷ். ஆனால், அமெரிக்க நாட்டு மக்களோ, ஏழை நாட்டு மக்கள் கொல்லப்படக்கூடாது; ஈராக்கின் எண்ணெயை அமெரிக்க முதலாளிகள் கொள்ளையடிப்பதை அனுமதிக்க முடியாது எனக் கூறி, புஷ்ஷை எதிர்த்து வீதியில் இறங்கிப் போராடுகிறார்கள்.

ஆனால், தமிழகத்திலோ, மின்சார வாரியம் நட்டத்தில் நடப்பதாகக் கூறி, விவசாயிகளுக்கு வழங்கப்படும் 'இலவச' மின்சாரத்தை ரத்து செய்யப் போவதாக ஜெயா அறிவித்த பொழுது, அந்த மோசடியை அம்பலப்படுத்திப் போராட மின்வாரியத் தொழிலாளர்கள் முன் வருவதில்லை. குஜராத்தில் முசுலீம் இனப் படுகொலையை நடத்திய ஆர்.எஸ்.எஸ்.ஐ எதிர்த்து, தாழ்த்தப்பட்டோர்களைப் படுகொலை செய்யும் மேல்சாதி வெறியர்களை எதிர்த்து ஒரு அரசியல் ஆர்ப்பாட்டம் கூட நடப்பதில்லை. தஞ்சை விவசாயிகளின் பட்டினிச்சாவைத் தடுத்து நிறுத்தப் போராட்டங்கள் இல்லை. இந்த மௌனம் கோழைத்தனத்தின் அடையாளம். இந்தக் கோழைத்தனத்திற்காக நாம் வெட்கப்பட வேண்டும்.

வெட்கப்படுவோம். அவமானப்படுவோம். அவமானத்திலிருந்துதான் ஆத்திரம் பிறக்கும். ❑

*''இந்தியத் தண்டனைச் சட்டம் கொலைக் குற்றவாளிக்குக் கூட பதினான்கு ஆண்டு ஆயுள் தண்டனைதான் கொடுக்கிறது; ஆனால், பார்ப்பனியமோ தாழ்த்தப்பட்டவர்களை இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தீண்டாமைச் சிறையில் பூட்டி வைத்திருக்கிறது''*

*''தமிழ் மொழி தீட்டு, தமிழ் நீச பாஷை; அதனால் கருவறைக்குள் நுழைய முடியாது'' என ஆதிக்கத் திமிரோடு வெறுப்பைக் கக்கும் பார்ப்பனியம், இந்தியாவில் உள்ள பல்வேறு தேசிய இனங்களின் மொழி, பண்பாட்டையும் ஒடுக்கி வரும் சித்தாந்தம்.''*

*''இந்து என்ற மதமே கிடையாது; அது பார்ப்பன மதம்தான் என்பதை நிரூபிக்கும் முகமாக சிறீரங்கம் கருவறை நுழைவுப் போராட்டத்தை நடத்தினோம்; பார்ப்பனப் பண்பாட்டு ஆக்கிரமிப்புக்கு எதிராகக் கடந்த ஒன்பது ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் இசை விழாவை நடத்தி வருகிறோம். அவற்றின் தொடர்ச்சியாகவே இம்மாநாட்டைக் காண வேண்டும்''*

*''தமிழகத்தை குஜராத்தாக மாற்றுவோம் எனக் கொக்கரிக்கிறது பார்ப்பன பயங்கரவாதக் கும்பல்; அதைத் தடுப்பதற்குத்தான் இந்த மாநாடு'' என இந்த மாநாட்டின் அவசியத்தைச் சுட்டிக் காட்டினார் தோழர் கதிரவன்.*



படிப்பகம்

www.padippakam.com



# மதச்சார்பின்மைக்கான போராட்டத்தை சாதி ஒழிப்புப் போராட்டத்திலிருந்து பிரிக்க முடியாது

**தீஸ்தா சேதல்வாத்**

*''கம்யூனலிசம் கம்பாட்'' என்ற ஆங்கில மாத இதழின் ஆசிரியரும், குஜராத் இனப்படு கொலையின் குற்றவாளிகளை உலகுக்கு அடையாளம் காட்டிய ''மக்கள் விசாரணைக் குழுமம்'' அமைப்பதில் முக்கியப் பங்காற்றியவருமான தீஸ்தா சேதல்வாத் மாநாட்டில் ஆற்றிய உரையிலிருந்து:*

குஜராத் இனப்படுகொலையை நடத்துவதற்கான தயாரிப்புகள் ஒரே நாளில் நடந்துவிடவில்லை. பா.ஜ.க., குஜராத்தில் ஆட்சியைப் பிடித்த அன்றே, நான்கு வருடங்களுக்கு முன்பே, சிவில் சமூகத்தையும், அரசையும் ஓர் இனப்படு கொலையை நடத்தி முடிப்பதற்கு ஏற்றவாறு தயாரிக்கும் வேலைகள் தொடங்கி விட்டன.

இனப்படுகொலையை விட, மிகவும் அச்சுறுத்தக்கூடிய விசயம் என்னவென்றால், கடந்த சில ஆண்டுகளாக அம்மாநிலத்தில் முசுலீம்களுக்கு எதிராக நடந்துவரும் வன்மம் கலந்த வெறுப்புப் பிரச்சாரம்தான்.

முசுலீம்களுக்கு எதிராக மட்டுமல்ல, தாழ்த்தப்பட்டோருக்கு எதிராகவும் நடத்தப்படும் இந்த வெறுப்புப் பிரச்சாரத்தைத் தடுக்க பல்வேறு சட்டங்கள் உள்ளன. ஆனாலும், இந்த வெறுப்புப் பிரச்சாரத்தை நடத்தி வருபவர்களுக்கு எதிராக இச்சட்டங்களைப் பயன்படுத்துவதற்கு குஜராத் போலீசு தயாராக இல்லை.

இனப்படுகொலையின் கொடூரம் சொல்லி மாளாது:

சாகும் தறுவாயில் இருந்த ஒரு சிறுவன் தண்ணீர் கேட்ட பொழுது, வாயில் மண்ணெண்ணையை ஊற்றி நிரப்பி, அதன் பின்னர் அவன் வாயினுள் தீக்குச்சியைக் கொளுத்திப் போட்டு, அச்சிறுவனை ஒரு குண்டுபோல வெடிக்கச் செய்து கொன்றனர்.

முன்னாள் காங்கிரசு எம்.பி.யும், தொழிற்சங்கவாதியுமான இசான் ஜாஃபரே குறிவைத்துத் தாக்கப்பட்டார். அவர் ''வந்தே மாதரம்'' எனச் சொல்ல மறுத்தவுடன், அவரது விரல்கள் துண்டாக்கப்பட்டன; அதன் பின்னர் அவரது கால்கள் துண்டிக்கப்பட்டன; உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த அவரைக் கழுத்தில் கொக்கி போட்டு இழுத்துக் கொண்டு, அவர் வாழ்ந்த ''குல்பர்கா காலனி'' முழுவதும் சுற்றிவந்து, அதன் பின்னர் அவரை மூன்று துண்டாக வெட்டி நெருப்பில் வீசியெறிந்தனர்.

நான் இனப்படுகொலை நடந்த மார்ச் முதல் வாரத்தில், குஜராத்திற்கு சென்று செய்தி சேகரிக்க முயன்ற பொழுது, எனது நண்பர்கள், நெற்றியில் பொட்டு வைத்துக் கொண்டு, காவித் துப்பட்டாவைத் தோளில் போர்த்திக் கொண்டு வெளியே செல்லுமாறு அறிவுறுத்தினார்கள். நான், மும்பய்க் கலவரத்திற்குப் பிறகு, நெற்றியில் பொட்டு வைத்துக் கொள்வதை விட்டுவிட்டேன். ஆனால், குஜராத்தில் நெடுஞ்சாலை வழியாகப் பயணம் செய்யும் போது மட்டும் பொட்டு வைத்துக் கொண்டேன். கிராமங்களுக்குச் சென்றவுடன் பொட்டை அழித்துவிடுவேன்.

இன்று, நம் கண்முன்னே, குஜராத்தில் முசுலீம்களுக்கு எதிராக நடத்தப்பட்டுள்ள இனப்படுகொலை, 1000 ஆண்டுகளுக்கும் மேலாக, தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராக, பழங்குடி இன மக்களுக்கு எதிராக நடந்து வருகிறது.

இந்த நாட்டைச் சேர்ந்த 25–30 சதவீத மக்கள் மீது தினந்தோறும், சகஜமாகவும் மிகக் கொடூரமாகவும் தாக்குதல் நடத்தி வரும் இந்து மதம், தன்னைச் சகிப்புத் தன்மை கொண்ட மதமாகவும், வன்முறையை வெறுக்கும் மதமாகவும் ஒரு மாயையை உருவாக்கிப் பரப்பி வருகிறது. இது எப்படிச் சாத்தியமானது?

மகாராஷ்டிரா மாநிலப்பாட நூல்களில் 'அரசியல் சாசனத்தை எழுதியவர்' என்ற குறிப்பு மட்டுமே அம்பேத்கரைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அம்பேத்கர் மனு ஸ்மிருதியைக் கொளுத்தியது; மகத் குளத்தில் இறங்கித் தண்ணீர் எடுக்க அவர் நடத்திய போராட்டம்; அவர் மதம் மாறியது உள்ளிட்டுப் பார்ப்பன பயங்கரவாதத்திற்கு எதிராக அம்பேத்கர் நடத்திய போராட்டங்களும், எழுத்துக்களும் திட்டமிட்டு இருட்டடிப்பு செய்யப்பட்டு விட்டன. இந்த இருட்டடிப்பு மூலம்தான் இந்து மதம் தன்னைச் சகிப்புத்தன்மை கொண்ட மதமாகக் காட்டிக் கொள்ள முடிகிறது;

மதச் சார்பற்றவர்களை, போலி மதச் சார்பின்மைவாதிகள் எனக் கிண்டல் செய்து வந்த இந்து மதவெறியர்கள் இன்று மதச்சார்பற்றவர்களைத் தாக்க வேண்டும் என வெளிப்படையாகக் கூறுகிறார்கள்.

தாழ்த்தப்பட்டவர்களையும், பழங்குடி இன மக்களையும் தாக்கி வரும் 'இந்து' மதம், முசுலீம்களையும், மதச் சார்பற்றவர்களையும் தாக்குமளவு முன்னேறியிருக்கிறது.

இந்து மதவெறியர்கள் இந்த வெறுப்புப் பிரச்சாரத்தைக் கேடுகெட்ட நோக்கத்துடன் பயன்படுத்தி வருவதற்கு கோத்ரா சம்பவம் நல்ல உதாரணம். ரயில் பெட்டி உள்ளிருந்துதான் எரிக்கப்பட்டது எனத் தடய அறிவியல் துறை கண்டுபிடித்திருக்கிறது. சம்பவம் நடந்த அன்று மாலை வரை வந்த செய்திகள், அச்சம்பவத்தை ஒரு விபத்தாகத் தான் குறிப்பிட்டுள்ளன. பிரதமர் வாஜ்பாயிகூட, அச்சம்பவத்தை விபத்து என்றுதான் அன்று நாடாளுமன்றத்தில் கூறினார். அன்று மாலைக்குப் பிறகுதான் ''கோத்ரா சம்பவம் முசுலீம்களின் சதி வேலை'' என்ற விஷமப் பிரச்சாரத்தை மோடியும், இந்து மதவெறி அமைப்புகளும் செய்யத் தொடங்கின.

அச்சம்பவத்தில் தீயில் கருகி இறந்து போன அனைவரும் ராமபக்தர்களோ, கரசேவகர்களோ அல்ல. இறந்து போனவர்களுள் பலர் கோத்ராவிற்கு அருகில் உள்ள ஊர்களில் இருந்து ரயில் ஏறியவர்கள். இறந்து போன 58 பேரில், 26 பேர் பெண்கள்; 12 பேர் குழந்தைகள். அடையாளம் காணப்பட்டுள்ள ஐந்து சடலங்களுள் ஒன்று கோத்ரா தொடர் வண்டி நிலையத்தின் தலைமை அதிகாரியின் மனைவியினுடையது.



படிப்பகம்

www.padippakam.com

இறந்து போன ஒரு சிறுவனின் தந்தை, தனது மகனின் சடலத்தைக் கலவரத்தைத் தூண்டும் நோக்கத்தோடு ஊர்வலமாக எடுத்துச் செல்வதை எதிர்த்துள்ளார். ஆனால், மோடி கும்பல் இந்த எதிர்ப்பைக் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை.

கோத்ராவில் ரயில் பெட்டிகளைத் தீ வைத்துக் கொளுத்தியது முசுலீம்கள்தான் என 'நிரூபிப்பதற்காக' "கோத்ரா சம்பவம் நடந்த அன்று, முசுலீம் சிறுவர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை; முசுலீம் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லவில்லை; கோத்ராவில் எந்தவொரு முசுலீம் பயணியும் ரயிலில் ஏறவில்லை; முசுலீம் நோயாளிகள் கோத்ரா அரசு மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு அழைத்து வரப்பட்டனர்" என்ற பொய்களை ஆர்.எஸ்.எஸ் தொடர்ந்து கூறி வருகிறது.

கோத்ரா சம்பவம் நடந்திருக்கவில்லை என்றால் கூட, வேறு ஏதோ காரணத்தைச் சொல்லி இனப்படுகொலையை இந்து மதவெறிக்கும்பல் நடத்தியிருக்கும். "முசுலீம் இளைஞர்கள் இந்துப் பெண்களைக் கடத்திக் கொண்டு போய் கட்டாயத் திருமணம் செய்து கொள்கிறார்கள்; முசுலீம் பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்வது எப்படி? இந்த வருட ஹோலி பண்டிகையை வர்ணங்களுக்குப் பதில் முசுலீம்களின் இரத்தத்தால் கொண்டாடுவோம்; முசுலீம்களுக்கு வேலை கொடுக்கக் கூடாது; அவர்களின் கடைகளில் பொருட்கள் வாங்கக் கூடாது; முசுலீம்களைச் சமூக ரீதியாக, பொருளாதார ரீதியாகப் புறக்கணிக்க வேண்டும்"... எனப் பல வகையான வெறுப்புப் பிரச்சாரங்கள், இலட்சக் கணக்கில் பிரசுரங்களாக அச்சடிக்கப்பட்டு, கடந்த 4 ஆண்டுகளாக அம்மாநிலமெங்கும் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன.

இனப்படுகொலையால் பாதிக்கப்பட்ட முசுலீம் அகதி முகாம்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதை மறுக்கும் அளவிற்கு, அம்மாநில அரசிடம் முசுலீம் எதிர்ப்பு வெறி புரையோடிப் போயிருக்கிறது. இதனால் அகதி முகாம்களுக்கு நிவாரண உதவி வழங்கக் கோரி வழக்குத் தொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.





குஜராத் மாநில உயர் நீதி மன்றத்தில் நடந்த இந்த வழக்கில், அரசை எதிர்த்து வாதாட குஜராத்தைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் யாரும் முன் வரவில்லை. நாங்கள் மும்பயில் இருந்து வழக்கறிஞர்களை வரவழைத்தோம். அகதி முகாம்களுக்குப் போதிய தண்ணீர் வழங்க வேண்டும் என்ற சாதாரணமான கோரிக்கைக்காக, நாங்கள் குஜராத் உயர்நீதி மன்றத்தில் ஆறு மணிநேரம் வாதாட வேண்டியிருந்தது.

1998 – 99 ஆகிய இரண்டு ஆண்டுகளில் மட்டும் குஜராத்தில் கிறித்தவர்கள் மீது 79 தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இத்தாக்குதல்களை நியாயப்படுத்த, கிறித்தவர்கள் பழங்குடி இன மக்களைக் கட்டாயமாக மதம் மாற்றுகிறார்கள் என்ற பொய்ப் பிரச்சாரம் முழு வீச்சோடு நடத்தப்பட்டது.

கிறித்தவர்களைப் போல, பார்ப்பனர்களும் பழங்குடி இன மக்களிடம் சென்று பணியாற்றட்டுமே! அவர்களை யாரும் கையைப் பிடித்து இழுத்துத் தடுக்கவில்லையே! ஆனால், அவர்களோ கிறித்தவப் பழங்குடி இன மக்களுக்கு எதிராகக் கலவரங்களைத் தூண்டிவிட்டு, தங்களது மேல்சாதி ஆதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்ளத்தான் விரும்புகிறார்கள்.

இனப்படுகொலையின் பொழுது, இந்து மதவெறிக் கும்பலின் கூலிப்படையாகத் தாழ்த்தப்பட்டவர்களும், பழங்குடி இன மக்களும் பயன்படுத்தப்பட்டனர். குறிப்பாக, முன்பு குற்றப்பட்டியலில் வைக்கப்பட்டிருந்த வாஹ்ரி, ஸாரா சாதிகளைச் சேர்ந்தவர்கள், முசுலீம்களின் சொத்துக்களைச் சூறையாட, திருடப் பயன்படுத்தப்பட்டனர். பார்ப்பனப் புத்தி என்பது இதுதான்.

இது மட்டுமல்ல, அம்பேத்கரின் பேச்சுகளைக் கூடத் தங்களுக்குச் சாதகமாகத் திருத்துகிறது இந்து மதவெறிக் கும்பல். இந்துச் சட்டத்திற்குத் திருத்தங்கள் கொண்டுவர முயன்று தோற்றுப் போன அம்பேத்கர், சட்ட அமைச்சர் பதவியில் இருந்து விலகினார். அதன் பின் அவர், "இந்தச் சட்டம் நிறைவேற்றப் படவில்லை என்றால், அரசியல் சாசனத்திற்குப் பொருள்தான் என்ன?" என ஒரு தேர்தல் பொதுக் கூட்டத்தில் பேசினார். குஜராத் வெற்றியைக் கொண்டாட வந்த அத்வானி, அம்பேத்கரின் இந்தப் பேச்சைத் திருத்தி, அம்பேத்கரே அரசியல் சாசனத்தை மாற்ற விரும்பியதாகப் பேசுகிறார்.

அம்பேத்கர், 'தாழ்த்தப்பட்ட, பழங்குடி இனமக்களின் அமைப்புகள் எந்தக் காலத்திலும் இந்து மகாசபையுடன் கூட்டணி வைத்துக் கொள்ளக் கூடாது' என எச்சரித்திருக்கிறார். ஆனால், மாயாவதியோ குஜராத் தேர்தலில் போட்டியிட்ட தனது கட்சியைச் சேர்ந்த 36 வேட்பாளர்களில் ஒருவருக்குக் கூட ஆதரவாகப் பிரச்சாரம் செய்யாமல், மோடியின் வெற்றிக்காக மட்டும் பிரச்சாரம் செய்துவிட்டுப் போனார்.

இந்து மதத்தில் இருந்து சாதியினைப் பிரிக்க முடியாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்; அரசு, மதச்சார்பற்றதாக இருந்தால் மட்டும் போதாது. அது, சாதிக் கட்டுமானத்தை ஒழிக்கும் நோக்கத்தையும் கொண்டிருக்க வேண்டும். மதச்சார்பின்மைக்கான போராட்டம் சாதி ஒழிப்புப் போராட்டத்திலிருந்து பிரிக்கமுடியாதது. □



படிப்பகம்



# "தீண்டாமை என் பிறப்புரிமை" எனக் கூறிய சங்கராச்சாரி ஏன் கைது செய்யப்படவில்லை?

வழக்குரைஞர் பி.ஆர். குப்புசாமி

''இந்திய அரசமைப்பு மதச்சார்பற்றதா?'' எனும் தலைப்பில் உரையாற்றிய தோழர் பி.ஆர். குப்புசாமி, தனது உரையின் தொடக்கத்திலேயே, ''பார்ப்பன பயங்கரவாதம்'' எனப் பொருத்தமான பெயரை வைத்துள்ளதோடு, இம்மா நாட்டை மிகச் சரியான நேரத்தில் நடத்துவதையும் குறிப்பிட்டுப் பாராட்டினார். மேலும் அவர் பேசியதாவது:

இந்திய அரசியல் சாசனப் பிரிவுகள் 25,26 மற்றும் 372 ஆகிய மூன்று பிரிவுகளும் இந்து மதத்திற்குச் சாதகமானவை; மனச்சாட்சிச் சுதந்திரம் பற்றிப் பேசும் பிரிவு 25–ஐ எப்படி வேண்டுமானாலும் வளைக்கலாம்; பிரிவு 372 வர்ணாசிரம தர்மம் தொடரும் எனக் குறிப்பிடுகிறது.

இந்து யார் என்ற கேள்விக்கு, வேதத்தையும், முக்தி அடையப் பல வழிகள் இருப்பதையும் ஏற்றுக் கொள்கிறவன் தான் இந்து எனப் பார்ப்பன வெறியன் திலகர் கொடுத்த விளக்கத்தைத்தான் உச்சநீதி மன்றமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

கடமையையும், தண்டனையையும் பற்றி மட்டுமே பேசுவதைச் சட்டம் எனக் கூற முடியாது; தருமம் என்றுதான் கூற முடியும். எனவே, அரசியல் சாசனம் இந்துச் சட்டம் எனக் கூறுவதை நாம் ஏற்க முடியாது.

மதுரை, கரூர், கும்பகோணம் ஆகிய ஊர்களில் 8,000 சமணர்களைக் கழுவேற்றிக் கொன்றது; ஆயிரம் சமணப் பெண்களைக் கற்பழிக்கச் சக்தி கொடு என சம்பந்தன் பாடியது; விஷ்ணு அவதாரத்தை ஏற்றுக் கெள்ளாத மாபலிச் சக்கரவர்த்தியை நரசிம்ம அவதாரம் எடுத்து வயிற்றைக் கிழித்துக் கொன்றது இவையனைத்தும் இந்து மதத்தைக் காப்பது பயங்கரவாதம் தான்; சகிப்புத் தன்மையோ, அன்போ அல்ல என்பதைத் தான் காட்டுகின்றன.



மன்னன் காலத்தில் மனுதர்மம்தான் ஆட்சி செலுத்தியது. இன்று, இந்தியா சுதந்திரமடைந்து, குடியரசு ஆகிவிட்டாலும், தாழ்த்தப்பட்டவன் குடியானவத் தெருவில் குடியேறி விட முடியாது.

கண்டு முதலில் தங்களின் பங்கைத் தாங்களே எடுத்துக் கொள்ளும் அதிகாரமுடையவர்கள் என அக்கிரகாரம் பற்றி நூல்களில் விளக்கம் தரப்பட்டுள்ளது.

இந்துக்களுக்குக் கூட ஒரே சட்டம் கிடையாது. பனாரஸ், பாம்பே, மிதுனா, திராவிட என நான்கு பிரிவுகளைக் கொண்டதாக உள்ள இந்துச் சட்டத்தில், இந்துப் பெண்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. தத்தெடுக்கும் உரிமை குறித்துப் பார்ப்பனர்களுக்கும், சூத்திரர்களுக்கும் வேறுவேறு சட்டங்கள் உள்ளன. சூத்திரர்கள் சந்நியாசம் பெறுவதை இந்துச் சட்டம் அனுமதிப்பதில்லை.

இப்படி சாதிக்கொரு நீதியாக இருக்கும் இந்துச் சட்டத்தை இந்துக்கள் அனைவருக்கும் பொதுவானதாக மாற்ற முயன்ற அம்பேத்கர், சனாதனக் கும்பலால் தடுக்கப்பட்டார். அதனால் அவர் சட்ட அமைச்சர் பதவியை விட்டு விலகினார். இந்துக்களுக்குக் கூட ஒரே சட்டம் இருக்கக் கூடாது என முட்டுக் கட்டை போட்ட இந்து மதவெறிக் கும்பல், இன்று, பொதுச் சிவில் சட்டம் கொண்டு வருவதை முசுலீம்கள்தான் எதிர்ப்பதாகக் கூறுவது மிகப் பெரிய மோசடித்தனம்.

தலைநகரச் சிறுவழக்குகள் நீதிமன்றச் சட்டத்தின் 16 ஆவது விதி, அந்நீதிமன்றங்கள் இந்து தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கூறுகிறது.

இன்று உச்சநீதி மன்றம் அனைவரும் அர்ச்சகர் ஆகலாம் எனத் தீர்ப்பளித்திருந்தாலும், அர்ச்சகனாக விரும்புகிறவன் பூணூல் போட வேண்டும்; வேதத்தையும், காயத்ரி மந்திரத்தையும் தெரிந்திருக்க வேண்டும் என நிபந்தனைக்கு மேல் நிபந்தனைகளை விதித்துள்ளது. இது புதிய பார்ப்பனர்களை உருவாக்குவதாகும்.

தீண்டாமை எனது பிறப்புரிமை எனக் கூறிய பூரி சங்கரனும், தீண்டாமை சேமகரமானது என்ற காஞ்சி மடத்தின் செத்துப் போன பெரிய சங்கரனும், வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவில்லை. தாழ்த்தப்பட்டவர்களை இழிவு படுத்திப் பேசிய ஜெயேந்திர சங்கரன் மீது தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

பாபர் மசூதி இடிக்கப்பட்டதை இராணுவம் தடுக்கவில்லை. மதவெறிக் கலவரங்களை நடத்திய இந்துமத வெறியர்கள் தண்டிக்கப்படவில்லை. அதேபொழுதில், இந்து தர்மமோ வன்முறையை நியாயப்படுத்துகிறது. இந்த இந்து தர்மத்தை ஏற்றுக் கொண்டுள்ள நிர்வாகத்திற்கு மாற்றாக சமத்துவ நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும். ☐



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# “நாமெல்லாம் இந்துக்கள் என்ற போதையை இந்த மாநாடு கலைத்துவிட்டது”

*திரைப்பட இயக்குநர்* **தங்கர் பச்சன்**

பொதுவாக ஒரு நிகழ்ச்சி முடிந்த பின் அதன் பலன் என்ன, நிறை குறை என்ன என்றெல்லாம் பரிசீலனை செய்வார்கள். ஆனால் தஞ்சையில் நடந்த இந்த மாநாட்டிற்கு அத்தகைய பரிசீலனை எதுவும் தேவையில்லை. என்னைப் பொறுத்தவரை இந்த நிகழ்வைக் காணாமல் போயிருந்தால் எவ்வளவு இழந்திருப்பேன் என்ற கேள்விதான் எழுகிறது. அறிஞர்களின் அறிவார்ந்த உரையைக் கேட்கும் போது, நேர்த்தியான கலைஞர்களின் படைப்பை நுகரும் போது, நல்ல திரைப்படங்களைப் பார்த்து ஒன்றும்போது, இந்த வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கவில்லையே என என் நண்பர்களிடம் ஆதங்கப்படுவேன். இந்த மாநாடு குறித்து அவர்களிடம் விவாதிக்க இருப்பதும் அப்படித்தான்.

இடம், பணம், அரங்கம், கூலிக்குக் கொண்டுவரப்படும் ஆட்கள் — இவற்றினை வைத்து ஒரு மாநாட்டை நடத்த முடியாது. உணர்வுபூர்வமாகப் பங்கேற்பவர்களை வைத்தே ஒரு மாநாடு வெற்றியடைகிறது. தஞ்சையில் கூடியிருந்த மக்கள் கூட்டத்தைப் பார்க்கும்போது அதை நான் புரிந்து கொண்டேன். அத்தகைய மக்கள் பெருக்கின் உணர்ச்சிப் பெருக்கிற்கு இணையாய் பேசியவர்களின் உரைவீச்சும் இருந்தது.

ஏற்கெனவே நான் என்ன நினைத்துக் கொண்டிருந்தேனோ, எதைப் பேச விரும்பினேனோ அதையே இந்த மாநாடும் வெளிப்படுத்தியிருந்தது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

இரண்டு நாட்களும் மாநாட்டு அரங்கில் சுற்றி வந்தபோது பல்வேறு தோழர்கள் தமிழ்ச் சினிமாவின் மீதான கோபத்தை — விமரிசனத்தைக் கேள்விக் கணைகளாக்கி என்னைக் குடைந்தெடுத்தார்கள். இதற்காக நான் வருத்தப்படவில்லை; வரவேற்கிறேன். திரையுலகின் பிரதிநிதியாக நான் சந்தித்த அந்த விமரிசனங்களைக் கேடபதற்கு மொத்த தமிழ்ச் சினிமாவின் பிரமுகர்கள் அங்கில்லையே என்பதுதான் வருத்தமாக இருக்கிறது.

மாநாட்டில் நான் கலந்து கொண்டது குறித்த செய்தி சினிமா வட்டாரத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. “வளர்ந்து வரும் கலைஞனாகிய உனக்கு இதெல்லாம் தேவையா?” என்று எச்சரிக்கவும் செய்கிறார்கள். இந்த எச்சரிக்கை தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சார்ந்த கலைஞர்கள் மத்தியிலிருந்தும் வருகிறது என்பதே என்னுடைய வருத்தம்.

தமிழக மக்களை எந்த அளவு நேசிக்கின்றேனோ அந்த அளவு கோபமும் அவர்கள் மீது உண்டு. காரணம் அவர்களிடம் நிலவும் அரசியல் வறுமை. அதை நீக்கி ஒரு அரசியல் விழிப்புணர்ச்சியை இந்த மாநாடு ஏற்படுத்தியிருக்கிறது. இதை மேலும் விரிவாக மக்களிடம் கொண்டு செல்ல மாநாட்டின் செய்திகளைப் புத்தகங்களாகவும் பேழைகளாகவும் குறுந்தகடுகளாகவும் கொண்டு வரக் கோருகிறேன்.

மாநாட்டில் பேசிய பிற மாநிலப் பிரதிநிதிகளின் தோற்றம் மேட்டுக்குடியினரைப் போல இருந்தது. இவர்கள் நமது பிரதிநிதிகளாகத் தொடர்ந்து இருப்பார்களா, போராடுவார்களா என்ற ஐயம் எழுந்தது. எனது மதிப்பீடு தவறாகவும் இருக்கலாம்.

தோழர் மருதையன் பேசவந்தபோது அவருடைய தோற்றத்தை வைத்து இவரெல்லாம் என்ன பேசப்போகிறார் என்றிருந்தேன். ஆனால் பல பேச்சாளர்களது போலியான கோப — சவடால் பேச்சுக்களைக் கேட்டிருந்த எனக்கு அவருடைய உண்மையான கோபமும், எழுச்சியூட்டும் பேச்சும் நிறைவாக இருந்தது.

நமது சிறு தெய்வ வழிபாடுகள் — நாட்டார் மரபுகளை அழித்த பார்ப்பனியத்தின் புரட்டல் வேலைகளை விரிவாகப் பேசிய சிவக்குமரன் அவர்களின் பேச்சு சிறப்பானது. நமது மரபுகளையும் அடையாளங்களையும் மீட்க வேண்டும் என்று எனக்குள் இருந்த கருத்து உண்மையென அவரது பேச்சு நிரூபித்தது.

பேரா. பெரியார்தாசன் இந்து மதத்தின் உன்னதம், தத்துவ மரபுகளை போட்டு உடைத்தார். வேதங்களின் மறை பொருளைப் பிட்டு பிட்டு வைத்தார். இதற்கு முன் நானும் வேத — உபநிடதங்களில் ஏதும் சரக்கு இருக்குமோ என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அனைத்துப் பேச்சாளர்களின் உரையும் பல்வேறு செய்திகளைத் தெளிவடைய வைத்தது. மொழி பெயர்ப்பைப் பொறுத்த வரை மக்கள் மொழியில் மொழிபெயர்க்கப்படவில்லை. இந்தக் குறை அடுத்த ஆண்டில் சரிசெய்யப்பட வேண்டும் என விரும்புகிறேன். மீனாட்சிபுரம் மதமாற்றம் குறித்து அந்தப் பெரியவரின் பேச்சு, குஜராத்தின் சோகத்தில் நம்மைக் கண்கலங்கவைத்த அந்தப் பெண்ணின் கதை, திண்ணியம், திண்டுக்கல் - அனைத்து நேரடி சாட்சியங்களும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருந்தன.

மாலை கலை நிகழ்ச்சியில் நடந்த சாம்பான் நாடகம் — அதை எல்லா இடங்களிலும் நிகழ்த்த வேண்டும். சாம்பான் புத்தகம் 30 படிகள் வாங்கி வந்து இங்கே விநியோகித்திருக்கிறேன். மேலும் இந்த நாடகத்தை நமது திருமணங்கள், கேளிக்கை, ஏன் துக்க நிகழ்ச்சிகளிலும் கூட நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறேன். என்னுடைய குடும்ப விழாக்களிலும் அதை அமல் படுத்துவேன்.

மாநாட்டில் இடம்பெற்றிருந்த சிறப்பான ஓவியக் கண்காட்சியை — கருப்பு வெள்ளையிலாவது — புத்தகமாகக் கொண்டு வரவேண்டும். தப்படிக்கும் அந்தத் தமிழ் மகனின் உருவச்சிலை 15 வாங்கிவந்து இங்கே விநியோகித்தேன். பெப்சி–கோக் பாட்டிலின் மீது சிறுநீரடிக்கும் சிறுவனின் படம் கொண்ட பனியனை வெளியே செல்லும்போது அணிகிறேன். ஏற்கனவே ‘சொல்ல மறந்த கதையில்’ இந்தக் குளிர்பானங்களுக்கெதிரான வசனங்களை நீக்குமாறு திரையரங்க அதிபர்கள் கோரினார்கள். அந்தப் படம் ஓடும் வரை இக்குளிர்பானங்களின் விற்பனை திரையரங்குகளில் இல்லை என்ற செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாட்டினை பத்திரிகைகளும், தனியார் தொலைக்காட்சிகளும் இருட்டடிப்பு செய்துவிட்டன. இத்தகைய பத்திரிகைகளை வாங்க வேண்டாம் என்ற பிரச்சாரத்தையும் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். இந்து முன்னணி இராம.கோபாலன் பாபநாசத்தில் பேசியதைப் பெரிதாகப் போடும் தினமணி நம்முடைய செய்தியைப் போடவில்லை என்பது ஒரு எடுத்துக்காட்டு.

மொத்தத்தில் இந்த மாநாடு நீண்ட கால நோக்கில் செயல்படுவதற்குப் பல்வேறு விசயங்களை என்னுள் விதைத்திருக்கிறது. முக்கியமாக 'நாமெல்லாம் இந்துக்கள்' என்ற போதையைக் கலைக்கும் வண்ணம் கேள்வி எழுப்பி சிந்திக்க வைத்திருக்கிறது.

— இயக்குனர் ***தங்கர் பச்சன்*** நேரில் தெரிவித்த கருத்துக்களின் தொகுப்பு.



படிப்பகம்

www.padippakam.com

# “இந்துத்துவம், இந்து ராஷ்டிரம் என்பது பார்ப்பன பயங்கரவாத மொழி!”

*“பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களை இந்துத்துவம் விழுங்கியது எப்படி? - குஜராத் அளிக்கும் படிப்பினை” எனும் தலைப்பில், மும்பயிலுள்ள இந்தியத் தொழில் நுட்பக் கழகத்தின் பேராசிரியரும், மதச்சார்பின்மைக்காகப் போராடும் “ஏக்தா” என்ற அமைப்பின் உறுப்பினருமான* ***பேரா. ராம் புனியானி*** *உரையாற்றினார்:*

குஜராத்தில் நடந்த இனப்படுகொலையில் 2000 முசுலீம்கள் படுகொலை செய்யப்பட்டனர். 3,000 கோடி ரூபாய் பெறுமானமுள்ள முசுலீம்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டு அழிக்கப்பட்டன. இந்த இனப்படுகொலையை நடத்தி முடிக்க மிகவும் வறிய நிலையில் வாழும் தாழ்த்தப்பட்டோரும், பழங்குடி இனத்தவரும் அடியாட்களாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதுதான் இதில் மிகவும் கவலையளிக்கக்கூடிய விசயம்.

பழங்குடி இன மக்களுக்குச் சில சலுகைகளை வீசியெறிந்தும், பயமுறுத்தியும், பணம் கொடுத்தும் தம் பக்கம் சேர்த்துக் கொண்ட இந்துத்துவ அமைப்புகள், அவர்களை முசுலீம் மக்களின் சொத்துக்களைக் கொள்ளையடிப்பதற்குப் பயன்படுத்திக் கொண்டுள்ளன. 120 சதவீத வட்டிக்குப் பணம் கொடுக்கும் போஹ்ரா முசுலீம்கள்தான் பழங்குடி இன மக்களைச் சுரண்டுகிறார்கள் எனக் காட்டுவதற்காக, பனியா சாதியைச் சேர்ந்த கந்துவட்டிக் கும்பல், தங்களின் வட்டியை 120 சதவீதத்தில் இருந்து 80 சதவீதமாகக் குறைத்துக் கொண்டன. “குஜராத் இந்து ராஷ்டிரத்தின் பரிசோதனைக் கூடமாகவும், தீண்டத்தகாதவர்கள் என இந்துத்துவத்தால் ஒடுக்கப்படுபவர்களே அதன் அடியாட்களாகவும் மாறியிருப்பதைப் புரிந்து கொள்ள, 1980-க்குப் பின்னர் குஜராத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார - அரசியல் மாற்றங்களை அறிந்து கொள்ள வேண்டும்.



பேரா. ராம் புனியானி

குஜராத்தில் கடந்தகால வரலாற்றை எடுத்துப் பார்த்தால் அம்மாநிலத்தில் எந்தவொரு சமூகச் சீர்திருத்த இயக்கமும் தோன்றி வளர்ந்ததில்லை. இம்மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர்கூட, கம்யூனிஸ்டு அல்லது தாழ்த்தப்பட்டோர் இயக்கத்தின் தலைவராக இருந்ததில்லை என்ற உண்மை தெரிய வரும். வலதுசாரி அரசியல் கட்சியான சுதந்திரா கட்சியும், பிற்போக்குச் சக்திகளும்தான் வெகுகாலமாக அம்மாநில அரசியலைத் தீர்மானித்து வந்தன. 1970-களின் இறுதியில் உருவான சத்திரிய - அரிசன் - ஆதிவாசி - முசுலீம் கூட்டணி, இந்த வலதுசாரி அரசியலை அசைக்கத் தொடங்கியது. அதே சமயம், வலதுசாரிகளோ, தங்கள் இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள இட ஒதுக்கீடு எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்கினர்.

1980-களின் தொடக்கத்தில் குஜராத்தில் பணக்கார விவசாயிகள், சிறிய தொழில் அதிபர்கள், படித்த அறிவுஜீவிகளைக் கொண்ட புதிய நடுத்தர வர்க்கம் எழுந்தது. சாதி அடுக்கில் கீழ் நிலையில் இருந்த பட்டிதார் சாதியினர், பணக்கார விவசாயிகளாகப் பொருளாதாரத்தில் உயர்ந்த அதே பொழுதில் சாதி அடுக்கிலும் மேல்சாதி நிலையை அடைந்தனர். தாழ்த்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டைப் பயன்படுத்திக் கொண்டு அரசு வேலைகளிலும், நவீனத் தொழில்துறை வேலைகளிலும் நுழைந்தனர். 1980 தொடங்கி 1985 வரை இட ஒதுக்கீடு எதிர்ப்புப் போராட்டத்தை முன்னின்று நடத்திய இந்து மத வெறிக் கும்பல், அதன்மூலம் பார்ப்பன - பனியா - பட்டிதார் சாதியினரைத் தன் பக்கம் அணிதிரட்டிக் கொண்டது.

தேர்தல்களில் வெற்றியை ஈட்டும் நோக்கத்தோடு, தனது வாக்கு வங்கியின் அடித்தளத்தை விரிவாக்க விரும்பிய பா.ஜ.க., 1985-க்குப் பின் சாதிக் கலவரத்தை நடத்துவதைக் கைவிட்டுவிட்டு, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடி இன மக்களைத் தன் பக்கம் ஈர்க்கத் தொடங்கியது. இதற்காக, முசுலீம்கள், கிறித்தவர்களைத் தவிர பிற அனைவரும் இந்துக்கள் என்ற பிரச்சாரத்தைத் தொடங்கியது சங்கப் பரிவார். பழங்குடி இன மக்களை அணி திரட்ட வனவாசி, கல்யாண் ஆசிரமம் எனும் அமைப்பு உருவாக்கப்பட்டதோடு, இந்துப் பழங்குடி இன மக்களுக்கும், கிறித்தவப் பழங்குடி இன மக்களுக்கும் இடையே மதக் கலவரங்கள் உருவாக்கப்பட்டன.

இதே கால கட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களிடையே இரு பிரிவுகள் தோன்றின. இட ஒதுக்கீடு சலுகையால் பலன் அடைந்த தாழ்த்தப்பட்டோர், தங்களை மேல்சாதியினரோடு அடையாளப்படுத்திக் கொள்ள விரும்பினர்; குஜராத் தொழிற்துறையின் முதுகெலும்பாக இருந்த ஜவுளி ஆலைகளுள் பெரும்பாலானவை 1980-90களில் அடுத்தடுத்து மூடப்பட்டதால், கிட்டதட்ட ஒரு இலட்சம் தாழ்த்தப்பட்டோர் வேலையிழந்து, நகரங்களில் உதிரிகளாக அலைந்தனர். தாழ்த்தப்பட்டோர் இயக்கங்களும் பிளவுபட்டுப் போய், மாற்று அரசியல் கலாச்சார அடையாளத்தை முன்வைத்துப் போராட முன் வராத

**அறிவிப்பு**

“குஜராத் - இந்துத்துவத்தின் சோதனைச் சாலை”, “பார்ப்பன பயங்கரவாதம்!” - இரு தொடர் கட்டுரைளும் அடுத்த இதழில் இடம்பெறும்.



படிப்பகம்

www.padippakam.com

நிலையில், தாழ்த்தப்பட்டோரை 'இந்து' என முத்திரை குத்தி அணிதிரட்டிக் கொண்டது, ஆர்.எஸ்.எஸ்.

சாதி முரண்பாடுகளும், சாதி ஒடுக்கு முறைகளும் மறைக்கப்பட்டு, சாதி இணக்கத்தை முன் வைத்தது ஆர்.எஸ்.எஸ். இதற்காக, சமூக ஒன்றுகலத்தல் மேடை (Social Assimilation Platform) எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட இளைஞர்களை அணி திரட்ட இரவுப் பள்ளிக்கூடங்களும், இளைஞர் பயிற்சிப் பட்டறைகளும் (Youth Camps) தொடங்கப்பட்டு நடத்தப்பட்டன. தாழ்த்தப்பட்டோரிடம் முசுலீம்கள் அந்நிய எதிரிகளாகக் காட்டப்பட்டு, ஒன்றுபட்ட இந்துச் சமூகத்தில் தான் தாழ்த்தப்பட்டோரின் நலன் பாதுகாக்கப்படும் எனப் பிரச்சாரம் செய்யப்பட்டது.

ராமனையும், சரசுவதியையும் காட்டி மேல் சாதியினரை அணி திரட்டிய ஆர்.எஸ்.எஸ்., பழங்குடி இன மக்களிடம் ராமனின் தொண்டனான அனுமானையும், சபரியையும் புதிய கடவுள்களாக அறிமுகப்படுத்தியது. பழங்குடி மக்களின், தாழ்த்தப்பட்டோரின் சடங்குகளும், திருவிழாக்களும் 'இந்து'மயமாக்கப்பட்டன. தாழ்த்தப்பட்டோரும் இந்து மதத்தின் அங்கம்தான் எனக் காட்ட சமபந்தி விருந்துகள் நடத்தப்பட்டன. இம்மக்களை அணி திரட்ட புலேவையும், அம்பேத்கரையும் கூடத் தந்திரமாகப் பயன்படுத்தியது, ஆர்.எஸ்.எஸ்.

**குஜராத் இந்து ராஷ்டிரத்தின் பரிசோதனைக் கூடமாகவும், தீண்டத்தகாதவர்கள் என இந்துத்துவத்தால் ஒடுக்கப்படுபவர்களே அதன் அடியாட்களாகவும் மாறியிருப்பதைப் புரிந்து கொள்ள, 1980-க்குப் பின்னர் குஜராத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார - அரசியல் மாற்றங்களை அறிந்து கொள்ள வேண்டும்.**



இன்று இந்து மதம் எனக் கூறப்படுவது பார்ப்பனீய மரபை மட்டுமே ஏற்றுக் கொள்கிறது. பக்தி இயக்கம், கபீர், துளசிதாசர் போன்ற பிற மரபுகளை ஏற்றுக் கொள்வதில்லை. பார்ப்பனீயம் ஆணாதிக்கத்தையும், சாதி ஒடுக்குமுறையையும் அடிப்படையாகக் கொண்டது. இந்தப் பார்ப்பனீயம்தான் இன்று இந்துத்துவம் என அழைக்கப்படுகிறது. இந்த இந்துத்துவத்தை மதமாகப் பார்க்க முடியாது. பார்ப்பனீய மதிப்பீடு, மரபை அடிப்படையாகக் கொண்ட இந்து மேல்தட்டு வர்க்கத்தின் அரசியல் அது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் காலனி ஆதிக்கம் - சாதி ஒடுக்குமுறைக்கு எதிராகவும், பாலினச் சமத்துவத்திற்காகவும் போராட்டங்கள் எழுந்தபோது, (பார்ப்பனர்கள், பனியாக்கள், ஜமீன்தார்களின் சமூக - அரசியல் ஆதிக்கம் தகரத் தொடங்கிய பொழுது) அதற்கு எதிராக உருவாக்கப்பட்டதுதான் இந்துத்துவா அரசியல். பார்ப்பனீய இந்துத்துவத்தைத் தேசியத்துடன் இணைத்து சாவர்க்கர் உருவாக்கிய இந்துத்துவா அரசியல், பார்ப்பனர்கள் - மேல்சாதியினர் - ஜமீன்தார்கள் கூட்டணியின் நலனைப் பிரதிபலித்தது.

இந்த இந்துத்துவக் கும்பல், கல்வி கற்க தாழ்த்தப்பட்டோருக்குக் கிடைத்த வாய்ப்பினை, இருண்ட காலம் வருவதாக ஏசியது.

பெண்கள் கல்வி கற்றால் சீக்கிரமே கைம்பெண்ணாகி விடுவார்கள்; படித்த பெண்களிடம் ஒழுக்கம் இருக்காது என மூடத்தனத்தையும், அவதூறையும் பரப்பி, பெண் கல்வியை எதிர்த்தது.

சுதந்திரப் போராட்டத்தையடுத்து நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கணக்கில் கொண்டு, அம்பேத்கர் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் அடிப்படையில் அரசியல் சாசனத்தை உருவாக்கினார். ஆனால் ஆர்.எஸ்.எஸ். தலைவர் சுதர்சன், இந்திய அரசியல் சாசனம் இந்திய மதிப்பீடுகளின் அடிப்படையில் உருவாக்கப்படவில்லை, புனிதமான வேத நூல்களின் அடிப்படையில் அரசியல் சாசனம் உருவாக்கப்பட வேண்டும் என்கிறார். சமூக மாற்றத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதுதான் ஆர்.எஸ்.எஸ்.இன் நோக்கம்.

இட்லர் யூதர்களை வேட்டையாடியதைப் போல ஆர்.எஸ்.எஸ். முசுலீம்களை வேட்டையாடுகிறது. தாலிபான் பாமியான் புத்தர் சிலைகளை அழித்தால், ஆர்.எஸ்.எஸ்., முசுலீம் - கிறித்தவர்களின் வழிபாட்டுத் தலங்களைக் குறிவைத்துத் தாக்கி அழிக்கிறது.

மக்கள் தங்களின் அடிப்படை வாழ்க்கை பிரச்சினைகளுக்காகப் போராடும் பொழுது, ஆர்.எஸ்.எஸ்., அதைப் பின்னுக்குத் தள்ளுவதற்காக, கோவில் பிரச்சினைகளை உருவாக்குகிறது. சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்பு அரசியலைப் பரப்பி, மக்களின் மனத்தையும், போராட்டங்களையும் திசை திருப்புகிறது.

இந்துத்துவம், இந்துராஷ்டிரம் என்பது பார்ப்பன பயங்கரவாத மொழி. இதை முறியடிக்க, ஆர்.எஸ்.எஸ்.ஸுக்கு எதிராகப் போராடும் பல்வேறு அமைப்புகளும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். ஆர்.எஸ்.எஸ்.ஸுக்கு எதிரான ஒரே அமைப்பாக நாம் செயல்பட முடியாவிட்டாலும், ஒரு பொது மேடையை உடனடியாக, இனியும் தாமதிக்காமல் உருவாக்க வேண்டும். □



படிப்பகம்

www.padippakam.com

*"எத்துணை நிறங்களில்*
*உருவானாலும்*
*காகிதப் பூக்களிலிருந்து*
*மணம் எழும்புவதில்லை.*
*எத்துணை முறைதான்*
*முயன்றாலும்*
*பொய்த்திரைகளால்*
*உண்மை மறைவதில்லை"*

*–உருதுக்கவிதை*

## குஜராத் மக்களின் நேருரை:

# இரத்தக் கடனை இரத்தத்தால் தீர்ப்போம்!

செய்தியாக மட்டுமே செவிகளில் ஏறிய படுகொலைகள், பாலியல் வன்முறைகள், அடக்குமுறைகள் அக்கிரமங்கள்.... ரணங்களின் ஆறாத் தழும்புகளை மனதில் கொண்ட மனிதர்களின் குரலாய் மேடையேறிய பொழுது மாநாட்டின் பரந்த திடலெங்கும் அதிர்ச்சியும், மௌனமும் மட்டுமே எதிரொலித்தன. நேருரைக்கான முன்னுரையில், தோழர். மருதையன் குறிப்பிட்டதைப் போல, "நிழலில் ஆயிரம் பார்த்தாலும், சொற்களால் ஆயிரம் கேட்டாலும், நிஜம் நேரில் வந்து பேசும் பொழுது, அது நிச்சயம் இரக்கமற்றவர்களின் மனச்சாட்சியைக் கூடத் தொடத்தான் செய்யும்"

**ஆயிஷா, 42,**
**நரோடா பாட்டியா, அகமதாபாத்.**

"பிப்ரவரி – 28, – கோத்ரா சம்பவத்திற்கு மறுநாள் அதிகாலைப் பொழுதில் நாங்கள் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தோம். திடீரென்று, எல்லாத் திசைகளிலிருந்தும் பஜ்ரங்தள் வெறியர்கள் சூழ்ந்து கொண்டு எங்கள் பகுதியைத் தாக்கினார்கள். நாங்கள் கையில் கிடைத்த கற்களை மட்டுமே கொண்டு, எங்களைத் தற்காத்துக் கொள்ளப் போராடினோம். இவ்வேளையில்தான், போலீசார் வந்திறங்கினார்கள். வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒரு போலீசுக்காரனிடம் நான் ஓடிச் சென்று கேட்டேன் "ஐயா, ஏன் இத்தகைய கொலைவெறித் தாக்குதல் எங்கள் மீது தொடுக்கப்படுகிறது? எங்களுக்கு உதவி செய்யுங்கள்" என்றோம். உடனடியாக, அப்போலீஸ்காரன், "இல்லை, இனிமேல் நீங்கள் உயிர்வாழ வேண்டியதில்லை. மேலிடத்திலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது" என்றான். நான் அறியாதவளாய், "மேலிருந்தென்றால், அல்லாவா எங்களைக் கொல்வதற்கு ஆணையிட்டுள்ளான்?" எனக் கேட்டேன், அப்போலீசுக்காரன் எக்காளமாகச் சிரித்து கொண்டே, "இல்லையில்லை. அதைவிட மேலிடமான மோடியிடமிருந்துதான் இவ்வுத்தரவு வந்துள்ளது. உங்களைக் கொன்று விடுமாறு மோடிதான் ஆணையிட்டுள்ளார்" என்றான்.



என் சகோதர சகோதரிகளே, நாளை 'அரசியல்வாதி' என்று சொல்லிக் கொண்டு எவன் ஓட்டுக் கேட்க வந்தாலும், அவன் கழுத்தைப் பிடித்து, எங்களுக்கு நிகழ்ந்த கொடுமைகளுக்குப் பதில் கேளுங்கள்.

*- ஆயிஷா*

சிறிது நேரத்திலேயே, தற்காப்புக்காகப் போராடிக் கொண்டிருந்த எங்கள் மீது போலீசுக்காரர்கள், கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசத் துவங்கினார்கள். சிறுவர்களும், இளைஞர்களும், முதியவர்களும் சடலங்களாகச் சரியத் துவங்கினர். நாங்கள் செய்வதறியாது தப்பி ஓடினோம்.

நான், சாலையின் மறுபுத்தில் வசித்து வந்த என் சம்பந்தியைத் தேடிச் சென்றேன். அங்கே, கவுசர் பானு என்ற நிறைமாதக் கர்ப்பிணியை, நடுத்தெருவில் பஜ்ரங்தள் வெறியர்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கிக் கொண்டிருந்தார்கள். அவளுடைய வயிற்றைக் கிழித்து, அப்பச்சிளங் குழந்தையை வெளியே எடுத்தார்கள். திரிசூலத்தின் முனையில் குத்தித் தூக்கி, அக்குழந்தையை அவள் முகத்துக்கு நேராகக் காட்டி, "உன் குழந்தையை இறுதியாகப் பார்த்துக்கொள். இனிமேல் ஒருவேளை நீ பார்க்க முடியாது" என வெறிக் கூச்சலிட்டார்கள். அவளை அங்கேயே நிர்வாணப்படுத்திக் கொன்று போட்டார்கள். யாசர்பாய் என்ற ஏழை முதியவரை துண்டம் துண்டமாக வெட்டிப் போட்டார்கள். ஹுதரத் பீபி எனும் முதியவள், தன்னுடைய நகைகளையெல்லாம் கழற்றிக் கொடுத்து மன்றாடியும், அவளுடைய கழுத்தைச் சீவிக் கொலை செய்தார்கள்.

இன்னொரு தெருவில், பிணங்களின் நடுவே ஆபேதா எனும் 50 வயது முதியவள் நிர்வாணமாக எரிந்து கொண்டிருந்தாள். என்னை நோக்கிக் கரம்கூப்பி, "ஆயிஷா, நான் நிர்வாணமாக எரிந்து கொண்டிருக்கிறேனே. இந்த உடலை மறைக்கவேனும் ஏதாவது துணி கொடு அம்மா" என்று கதறினாள். என்னுடைய சேலையைக் கிழித்து, அவளைக் காப்பாற்ற முயன்றேன். ஆனால், என் முயற்சி பலிக்கவில்லை. என் கண்முன்பாகவே அவள் கருகிச் செத்தாள். மதீனா என்னும் பெண்மணியின் 14 வயது மகளை அவள் கண்களுக்கு முன்பாகவே பாலியல் பலாத்காரத்துக்குட்படுத்தி எரித்துக் கொன்றார்கள். உதவி கோரிக் கதறிய மதீனாவிற்கு, உதவி செய்ய அங்கு யாரும் இல்லை. வெறியாட்டம் போட்ட பஜ்ரங்தள் சைத்தான்கள், மதீனாவையும் பத்துப் பேராகச் சேர்ந்து கொண்டு பாலியல் வன்முறைக்குள்ளாக்கினார்கள். நான் விக்கித்துப் போனேன். ஒளிந்தேன், ஓடினேன்...

மற்றொரு தெருவில், குடிபோதையிலிருந்த பஜ்ரங்தள் கருங்காலிகள் திருமணமாகிச் சில நாட்களே ஆகியிருந்த ஒரு இளம்பெண்ணை நடுத்தெருவில் பாலியல் வன்முறைக்குள்ளாக்கினர். கெஞ்சிக் கூத்தடிய அந்தப் பெண், வேறு



படிப்பகம்

www.padippakam.com

வழியின்றிக் கட்டைகளை எடுத்துத் தாக்கத் துவங்கினாள். அவளுடைய கைகளை வெட்டித் துண்டாக்கினார்கள். அப்பெண்ணுடைய முலைகளை வெட்டி யெறிந்தார்கள். அவளைக் கதற, கதற பாலியல் வன்முறைக்குள்ளாக்கிக் கொன்றார்கள்.

என் சகோதர சகோதரிகளே, நாளை 'அரசியல்வாதி' என்று சொல்லிக் கொண்டு எவன் ஓட்டுக் கேட்க வந்தாலும், அவன் கழுத்தைப் பிடித்து, எங்களுக்கு நிகழ்ந்த கொடுமைகளுக்குப் பதில் கேளுங்கள். உங்களுக்கு இப்பயங்கரம் நேரா வண்ணம் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

நான் வாழ வழியற்ற ஏழை, இசுலாமியராகப் பிறந்தது எங்கள் குற்றமா? இன்றைக்கும், எங்கள் பகுதிகளுக்குத் திரும்பிச் சென்றால், எங்களைப் பாகிஸ்தானுக்கு விரட்டியடிப்போம் என்று அச்சுறுத்துகிறார்கள். நாங்கள் இந்த நாட்டில்தான் பிறந்தோம். எங்கள் தாய், தந்தையர், மூதாதையர் அனைவரும் இந்த நாட்டில் தான் வாழ்ந்து மறைந்தார்கள். நாங்களும் இங்கேதான் வாழ்வோம். இதோ, இன்று உயிரோடு இருக்கிறோம். நாளை உயிரோடு இருப்போமா, இல்லையா என்று எங்களுக்குத் தெரியாது. ஆயினும், நாங்கள் இங்கேதான் உயிர் வாழ்வோம்.''

**ஜெய்ஷ் சோலங்கி, 35,**
**இந்திரா நகர், அகமதாபாத்.**

(பிறப்பால் தலித்தான ஜெய்ஷ் சோலங்கி, இசுலாமியரல்லர்; ஆயினும், தன் இசுலாமியச் சகோதர, சகோதரிகளுக்கு நேர்ந்த கொடுமைகளை, எத்துணை இழப்புகள் வந்தாலும், 'உலகின் எந்த மூலைக்கு வேண்டுமானாலும் சென்று சொல்வேன்' என்று உறுதியோடு கூறுகிறார்.)

''பிப்ரவரி–28 அன்று குஜராத் பந்த்'' என அறிவிக்கப்பட்டிருந்தது. நான், பேராம்பூர் எனுமிடத்திற்கு என் உறவினர் திருமணத்திற்காகச் சென்றிருந்தேன். அனைத்து இடங்களிலும் பதற்றம் நிலவியதால், அவசர அவசரமாக நாங்கள் திருமணத்தை முடித்துக் கிளம்பினோம். நாற்புறமும் தீப்பற்றியெரிந்து கொண்டிருந்தது. கொலைவெறி தாண்டவமாடியது. பேராம்பூரிலுள்ள அனைத்து இசுலாமியர் வீடுகளும், கடைகளும் பகிரங்கமாகக் கொள்ளையடிக்கப் பட்டன. சாலையெங்கும் இசுலாமிய மக்கள் பிணங்களாக இறைந்து கிடந்தனர். ஒட்டுமொத்தமாகச் சூறையாடப் பட்ட பின், இசுலாமிய வணிகர்கள் பெரும்பான்மையாக இருந்த பேராம்பூர் சந்தை மொத்தமும் தீவைத்துக் கொளுத்தப்பட்டது. என் இரு கண்களால் கண்ட அக்கொடுமைகளை, என் வாழ்நாளில் என்னால் மறக்க இயலாது.''

**மௌலானா கதீப் அகமது, 48,**
**பாபுநகர் – அகமதாபாத்**

''பிப்ரவரி – 28 அன்று நிகழ்ந்த படுகொலையை, பாலியல் வன்முறைகளை வரலாறு என்றும் மன்னிக்காது. அன்று பற்றிய நெருப்பின் புகைமூட்டம் வானத்தையே மறைத்து விட்டிருந்தது. 28–ஆம் தேதி காலை பெரும் திரளாக ஆர்.எஸ்.எஸ். வெறியர்கள் எங்கள் பகுதியை நாற்புறமும் சூழ்ந்து கொண்டு தாக்கினர். 14–வயது மட்டுமே நிரம்பிய மஜீத் எனும் சிறுவனை போலீஸ் முன்னிலையிலேயே துண்டம், துண்டமாக வெட்டிக் கொன்றனர். அச்சிறுவனைக் காப்பாற்ற ஓடிய எங்களை நோக்கிப் போலீசு சுட்டது. என்னோடு பல காலமாய் வாழ்ந்த எத்தனையோ அருமையான மனிதர்கள் என் கண்முன்னே காக்கை, குருவிகளைப் போலச் சுட்டு வீழ்த்தப்பட்டனர். இன்னும் கூட அவர்களுடைய வெறி அடங்கிவிடவில்லை. இன்றும், குஜராத்தின் இசுலாமிய மக்களிடத்தில் பயபீதியும், விரக்தியும், பசியும், வறுமையும்தான் ஆட்சி செய்கிறது.

ஆனால், இன்னமும் ''இசுலாமியர்கள் மோசமானவர்கள்; பயங்கரவாதிகள்; தேசவிரோதிகள்'' என்ற குரல்தான் ஓங்கி ஒலிக்கிறது. ஒரு கவிஞர் சொன்னதைப் போல, ''மூச்சு விட்டால் கூட நாம் அழிக்கப்படுகிறோம். ஆனால், மோடி கொலையே செய்தாலும் கூட நிச்சயமாய் அது குற்றமில்லை!'' நாங்கள் மரணத்துக்கும், வாழ்வுக்கும் இடையிலான நுண்ணிய இடைவெளியில் வாழ்ந்து வருகிறோம். எனவே, நண்பர்களே, மனிதத்தன்மையற்ற இரத்தவெறி பிடித்த ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி., வி.இ.ப. போன்ற அமைப்புக்களை தமிழ்நாட்டில் நுழைய விடாதீர்கள். இடையறாது போராடி உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். இல்லையேல், எங்களுக்கு நேர்ந்த இரக்கமற்ற அழிவுதான் உங்களுக்கும் ஏற்படும்.''



''எனக்கு
வேறெதுவும் வேண்டாம்,
என் மகனை மட்டும்
திருப்பித் தாருங்கள்,
அது போதும்,
அது மட்டும் போதும்.''

*- மரியம் பீபி*

**மரியம் பீபி, 50,**
**நரோடா பாட்டியா-அகமதாபாத்.**

''எனக்கு மொய்னுதீன் என்ற 20–வயதே நிரம்பிய, இரு கால்களும் ஊனமுற்ற மகன் இருந்தான். பிப்ரவரி–28 அன்று எங்கும் ஆர்.எஸ்.எஸ் கருங்காலிகள் கொலைவெறித் தாக்குதல் நடத்தத் துவங்கிய பொழுது, நான் என் மகனை அழைத்துக் கொண்டு ஒளிய முயன்றேன். ஆனால், என் மகன், ''அம்மா, நானோ ஊனமுற்றவன். என்னைப் பரிதாபப்பட்டு விட்டு விடுவார்கள், நீ சென்று ஒளிந்து கொள். நான் கதவை மூடிவிட்டு இங்கேயே இருக்கிறேன்'' என்றான். இவ்வேளையில், என் மகனின் நண்பனொருவனும் அடைக்கலம் தேடி ஓடி வந்தான். என்னை சக இசுலாமியப் பெண்கள் இழுத்துச் சென்று ஒளிய வைத்தனர்.

ஆனால், கடவுளே, பூட்டியிருந்த கதவுகளை உடைத்துக் கொண்டு, அந்த ஆர்.எஸ்.எஸ் வெறியர்கள் வீட்டினுள் புகுந்தனர். இரு இளைஞர்களையும் கழுத்தைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துச் சென்று நடுத்தெருவில் வைத்து வாள்களால் தாக்கினர். துடித்துக் கதறிய என் மகனின் மீதும், அவன் நண்பன் மீதும் கையுறை அணிந்த ஆர்.எஸ்.எஸ். வெறியர்கள் தாங்கள் எடுத்து வைத்திருந்த இராசாயனப் பொடிகளை அள்ளித் தூவினர். மண்ணெண்ணையை ஊற்றித் தீவைத்துக் கொளுத்தினர். நான் மூர்ச்சையடைந்து கீழே விழுந்து விட்டேன்.

அதன் பின்னர் 6 மணி நேரம் கழித்துத்தான் என் மகனின் உடலைத் தொடவே முடிந்தது. அவனைத் தொட்ட பொழுதோ, மொத்த உடலும் துண்டம் துண்டமாக கருகிக் கிடந்தது. என் மூத்த மகன் என்னை இழுத்துக் கொண்டு ஓட,



படிப்பகம்

www.padippakam.com

நாங்கள் அவ்விடத்தை விட்டு வெளியேறினோம். என்னுடைய மருமகள், மகன், பேரன் அனைவரும் தொலைந்து போயினர். அவர்கள்அனைவரையும் மீண்டும் 'அகதிகள்' முகாமில்தான் சந்தித்தேன்.



நானும், என் கணவரும் பத்து வருடங்களாகக் கடினப்பட்டு உருவாக்கிய உணவகம் பறிபோய் விட்டது. என் இரு மகள்களின் திருமணத்திற்காக நான் சேர்த்துவைத்த 25 பவுன் நகை கொள்ளையடிக்கப்பட்டது. ஆனால், முதல் தகவல் அறிக்கை (F.I.R) யில் 15 பவுன் என்றே போலீசு குறிப்பிட்டது. நான், ''ஏன் மாற்றிக் குறிப்பிடுகிறீர்கள்?'' எனக் கேட்டேன். ''ஏழைகளிடம் இவ்வளவு நகை இருக்குமா?'' என்று எள்ளி நகையாடியது போலீசு. என் வீட்டிலிருந்த பாத்திரங்கள், தட்டுமுட்டுச் சாமான்கள், துணிமணிகள் அனைத்தும் கொள்ளை போய் விட்டன. இன்று, என் கணவர் பிரமை பிடித்தவர் போல் வாழ்கிறார். அவரால் எந்த வேலையும் செய்ய இயலவில்லை. நான் சிறு சிறு மிட்டாய்களும், பிஸ்கெட்டுகளும் விற்றுப் பிழைக்கிறேன். எனக்கு வேறெதுவும் வேண்டாம், என் மகனை மட்டும் திருப்பித் தாருங்கள், அது போதும், அது மட்டும் போதும்.''

**சஹாபுதீன், 42,**
**பாபுநகர், அகமதாபாத்.**

''பிப்ரவரி–27 அன்று கோத்ரா சம்பவம் நடைபெற்றிருக்காவிட்டாலும், 28–அன்று நிகழ்ந்த இனப்படுகொலை நிகழ்ந்தே இருக்கும். ஏனெனில், இப்படுகொலை ஏற்கெனவே திட்டமிடப்பட்ட ஒன்று. பிப்ரவரி மாதத் துவக்கத்திலேயே, என் கடைக்கு அருகில் உள்ள இந்து நண்பரின் இரும்புக் கடையில், பஜ்ரங்தள் அமைப்பினர் 500–க்கும் மேற்பட்ட வாள்கள், திரிசூலங்கள் போன்றவற்றைச் சுத்தம் செய்து, மெருகேற்றிச் சென்றனர். பிப்ரவரி–24 முதலாகவே, இசுலாமியக் குடியிருப்புகளில் ரோந்து சுற்றத் துவங்கினர். எனவே, குஜராத்தில் நடைபெற்றது மதக்கலவரமல்ல, மாறாக முன்கூட்டிய திட்டம், தயாரிப்புடன் கூடிய இனப்படுகொலை மட்டுமே.

நரோடா பாட்டியாவில் மட்டும் எண்ணற்ற முசுலீம்கள் ஆடு, மாடுகளைப் போலக் கொத்துக் கொத்தாக வெட்டிக் கொல்லப்பட்டனர். குல்பர்க் குடியிருப்பில் சாலையின் இருமருங்கிலும் இசுலாமியரின் பிணங்கள் இறைந்து கிடந்தன. அனைத்து இசுலாமியப் பெண் உடல்களும், கொடூரமாக வதைக்கப்பட்டு, முலைகள் அறுத்தெறியப்பட்டு, பொட்டுத்துணி கூட இல்லாமல் நிர்வாணமாக்கப்பட்டிருந்தன. பாண்டவா எனும் கிராமத்தில், அனைத்து இசுலாமியரையும் ஒரே வீட்டிற்குள் அடைத்துத் தீவைத்துக் கொளுத்தினர். ஆலோல் எனும் ஊரின் மசூதியில் குழந்தையைப் பிரசவித்துக் கொண்டிருந்த தாயை அந்நிலையிலேயே பாலியல் வன்முறைக்குள்ளாக்கிக் கொன்றனர். போலீஸ் பதிவு செய்ய மறுத்ததன் விளைவாக, நூற்றுக்கணக்கான பாலியல் வன்முறைகள் பதிவு செய்யப்படாமலே போயின.

நண்பர்களே, நாம் மதச்சார்பற்றவர்களாகவே இருந்த போதிலும், மதவெறியை எதிர்க்கிறவர்களாகவே இருந்த போதிலும், கையைக் கட்டிக் கொண்டு வீட்டிற்குள் அமர்ந்திருப்போமேயானால், குஜராத் மட்டுமல்ல ஒட்டுமொத்த இந்தியாவையே எரித்துச் சுடுகாடாக்கி விடுவார்கள். தமிழ் மக்களாகிய நீங்கள் குஜராத்தில் எங்களுக்கு நேர்ந்த கொடுமைகளுக்குத் தமிழகத்தில் பதிலடி கிடைக்கும் என்ற நம்பிக்கையையும், தொடர்ந்து நாங்கள் உயிர்வாழ்வதற்கும், போராடுவதற்குமான உணர்வையும் அளித்துள்ளீர்கள்.''

குஜராத் நேருரைகளின் நிறைவுரையாக, மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் மாநிலச் செயலாளர் மருதையன், ''இவை யாரோ பாதிக்கப்பட்ட முசுலீம்களின் குரலல்ல. மேலவளவிலும், திண்ணியத்திலும், அரியானாவிலும் நாடெங்கிலும் அன்றாடம் ஒலித்துக் கொண்டிருக்கிற குரல்தான், இன்று குஜராத்திலிருந்தும் ஒலிக்கிறது. இந்த குஜராத் மக்களின் கண்ணீர்க் கதைகளைக் கேட்ட ஒவ்வொரு மனிதனும், நியாய உணர்வும் மனசாட்சியும் கொண்ட ஒவ்வொருவரும் இதற்குப் பதில் சொல்ல வேண்டும்'' எனக் குறிப்பிட்டார்.

''பேசுவதற்கும், கண்ணீர் விடுவதற்கும், கருத்துரீதியான ஆதரவு தெரிவிப்பதற்கும், பத்து ரூபாய் நன்கொடை கொடுத்து விட்டு என் கடன் தீர்ந்ததென்று ஒதுங்கிக் கொள்வதற்குமான காலம் முடிந்து விட்டது. இது செயல்படுவதற்கான காலம். குஜராத் இந்துத்துவத்தின் சோதனைச் சாலையென்றால், தமிழகத்தை நாம் பார்ப்பன பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவதற்கான, மதச்சார்பின்மையை நிலைநாட்டுவதற்கான இந்தியாவின் சோதனைச் சாலையாக உருவாக்கிக் காட்டுவோம். இது பெரியார் பிறந்த மண்; சித்தர்கள் வாழ்ந்த மண்; பார்ப்பனியத்தை எதிர்த்த ஏராளமான போராளிகள் வாழ்ந்த மண் என்று தலை நிமிர்ந்து கூற வேண்டுமானால், நாம் அதனைச் சாதித்துக் காட்ட வேண்டும்'' என அறைகூவல் விடுத்தார். பதிலாக,

*'ஆர்.எஸ்.எஸ். காலிகளை*
*ஒழித்துக் கட்டுவோம்!'*
*'இரத்தக் கடனை*
*இரத்தத்தால் தீர்ப்போம்!'*
*'பார்ப்பன பயங்கரவாதத்தை*
*முறியடிப்போம்!'*

— என்று அரங்கில் திரண்டிருந்த அனைத்து மக்களும் உணர்வு பொங்க முழக்கமிட்டனர். போர்க்குணத்துடனும், ஊக்கத்துடனும், உறுதியுடனும் எழும்பிய அம்முழக்கங்கள் மாநாட்டுத் திடலெங்கும் எதிரொலித்துக் கொண்டேயிருந்தன. ❑

### பிழை திருத்தம்

சென்ற இதழ்: ''பார்ப்பன பயங்கரவாதம்'' கட்டுரையில் பக்.5-ல் ''பா.ஜ.க - ஆர்.எஸ்.எஸ் கும்பல் மீது பிற அரசியல் கட்சிகள் கொண்டுள்ள உறவுமுறை குறித்துப் பேசுவதற்கு முதலில் பா.ஜ.க.வுக்கு அருகதையே கிடையாது'' என்று வெளியாகியுள்ளது.

இதில் ''பா.ஜ.க-வுக்கு அருகதையே கிடையாது'' என்பதற்குப் பதிலாக ''போலிக் கம்யூனிஸ்டுகளுக்கு அருகதையே கிடையாது'' என்று திருத்திப் படித்துக் கொள்ளவும். தவறுக்கு வருந்துகிறோம்.

(ஆர்.)


படிப்பகம்

www.padippakam.com

# மூதேவி ஆக்கப்பட்ட மூத்த தேவி தொல் திராவிடப் பெண் தெய்வம்!

சிவக்குமரன்

''நாட்டார் தெய்வ வழிபாட்டின் பார்ப்பனமயமாக்கம்'' எனும் பொருள் குறித்து உரையாற்றிய திரு. சிவக்குமரன், ''கிராமங்களில் உழைக்கும் மக்கள் வணங்கும் தெய்வங்களை, தமிழ்த் தெய்வம், நாட்டார் தெய்வ வழிபாடு எனக் குறிப்பிட வேண்டுமே தவிர, சிறு தெய்வம் என அழைக்கக் கூடாது என்பதை உரையின் தொடக்கத்திலேயே சுட்டிக் காட்டினார்.

இன்று மூதேவி என அறியப்படும் தொல் திராவிடப் பெண் தெய்வத்தின் உண்மையான பெயர் மூத்த தேவி. அத்தெய்வத்தின் மிகப் பழைய பெயர் முகடி. பெரிய வயிறும், பெரிய மார்பகத்தையும் உடைய இத் தெய்வம், அழுக்கை உரமாக்குகிற வித்தை தெரிந்தவள்.

விவசாயச் சமூகத்தின் பெண் தெய்வமான மூத்த தேவியைத்தான், பார்ப்பனர்கள் மூதேவியாக்கி, சிரீதேவியின் அக்காவாக்கி விட்டார்கள் மூத்த தேவிக்கு இன்றும் கூட காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவிலிலும், திருப்பரங்குன்றத்திலும் தனிக் கோவில்கள் உண்டு. திருப்பரங்குன்றத்தில் பூட்டி வைக்கப்பட்டிருக்கும் மூத்த தேவியின் கோவிலை வழிபாட்டுக்குத் திறந்து விடக் கோரி நாம் போராட வேண்டும்.



பிள்ளையாரிடத்திலும் தமிழர்கள் ஜனநாயகத் தன்மையோடே நடந்து கொண்டார்கள். அத்தெய்வத்திற்கு மரத்தடியில் இடம் கொடுத்து உட்கார வைத்தனர். ஊரான் கோயிலை இடிக்கும் வேலையை மக்கள் செய்வதில்லை; அது பார்ப்பனர்களின் பண்பாடு.

வெள்ளையன், வெள்ளையம்மாள், வெள்ளைச்சாமி ஆகிய திராவிடத் தெய்வங்கள் பார்ப்பனர்களால் கொல்லப்பட்டு விட்டன. கிருஷ்ணனின் அண்ணனாக அறியப்படும் பலராமன்தான் வெள்ளைச்சாமி. பூர்வீகத் திராவிடத் தெய்வமான வெள்ளைச்சாமிக்கு பலராமன், பலபத்ரன் என்ற பெயர்கள் உண்டு. இத்தெய்வத்தின் கொடி பனைக் கொடி. இத்தெய்வத்தின் ஆயுதம் கலப்பை. பாசனத்திற்காக, யமுனை நதியை தனது கலப்பையால் கீறி வாய்க்கால் அமைத்தவன் பலராமன்.

பலராமனைக் கொன்ற பார்ப்பனர்களால் திராவிடத் தெய்வங்கள் அனைத்தையும் கொல்ல முடியவில்லை. இந்திரன், வருணன், மருத் (காற்று), ஆகிய ஆரிய தெய்வங்கள் செத்துப் போன பின்னும் கூட கிராமப்புறங்களில் காத்தவராயனையும், கருப்பசாமியையும் இன்றும் சாராயம் படைத்துக் கும்பிட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

அனைவருக்கும் கல்வி கொடுக்க வேண்டும் என்பதற்கு எதிரானது பார்ப்பனீயம்; அது, பெண் கல்விக்கும் எதிரானது. அப்படியிருக்கையில் சரசுவதி என்ற பெண் தெய்வம் கல்விக் கடவுளானது எப்படி எனக் கேட்டால், அது சமணர்களிடமிருந்து பார்ப்பனர்களால் பிடுங்கப்பட்ட பெண் தெய்வம். வேதத்தை அபத்தம் எனச் சாடிய சமணம், உனக்குத் தெரிஞ்சதை அனைவருக்கும் படிச்சுக் கொடு எனக் கூறிய முற்போக்கான சமயம்.

தமிழர்களுக்கு தாய்த் தெய்வம், மகன் தெய்வம் என்ற இரு தெய்வங்கள்தான் உண்டு. தாய்த் தெய்வத்திற்கு காடு அமர் 'செல்வி என்பது உள்ளிட்டுப் பல பெயர்கள் உண்டு. ஆக்ரோஷமான இத்தெய்வம் கையில் வாள் வைத்திருக்கும். இத்தாய்த் தெய்வத்தை இன்று ஆலயக் கோபுரங்களில் மட்டுமே காண முடியும்.

மகன் தெய்வத்தின் பெயர் சேயோன். இத்தெய்வத்தின் பூசாரி வேலன்; சாமியாடி குலைத்தி. செம்மறி ஆட்டு இரத்தத்தை தினை அரிசியுடன் கலந்து சேயோனுக்குப் படையல் போடப்படும். 9-ஆம் நூற்றாண்டுக்கு முன்பாக இத்தெய்வத்தை விழுங்கிய பார்ப்பனர்கள், சேயோனுக்குப் பூணூலை மாட்டிவிட்டு, சுப்பிரமணியன் ஆக்கினார்கள்.''

வட மாவட்டத்தில் வணங்கப்படும் பொன்னியம்மனும், தென் மாவட்டத்தில் வணங்கப்படும் இசக்கியம்மனும் சமண மதத்தில் இருந்து தமிழர்கள் தத்து எடுத்துக் கொண்ட தெய்வங்கள். வட மாநிலத்தில் இருந்து வந்த கேடு செய்யும் தெய்வமான பிள்ளையாரிடத்திலும் தமிழர்கள் ஜனநாயகத் தன்மையோடே நடந்து கொண்டார்கள். அத்தெய்வத்திற்கு மரத்தடியில் இடம் கொடுத்து உட்கார வைத்தனர். ஊரான் கோயிலை இடிக்கும் வேலையை மக்கள் செய்வதில்லை; அது பார்ப்பனர்களின் பண்பாடு.

சாதியும் மதமும் பார்ப்பனர்களிடம் ஒன்றாகப் பின்னிப் பிணைந்து இருக்கும். தமிழர்களுக்கு மதம் கிடையாது. மதம் ஓர் அஞ்ஞானக் கட்டமைவு. தமிழர்களுக்குத் தெய்வ வழிபாடும் சடங்குகளும்தான் உண்டு. நிரந்தர விழிப்புணர்ச்சிதான் விடுதலைக்கு வழி; எனவே, ஆன்மீகத்திலும் நாம் விழிப்போடு இருக்க வேண்டும். □

## சந்தாதாரர் கவனத்திற்கு

பிப்ரவரி மாத இதழுடன் முடிவுற்ற சந்தாக்கள் : **18, 19, 21-23, 25, 69, 70, 72-80, 149, 152, 158, 159, 164, 169-171, 279, 281, 285-287, 291, 292, 294, 296 - 300, 302-305, 307, 308, 313.**

மார்ச் இதழுடன் முடிவுறும் சந்தாக்கள் : **1, 81-95, 309, 311, 312, 314-317, 319-325, 375.**

மேற்கண்ட சந்தாதாரர்கள் ஆண்டுச் சந்தா ரூ.60/- செலுத்தி, புதுப்பித்து ஆதரவளிக்க வேண்டுகிறோம். M.O. செலுத்துவோர் தவறாமல் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். புதிய சந்தாதாரர்கள், அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் கூடிய தெளிவான முகவரியை எழுதி அனுப்பவும்.


படிப்பகம்

www.padippakam.com



# பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாடு

## தஞ்சை - பிப்ரவரி 22, 23 - 2003

### ம.க.இ.க - பு.மா.இ.மு - வி.வி.மு - பு.ஜ.தொ.மு

## மாநாட்டுத் தீர்மானங்கள் - சுருக்கப்பட்ட வடிவில்

● மதம் சார்ந்த அமைப்புக்கள் என்று சொல்லிக் கொள்ளும் ஆர்.எஸ்.எஸ்., வி.ஹெச்.பி., பஜ்ரங்தள், இந்து முன்னணி, சிவசேனா ஆகியவை மத நிறுவனங்கள் அல்ல; அவை பார்ப்பன பயங்கரவாத அரசியல் இயக்கங்கள் என்று பிரகடனப்படுத்தப்பட வேண்டும்; அவற்றைத் தடை செய்து அவற்றின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய வேண்டும்; அதன் தலைவர்களைச் சிறையிலடைக்க வேண்டும்;

● மதம் தொடர்பான நிகழ்ச்சிகளுக்கும் விழாக்களுக்கும் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள சிறப்பு உரிமைகளை ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி போன்ற மதவெறி பயங்கரவாத இயக்கங்கள் நடத்தும் 'மத' நிகழ்ச்சிகள், விழாக்களுக்கு வழங்கக்கூடாது. காஞ்சி சங்கராச்சாரி, சீறிரங்கம் ஆண்டவன் சாமிகள் போன்று மத வெறி மற்றும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை மதத் தலைவர்கள் என்று அங்கீகரித்துச் சிறப்பு உரிமைகள் வழங்கக்கூடாது;

● எல்லாச் செய்தி ஊடகங்களும் ஆர்.எஸ்.எஸ். தலைமையிலான பார்ப்பன பயங்கரவாத அமைப்புக்களைப் பற்றிய செய்திகளையும் அவர்கள் கக்குகின்ற அப்பட்டமான கொலைவெறிப் பேச்சுக்களையும், சிறுபான்மை மதத்தினருக்கு எதிரான அவர்களது வெறித்தனமான பாசிசத் தன்மை கொண்ட பிரகடனங்களையும் அதன் தலைவர்கள் பேசி வருகின்ற அப்பட்டமான பொய்களையும், வரலாற்றுப் புரட்டுக்களையும் எவ்வித விமரிசனமும் செய்யாமல் தொடர்ந்து வெளியிட்டு வருவதையும் இம்மாநாடு கண்டிக்கிறது.

● இன்றைய அரசியல் சூழலில் நாட்டையும் உழைக்கும் மக்களையும் கவ்வியுள்ள இன்னொரு கொடிய அபாயம் ''தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம்'' எனும் மறுகாலனியாதிக்கமாகும். அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்கள், பன்னாட்டுக் கம்பெனிகள் மற்றும் அவற்றின் தரகர்களான டாடா, அம்பானி போன்ற தரகு அதிகார வர்க்க முதலாளிகள் ஆகியோருக்குச் சேவை செய்யும் இத்தகைய தேசத் துரோக மறுகாலனியாதிக்கக் கொள்கைகளைத் திணிப்பதில் மிகத் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது ஆர்.எஸ்.எஸ். கும்பலின் அங்கமான பா.ஜ. கட்சி. ஆனால் இந்தக் கும்பலின் வேறு சில அமைப்புக்கள் அக்கொள்கைகளை எதிர்ப்பதுபோல நடிக்கின்றன. இந்தத் தேசத் துரோகிகளின் நடிப்பிற்கு மயங்கிவிடக் கூடாதென்றும், இவர்களை எதிர்த்து முறியடிக்க வேண்டுமென்றும் உழைக்கும் மக்களை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

போர்ப்பறை முழங்கட்டும் எட்டுத்திக்கும்!



● முசுலீம் மதவெறி பயங்கரவாதமும், பார்ப்பன பயங்கரவாதம் போன்றே மிகக் கொடியது. பார்ப்பன (இந்து) மதவெறி பயங்கரவாதம் எவ்வாறு ''இந்து'' மக்களுக்கும் எதிரானதோ, அதுபோல முசுலீம் மதவெறி பயங்கரவாதம் முசுலீம் உழைக்கும் மக்களுக்கும் எதிரானதுதான் என்று புரிந்து கொள்ள வேண்டும். பார்ப்பன பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டால் தான் முசுலீம் மதவெறி பயங்கரவாதம் ஒழிய வழி பிறக்கும் என்றும், எனவே இந்து மதவெறி பயங்கரவாதத்தை ஒழிக்க உழைக்கும் மக்கள் – குறிப்பாக இந்து மதத்தைச் சேர்ந்தோராகத் தம்மைக் கருதும் உழைக்கும் மக்கள்– முன் வர வேண்டும் என்றும் இம்மாநாடு அறைகூவி அழைக்கிறது.

● எல்லை தாண்டி வருகின்ற இசுலாமிய மத பயங்கரவாதம் தான் இன்று நாடு எதிர்நோக்கியுள்ள மிகப் பெரிய அபாயம் என்றும், முசுலீம் மக்கள் அனைவரும் தேசத்துரோக பயங்கரவாதிகள் அல்லது அவ்வாறு சந்தேகிக்கத்தக்கவர்கள் என்றும் முசுலீம்களும் முஷாரப்பும்தான் நமது எதிரிகள் என்றும் பார்ப்பன பயங்கரவாதிகள் திட்டமிட்டுப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். முசுலீம் மக்கள் உட்பட சிறுபான்மை மதத்தினர், தேசிய இன மற்றும் நக்சல்பாரிப் போராளிகள் மீதான போலீசின் பாசிசத் தாக்குதல்களுக்கும் பொதுவாக போலீசு ராச்சியத்திற்கும் ஒரு அங்கீகாரத்தை மக்களிடமிருந்து பெற முயற்சிக்கின்றனர். இவர்களின் இந்தப் பாசிசச் சதியை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.


● தந்தை பெரியார் இயக்கத்தின் காரணமாக அம்பலப்படுத்தப்பட்டுத் தமிழக மக்களால் ஒதுக்கப்பட்டு ஒடுங்கியிருந்த பார்ப்பனக் கும்பல் தற்போது



படிப்பகம்

www.padippakam.com

ஜெயலலிதா மீண்டும் ஆட்சிக்கு வந்ததிலிருந்து புது உற்சாகம் பெற்று, சங்கராச்சாரி - ஜெயலலிதா தலைமையில் தமிழ்நாட்டை முன்னோடிப் பார்ப்பன நாடாக்க செயல்பட்டு வருகின்றது. மதமாற்றத் தடைச் சட்டம் என்பது அதன் முதல் காய் நகர்த்தலாகும்; ஜெயலலிதாவின் அடக்குமுறைகளும் எதிர்க்கட்சிகளின் கையாலாகாத்தனமும் மக்களிடம் ஒருவித பயத்தை உருவாக்கியுள்ளது. மேலும் ஜெயலலிதா பார்ப்பனர்களுக்கு ஆதரவாகச் செயல்படுபவர் என்பதால், பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த அரசு அலுவலர்கள்மற்றும் பிற பார்ப்பனரல்லாதோர் இந்த பயத்தால் அடக்கி வாசிக்கின்றனர். இதைச் சாதகமாக்கிக் கொண்டு பார்ப்பனக் கும்பல் துணிச்சலாகச் செயல்பட்டு வருகின்றது. பார்ப்பன பயங்கரவாதத்தின் இந்த வளர்ச்சியைத் தடுக்க தமிழக மக்கள் தன்முனைப்போடும் விரைந்தும் செயல்பட முன் வரவேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.



● தமிழ்நாடு அரசின் முன்முயற்சியோடும், ஆதரவோடும் ஒரு லட்சம் பேர் கொண்ட கோயில் பாதுகாப்புப் படை அமைக்கும் திட்டம் உடனடியாகக் கைவிடப்பட வேண்டும் என்று இம்மாநாடு வற்புறுத்துகிறது. இப்படைக்கு போலீசே பயிற்சி அளிக்கும் என்றும், அடையாள அட்டை வழங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அரசே பார்ப்பன மத வெறிப் படையை அமைக்கும் மிகவும் அபாயகரமான இத்திட்டம் தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

● தலித் மக்களை பார்ப்பனிய காராகிருகத்துக்குள் நிரந்தரமாக அடைத்து வைக்கும் உள்நோக்கமும் சிறுபான்மை மதப்பிரிவு மக்களை மிரட்டிப் பணியவைக்கும் நோக்கமும் கொண்ட, தமிழ்நாட்டைப் பார்ப்பன நாடாக்கும் சதித்திட்டத்தின் அங்கமாகப் பிறப்பிக்கப்பட்டுள்ள கட்டாய மதமாற்றத் தடைச்சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என இம்மாநாடு கோருகிறது. அடிப்படை ஜனநாயக உரிமையை அப்பட்டமாகப் பறிக்கும் இந்த மதமாற்றத் தடைச்சட்டத்தை எதிர்த்துப் போராட வேண்டும் என இம்மாநாடு அறைகூவுகிறது.

● 'பயங்கரவாத பீதியூட்டுதல்' எனும் பார்ப்பன ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாத கும்பலின் போர்த்தந்திர நோக்கத்திற்குச் சேவை செய்யவும், மறுகாலனியாக்கத்தை எதிர்த்துப் போராடும் மக்களைக் கடுமையாக அடக்கி ஒடுக்கவும் கொண்டு வரப்பட்டுள்ள பொடா சட்டத்தைத் திரும்பப் பெறுவதற்குப் போராடுமாறு உழைக்கும் மக்களை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

● அடிப்படை உழைக்கும் மக்களைத் தூய்மையற்றவர்கள் என்றும், அவர்கள் கோயிலில் நுழைந்து தொழுவதற்கு உரிமையில்லை என்றும் கொழுப்பு வடியப் பேசிய காஞ்சி மடாதிபதி ஜெயேந்திரரை வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும். காஞ்சி மடம் நடத்தும் கல்வி நிறுவனங்களில் பார்ப்பன மாணவர்களுக்கும் சூத்திர - தலித் மாணவர்களுக்கும் தனித்தனி விடுதி வைத்து வர்ணாசிரம தீண்டாமைக் கொடுமையை நடைமுறைப்படுத்தி வருகிற காஞ்சி மட நிர்வாகிகளையும், சங்கராச்சாரிகளையும் வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

● ஆர்.எஸ்.எஸ். நடத்தும் 'சரசுவதி சிசு மந்திர்', 'வித்யா பாரதி' போன்ற பள்ளிகளின் வரலாற்றுப் பாடங்களும் அவ்வமைப்பு நடத்தும் பயிற்சி முகாம்களும் (ஷாகா) இந்துக்கள் தவிர பிற மதத்தினரை அன்னியர்களாகச் சித்தரித்து அவர்கள் மீது அவநம்பிக்கையும், வெறுப்பும் கொள்ள வைக்கின்றன. இளம் நெஞ்சங்களில் பார்ப்பன மத வெறி நஞ்சை கொஞ்சம் கொஞ்சமாக புகுத்தி, வளரும் தலைமுறையினரையே தமது சித்தாந்த அரசியல் படையாக மாற்ற திட்டமிட்டுச் செயல்பட்டு வருகின்றனர். எனவே அபாயகரமான இப்பள்ளிகளை மூட வேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

● வரலாற்றையே தலைகீழாகப் புரட்டி எழுதுவது; இந்திய துணைக் கண்டத்திற்கே பெருமை சேர்க்கும் திராவிட நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்ட அரப்பா, மொகஞ்சதாரோ நாகரிகம் ஆரிய நாகரிகமே என்று பார்ப்பன பயங்கரவாதிகளால் வரலாறு புரட்டப்படுகிறது.

மேலும் பிற்போக்கு மூடத்தனங்களான சோதிடம், வாஸ்து போன்றவையும் அறிவியல்கள்தான் என மூடர்களுக்கே உரிய கம்பீரத்துடன் அறிவிக்கப்பட்டுப் பாடத்திட்டங்களாகப் புகுத்தப்படுகின்றன. கல்வியைக் காவிமயமாக்கும் இந்த நாசகார திட்டத்தை எதிர்த்து முறியடிக்க அணிதிரளுமாறு உழைக்கும் மக்களை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

● முசுலீம்கள், கிறித்தவர்கள், பார்சிகள் தவிர மற்ற அனைவரும் பௌத்தர், சமணர் ஏன் நாத்திகர்கள் உட்பட அவர்களின் சம்மதம் இன்றியே இந்துக்கள் என்று வரையறுக்கின்ற அரசியல் சட்டப்பிரிவு நீக்கப்பட வேண்டும்.

● சொத்துடைமை, திருமணம், பிறப்பு, இறப்பு சொத்து தொடர்பான பண்பாட்டு நடவடிக்கைகள், வாழ்க்கை முறைகள் போன்றவைகளை வழிநடத்தும் சட்டங்களான



படிப்பகம்

www.padippakam.com

இந்துச் சட்டம், முசுலீம் தனிநபர் சட்டம் போன்ற மத அடிப்படையிலானஉரிமையியல் சட்டத் தொகுப்புகளை நீக்க வேண்டும். சாதியையும், தீண்டாமையையும், சூத்திரன் என்று இழிவுபடுத்துவதையும் இந்து மத உரிமையாகவும், உரிமையியல் சட்டத்தின் அடிப்படையாகவும் கொண்டுள்ள அரசியல் சட்டப்பிரிவுகளை உடனே நீக்க வேண்டும்.

● இந்து மதம் என இன்று அழைக்கப்படும் மதம் வேதமதம், வைதீக மதம், பிராமண மதம் என்று தான் வரலாற்றிலும், இலக்கியங்களிலும், அவர்களின் சித்தாந்தவாதிகளாலேயே அழைக்கப்பட்டு வந்தது. ஏனென்றால் இம் மதத்தில் பிறப்பாலேயே பார்ப்பனர்கள் கடவுளுக்கும் மேலானவர்கள். இந்த மதத்தைப் பார்ப்பன மதம் என்று அழைக்க வேண்டும் என்றும், 'நாங்கள் இந்துக்கள் அல்ல' என்று சூத்திர - தலித் சாதிகளான உழைக்கும் மக்கள் அறிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம். 'நாங்கள் இந்துக்கள் அல்ல' என்பதை சட்டரீதியாக அறிவிக்கும் உரிமைக்காகப் போராட வேண்டும் என்றும் அறைகூவி அழைக்கிறோம்!

● உழைக்கும் மக்களைப் பார்ப்பானின் வைப்பாட்டி மகன் என்று சூத்திரப்பட்டம் கட்டுகின்ற, தீண்டத்தகாதவர்கள், சண்டாளர்கள் என்று இழிவுபடுத்துகின்ற மனுதர்மம், கீதை, புராணங்கள் மற்றும் இதிகாசங்கள் உட்பட அனைத்து நூல்களையும் அரசு தடை செய்ய வேண்டும். உழைக்கும் மக்கள் அவற்றைத் தீயிட்டுக் கொளுத்த வேண்டும்.

● அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் உரிமையை நிலைநாட்டவும், எந்தச் சாதியினரும் எந்தக் கோயிலிலும் நுழைந்து வழிபடவும், கருவறைக்குள் நுழைந்து வழிபடவும் உரிமை உண்டென்று நிலைநாட்டவும் போராட முன்வருமாறு உழைக்கும் மக்களை இம்மாநாடு அறைகூவி அழைக்கிறது.

● மதம் மாறும் தலித்துக்களுக்கும், பிறப்பால் தலித்தாக இருந்து பிற மதங்களுக்கு மாறி பின்னர் 'இந்து' மதத்திற்கு மாறும் தலித்துக்களுக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் தலித் நாத்திகர்களுக்கும் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.



தோழர் காளியப்பன்,
இணைச் செயலர், ம.க.இ.க

● இந்தியா என்பது பல தேசிய இனங்கள், பழங்குடிகள், மொழிகள், பண்பாடுகள், மதங்கள், வழிபாட்டு முறைகள் வாழ்க்கை முறைகளைக் கொண்ட ஒரு துணைக் கண்டம்; பார்ப்பன பயங்கரவாதத்தின் தலைமைப் பீடமான ஆர்.எஸ்.எஸ்-ம் அதன் துணை அமைப்புக்களும் எல்லா தேசிய இனங்களையும், பழங்குடி மக்களையும் அவர்களின் மொழி, பண்பாடுகளையும் சுவடில்லாமல் துடைத்தெறிந்து இந்து - இந்தி - இந்தியா என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில் ஓர் அகண்ட பாரதத்தைக் கட்டியமைக்கும் மாபெரும் சதித் திட்டத்துடன் செயல்பட்டு வருகின்றன. இந்தப் பார்ப்பனிய பயங்கரவாத இரும்பு வளையத்தை உடைத்தெறிய அணிதிரளுமாறு உழைக்கும் மக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

● பெரியாரும் அம்பேத்கரும் பார்ப்பனியத்தை எதிர்த்துப் போராடிய கால கட்டத்தில் இருந்ததைவிட பார்ப்பனியம் இன்னும் கொடிய பயங்கரவாதமாக நாடு தழுவிய அமைப்பு வலைப்பின்னலைக் கொண்டதாக வளர்ந்துள்ளது; வளர்ந்து வருகின்றது. திராவிட, தலித் இயக்கங்களின் சில பிரிவுகளை பார்ப்பனியத்தின் தாசர்களாக்கியுள்ளது. எனவே, இன்று பார்ப்பனியத்தை வீழ்த்துவதென்பது இன்னும் கடுமையான போராட்டத்தையும், சவால்களையும் கொண்டதாக மாறிவிட்டது. அதற்கேற்ப புதிய போராட்ட முறைகளையும் அமைப்பு முறைகளையும் அரசியலையும் வைத்துப் போராட வேண்டும்; அம்பேத்கரிய, பெரியாரிய அரசியல், அமைப்பு மற்றும் போராட்ட முறைகளே போதும் என்று சுயதிருப்தி கொள்வது நல்ல பாம்பை அரைகுறையாக அடித்துத் தப்ப விடுவதற்குச் சமமாகும் என இம்மாநாடு எச்சரிக்கிறது.

● பார்ப்பன பயங்கரவாதிகள் சட்டபூர்வமாக இயங்கினாலும், ஒரு பிரிவினர் நாடாளுமன்றச் செயல்பாடுகளில் ஈடுபட்டாலும் அவர்கள் தங்களது இலட்சியத்தை அடைய சட்டவிரோத, இரகசிய நடவடிக்கைகளையும் அமைப்பு முறைகளையும் தான் பிரதானமாக வகுத்துக் கொண்டுள்ளனர்.

எனவே, பார்ப்பனச் சித்தாந்தத்திற்கு எதிரான புரட்சிகரமான சித்தாந்தத்திலும் ஆயுத ரீதியிலும் பயிற்றுவிக்கப்பட்ட, நாடெங்கும் வலைப் பின்னல் கொண்ட, நன்கு கட்டியமைக்கப்பட்ட ஒரு அமைப்பின்றி இவர்களை முறியடிக்க முடியாது.

இது தீவிரவாதம் என்றால், அந்தத் தீவிரவாதம் சரியே என்று இம்மாநாடு பிரகடனம் செய்கிறது.

● பார்ப்பன பயங்கரவாதக் கும்பல் பார்ப்பனியத்தை மீட்டுருவாக்கம் செய்து நிலைநாட்டுதல் என்ற தன் நோக்கத்திற்காகச் செயல்படும்போது, அது அமெரிக்க மேல்நிலை வல்லரசு மற்றும் அம்பானி, டாட்டா போன்ற தரகு அதிகார வர்க்க முதலாளிகளின் அடிவருடி என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனவே, இந்தக் கும்பலுக்கு எதிரான போராட்டம் வளரும்போது, இவர்களைப் பாதுகாக்க அமெரிக்காவும், தரகு அதிகார வர்க்க முதலாளிகளும் அவர்களது கருவியான இந்திய அரசு எந்திரமும் முழு வீச்சில் எதிர்த் தாக்குதல் தொடுக்கும்.

எனவே, ஏகாதிபத்தியத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் தூக்கியெறிகின்ற புதிய ஜனநாயகப் புரட்சி என்ற ஒரு முழுமையான புரட்சியின் ஒரு பகுதியாக பார்ப்பன பயங்கரவாதத்தை முறியடிப்பது என்பதை வைத்துப் போராடுவதுதான் சரியான பாதையாகும். இதை உணர்ந்து பாட்டாளி வர்க்கத் தலைமையிலான புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணிதிரளுமாறு உழைக்கும் மக்களை இம்மாநாடு அறைகூவி அழைக்கிறது. ❑



படிப்பகம்

www.padippakam.com

## கவுண்டம்பட்டி சாதிவெறி

# இந்தக் கொடுமை என்னோடு முடியட்டும்!

**ப**ள்ளப்பட்டி என்ற கிராமத்தில் ஒரு நிலப்பிரச்சினையில் மேல்சாதியினரால் துன்புறுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட விவசாயி, சங்கன் என்பவருடைய வாயில் தேவர் சாதிவெறியர்கள் சிறுநீர் கழித்த கொடுமை. அந்தத் துயரத்தை விவரித்தார் **சங்கன்.**



''என் பேர் சங்கன் - திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை தாலூக்கா - பள்ளப்பட்டி கிராமம் – கவுண்டம்பட்டியைச் சேர்ந்தவன் நான். என்.கே.கே. கிருஷ்ணசாமிக் கவுண்டர்னா, அந்தப் பள்ளப்பட்டியிலேயே முதல் பணக்காரர் அவர்தான். அவரு தோட்டத்துல எங்கப்பா 40 வருடக் கால கொத்தடிமை; நான் 17 வருடக்கால கொத்தடிமை.

எனக்கு முறையா சம்பளம், கூலி கிடையாது. 10-இல் ஒரு பங்குன்னு பேச்சு மட்டும்தான். மாசம் 100, 200 குடுப்பாரு. மேல வர்ற பணத்த ''எங்கிட்டேயே இருக்கட்டும், பணம் ஓடியா போயிடும்''னு வச்சுக்கு வாங்க. நாங்களும் ஒரு மன நம்பிக்கையோட அப்படியே விட்டுடுவோம். எதாச்சும் அவசரம்னு போயிக் கேட்டா எல்லா சரியாப் போயிடுச்சிடா அப்படீன்னுடுவாங்க.

இப்படித்தான், அரிசனங்க காலனிய ஒட்டி 3 ஏக்கர் நிலம் இருந்தது - கவுருமெண்டுக்கு எழுதிப் போட்டு வீட்டுமனைக்குன்னு வாங்குனோம். அதுல பாதி அளவுக்கு காலனிக்குப் பொது நிலமாயிடுச்சு. மீதி ஒன்றரை ஏக்கர் நிலம் எங்க சகோதரங்களுக்குச் சேர்த்து 4 பேருக்குக் கேட்டோம். அதுக்காக மாசம் ரூ. 500 வீதம் 15 வருசமா கவுண்டர் கிட்ட ஒதுக்கீடு செஞ்ச பணம் இருந்தது. சரி செஞ்சிக்கிரச் சொன்னேன். அவுங்க ஏத்துக்கிடலே.

*எனக்குப் பிற்பாடு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இப்படி ஒரு கொடுமை ஏற்படாம இருக்கணுமின்னா இங்க வந்திருக்கிற தொண்டர்கள் - தோழர்கள் - தாய்மார்கள் எல்லாம் உணர்ச்சியோடு இந்த அண்ணாத் துரைக்குத் தகுந்த பாடத்தைக் கத்துக் கொடுக்கணும்.*

**– சங்கன்**

இடையிலே பக்கத்துத் தோட்டத்துக்காரருக்கும் எனக்கும் பிரச்சினை வந்தது. அவுரு பேரு போசு. அவரு தேவர்சாதி. அப்போது அசோகன்ற கவுண்டர் சாதிக்காரர் தீண்டாமை வழக்குல அவரை இழுக்கச் சொன்னாரு. இழுத்தேன். உள்ளே தள்ளுனாங்க. பணத்தால அடிச்சி அவுரு எப்படியோ வெளிய வந்தாரு.

எலக்சன் வந்தது. அசோகன் தேர்தல்ல நிக்க ஆசப்பட்டாரு; கவுண்டர் சமூகமும், தேவர் சமூகமும் சேர்ந்து - ''நீ எலக்சன்ல நிக்க ஆசப்பட்டா சங்கன - அவன் இருக்கற தோட்டத்த விட்டுக் காலி பண்ணு. அப்படிச் செஞ்சா உன்னயே பிரசிடெண்டு ஆக்கறோம்''ன்னாங்க.

அசோகன் என்னிட்ட கேட்டாரு. ''நிலம், பணம் வேணும். என் இடத்த விட்டு எதுக்குப் போகணும்?'' - நான் கேட்டேன். இதுக்கும் அப்புறம், ''ஒன்றரை ஏக்கர் நிலத்த எங்க பேருக்கு எழுதிக் கொடுத்தாக்க, சங்கன உயிரோடயோ, பொணமாவோ ஊரை விட்டே காலி பண்றோம்'' அப்படீன்னு சொல்லி அண்ணாத்துரை, வைரம், கண்ணன் மூணு பேரும் (தேவர் சாதிக்காரங்க) அசோகன்ட்ட பேசியிருக்காங்க. அவரு எழுதிக் கொடுத்ததா சொல்லி முள்ளு வெட்ட வந்தாங்க மூணு பேரும். என் இடத்துல அவுங்க எப்படி வரலாம்? தடுத்தேன்.

அதுக்கு எதிர்ப்பா அவுங்க என்னை ஆளில்லாத எடத்துக்குத் தூக்கிக்கிட்டுப் போனாங்க. அவுக மூணு பேரு, இன்னும் மூணு பேரு - மொத்தம் ஆறு பேரும் என்னை அமுக்கிட்டாங்க. கண்ணங்கிறவரு ஒரு கையில குடுமியும், ஒரு கையில வாயும் பிடிச்சி நெறிச்சிக்கிட்டார். இன்னிக்கி அண்ணாத்துரைங்கிற அந்த நாயி மெட்ராசுல போலீசு வேலை பாக்குது - சொல்லவே அருவெறுப்பா இருக்குது - அந்த அண்ணாத்துரை என் வாயில மூத்திரத்த அடிச்சுவிட்டார்.

தோழர்களே, உங்க எடத்துல என் குறைபாடுகளைச் சொல்லியிருக்கேன். என் உடம்புல உயிர் தங்கியிருக்கிற உத்தரவாதம் இல்லே - மிரட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள். நானும் 3 மாசமா அந்த ஊர்லேயே சீவிச்சிக்கிட்டு இருக்கிறேன். ஏம்புள்ள குட்டிக்கோ, எனக்கோ எந்த உதவியும் செய்ய யாரும் முன் வரல்லே.

மருதயில பீப்பிள்ஸ் வாட்சுன்னு அமைப்பு இருக்கு. அவுங்க வந்து என் குறைபாடுகளைக் கேட்டாங்க. போலீசு அதிகாரி நெயில்வால், அரிசன்ஸ் இலாக்கா மந்திரி, ஜெயலலிதா எல்லாருகிட்டயும் அழச்சிகிட்டுப் போயி மனு எழுதிக் கொடுத்தாங்க. அப்புறமா, கிருஷ்ணசாமி, திருமாவளவன், பசுபதி பாண்டியன், ஜான்பாண்டியன் எல்லாரும் வந்தாங்க. யாருகிட்ட சொல்லி என்ன பிரயோசனம்? மனவருத்தமாவே இருக்குது - எந்த நாயமும் கிடைக்கல்லே.

இந்த அண்ணாத்துரை என் வாயிலே ஒன்னுக்கடிச்சது - என்னோட கூட மறைஞ்சி போனாலும் போகட்டும்; ஆனால் எனக்குப் பிற்பாடு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இப்படி ஒரு கொடுமை ஏற்படாம இருக்கணுமின்னா இங்க வந்திருக்கிற தொண்டர்கள் - தோழர்கள் - தாய்மார்கள் எல்லாம் உணர்ச்சியோடு இந்த அண்ணாத்துரைக்குத் தகுந்த பாடத்தைக் கத்துக் கொடுக்கணும்.'' ❑



படிப்பகம்

www.padippakam.com

*'புதிய கலாச்சாரம் திரைமுழக்கம்'* வழங்கும் இரண்டாவது ஆவணப்படம் - ஒரு அறிமுகம் :

சென்னை மாநகரெங்கும் பரவியிருக்கும் மளிகைக் கடைக்காரர்களை 'அண்ணாச்சி' என்று அன்புடன் அழைப்பது சென்னை மக்களின் வழக்கம். இவர்களில் பலர் தென் மாவட்டங்களிலிருந்து பிழைப்புத் தேடி வந்த நாடார் சாதி மக்களாவர். நூறு ஆண்டுகளுக்கு முன்னால் பனையேறுவதையே குலத்தொழிலாகக் கொண்டிருந்த இச்சாதியினர் பலர் இன்று தொழிலதிபர்களாகவும், வணிகர்களாகவும் மாறியிருக்கின்றனர். அவர்களில் சிலர் பா.ஜ.க உள்ளிட்டு எல்லா இந்துமதவெறி அமைப்புக்களிலும் நிரம்பியிருக்கின்றனர்.

எந்தக் குமரி மாவட்டம் இன்று ஆர்.எஸ்.எஸ்.இன் தளமாக உருவெடுத்து வருகிறதோ அந்த மண்ணில்தான் பார்ப்பனியத்தின் கொடுங்கோன்மையை எதிர்த்த ஒரு வீரஞ்செறிந்த வரலாறு இரத்த சாட்சியங்களுடன் புதைக்கப்பட்டிருக்கிறது.

திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் கீழிருந்த குமரி மாவட்டத்தில் சாணார் சமூகத்துப் பெண்கள் மார்பை மறைக்கக் கூடாது, தாலி அணியக்கூடாது என்பது அன்றைய அரசாங்கத்தின் சட்டம். பின்னர் மாராப்பு, தாலி அணியவேண்டுமென்றால் வரி கட்ட வேண்டும் என்பது அடுத்த சட்டம். இதை எதிர்த்து நடந்த போராட்டத்தில் மார்புகள் துண்டாக்கப்பட்ட பெண்களும், தாலியறுந்த பெண்களும் நூற்றுக்கணக்கில் உண்டு, இதைக் காரணப் பெயராகக் கொண்டே குமரி மாவட்டத்தில் ஒரு ஊரின் பெயர் தாலியறுத்தான் சந்தை என்று இன்றும் அழைக்கப்படுகிறது.

மாராப்பு அல்லது தோள்சீலைப் போராட்டம் என்று அழைக்கப்படும் குருதி கலந்த வரலாற்றினை இந்த ஆவணப்படம் பதிவு செய்திருக்கிறது. இந்தப் பின்னணியில்தான் தென்மாவட்ட நாடார் சாதி மக்களில் பலர் கிறித்தவமதத்திற்கு மாறினர். 1970-ஆம் ஆண்டுகள் வரை நாடார்களில் கிறித்தவ, இந்து வேறுபாடு என்பது வாழ்க்கையில் நுழையாமல் இருந்தது. அதன் பின்பு சாதியில் ஒன்றாக இருந்த இம்மக்களை மதத்தினால் பகைமையுடன் மோதவிட்டிருப்பது ஆர்.எஸ்.எஸ்-இன் கரசேவையாகும். இந்தக் கயமையை ஆவணப்படம் அம்பலப்படுத்துகிறது.

பார்ப்பனியத்தை எதிர்த்து ஒரு பிரிவு மக்கள் மதம் மாறினர்; இன்னொரு பிரிவினர் தனி மதத்தையே உருவாக்கினர். அதைச் செய்து காட்டியவர் முத்துக்குட்டி என்ற பெரியவர். கோவிலுக்குள் நுழையக் கூடாது. மேல்சாதியினரைக் கண்டால் துண்டை இடுப்பில் கட்ட வேண்டும் என்று ஒவ்வொரு அடக்குமுறை விதிகளை எதிர்த்தும், சுயமரியாதையுடன் கலகம் செய்த முத்துக்குட்டியின் 'அய்யா வழிபாடு' இன்றும் குமரி மாவட்டத்தில் பிரபலமாக இருக்கிறது. பாப்பனியத்தை எதிர்த்து சுயமரியாதை வழிபாட்டுக் கலகத்தை நடத்திய முத்துக்குட்டியை இந்துமதத் தலைவராகச் சித்திரிக்கும் ஆர்.எஸ்.எஸ்-இன் புரட்டலையும் படம் தோலுரிக்கிறது.

அடுத்து தென்காசிக்கு அருகிலிருக்கும் மீனாட்சிபுரம் கிராமத்திற்குள் நுழைகிறோம். மீனாட்சிபுரம் என்ற பெயரே பார்ப்பன இந்துமத வெறியர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும். இசுலாமுக்கு மதம் மாறிய தாழ்த்தப்பட்ட மக்களின் தன்மானப் போராட்டத்தில் மீனாட்சிபுரம் ஒரு மைல்கல். தொலைக்காட்சிகளில் பதிலளித்த அம்மக்கள் இங்கும் சளைக்காமல் தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள். இன்று தன்மானத்துடன், மதம் மாறிய – மாறாத தலித் மக்கள் ஒன்றாய் வாழ்வதையும் படம் பதிவு செய்திருக்கிறது. மதம் மாறாத ஒரு தலித் பெண் இந்த மதமாற்றம்தான் மீனாட்சிபுரத்திற்கு ஒரு கௌரவத்தையும், தன்மானத்தையும் வழங்கியிருப்பதாகப் பெருமிதப்படுவது அதற்கோர் எடுத்துக்காட்டு.

இறுதியில் கேரளாவின் வைக்கம் வருகிறோம். பலமாதங்களாகக் கோவில் நுழைவுப் போராட்டம் நடத்திய ஈழவ மக்களின் மண் அது. பெரியாருடன் அப்போராட்டத்தில் கலந்து கொண்ட பெரியவர் விசுவநாதன் தன் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார். அவற்றினூடாகப் போராட்டம் நடந்த இடம், கோவில், தெருக்களை கேமரா வழியாகப் பார்க்கிறோம்.

மாநாட்டு வேலைகளினூடாக அவசரமாகத் தயாரிக்கப்பட்ட இந்த ஆவணப்படம் அவசியமான நேரத்தில் வந்திருக்கிறது. தென் தமிழகத்தின் பார்ப்பனியக் கொடுங்கோன்மைகளைப் பதிவு செய்திருக்கும் முதல் படமும் இதுதான், எமக்குத் தெரிந்த வரை.




# பார்ப்பன பயங்கரவாதத்தின்
# இரத்த சாட்சியங்கள்

**60 நிமிட ஒளிக் குறுந்தகடு விலை : ரூ. 125**
**கிடைக்குமிடம் : புதிய கலாச்சாரம் அலுவலகம்**

இந்தப் படத்தை வாசகர்கள், நண்பர்கள், தோழர்கள் விரிவாகக் கொண்டு செல்ல வேண்டும். தென் மாவட்டங்களில், குறிப்பாக குமரி மாவட்டத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் இப்படம் திரையிடப்பட வேண்டும். பார்ப்பனியத்தை எதிர்த்து நாம் நடத்தும் போராட்டத்திற்கு, கடந்த காலத்தில் தம் இன்னுயிரை நீத்து நமது சமத்துவ உரிமைக்காகப் போராடிய நமது முன்னோர்கள் நிச்சயம் வலு சேர்ப்பார்கள். நமது சோர்வையும், களைப்பையும், அவநம்பிக்கையையும் உதற வைப்பார்கள். காலம் நம்மிடம் கோரும் கடமை உணர்வைத் தட்டி யெழுப்பவே இந்தப்படம்.

இது 'தீக்கொழுந்தி'ற்குப் பிறகு, வெளிவந்திருக்கும் இரண்டாவது ஆவணப்படம். இத்தகைய முயற்சி தொடர்வதற்கான உற்சாகமும் உங்களிடமிருந்து வரவேண்டும். அது இப்படத்தை விரிவாகக் கொண்டு செல்லும் உங்கள் கடமையில் இருக்கிறது என்பதை மீண்டும் வலியுறுத்துகிறோம். ☐



படிப்பகம்

# மீனாட்சிபுரம் : "பணத்துக்கு அலைபவன் நீ... நாங்கள் மானம் காக்க மதம் மாறினோம்"

**1981–ல் தென்காசிக்கு அருகிலுள்ள மீனாட்சிபுரத்தில் சுமார் 1000 தலித்துகள் இசுலாமுக்கு மதம் மாறினார்கள். கழுத்தில் கத்தி வைத்தாற் போல துள்ளிக் குதித்தனர் பார்ப்பன இந்துமதவாதிகள். வாஜ்பாயியே நேரில் சென்று மன்றாடிய போதும் அம்மக்கள் அடிபணிய மறுத்தனர். அக்கலகத்தின் நினைவுகளை, தாங்கள் மதம் மாறியதற் கான காரணிகளை ஷேக் மதார் சாகிப், முகம்மது இஸ்மாயில் இம்தாதி ஆகியோர் மாநாட்டில் எடுத்துரைத்தனர்.**

**ஷேக் மதார் சாகிப், மீனாட்சிபுரம்.**





''நான் என்னுடைய 40 வயது வரை இந்துவாகவே இருந்தேன். தாழ்த்தப்பட்டவனாக, தேவேந்திர குல வேளாளர் எனும் பள்ளர் வகுப்பைச் சேர்த்தவனாக வாழ்ந்து வந்தேன். எனக்கு இன்னமும் நன்றாக நினைவிருக்கிறது. நான் அப்போது 5–ஆம் வகுப்பில் முதல் மாணவனாகத் தேறியிருந்தேன். ஆறாம் வகுப்பில், என்னை தென்காசியிலுள்ள பள்ளியில் சேர்ப்பதற்காக என் தந்தையார் என்னை அழைத்துச் சென்று கொண்டிருந்தார். தென்காசி எங்கள் ஊரிலிருந்து 10.கி.மீ. தொலைவில் இருக்கிறது. போகும் வழியில், ஒரு தேநீர்க் கடையில் தேநீரருந்தச் சென்றோம். உடனடியாக, அத்தேநீர்க் கடைக்காரர் எங்களை நோக்கி, ''அதோ, உங்களுக்கென்று தனியாக கிளாஸ் உள்ளது. அதை எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றார்.

நான் வெகுண்டெழுந்தேன். ''ஏன், நானும் மனிதன்தானே! நான் ஏன் நீ சொல்லும் எச்சிக் கிளாசில் தேநீர் குடிக்க வேண்டும்? உன்னுடைய எச்சிக் கிளாசை நீயே வைத்துக் கொள்'' என்று அவன் முன்னிலையிலேயே அக்கிளாஸைப் போட்டு உடைத்தேன். ஊருக்குத் திரும்பியவுடன் எங்கள் பெரியவர்களிடம் சென்றேன். ''பெரியோர்களே, நாம் எதற்காக இன்னொருவனுக்கு அடிமையாக வாழ வேண்டும்? நாம் ஏன் தாழ்ந்தவர்கள் என்று அழைக்கப்பட வேண்டும்?'' எனக் கேட்டு அழுதேன். இதன் விளைவாக உணர்வு பெற்ற அப்பெரியவர்களும் எங்களுடைய வாழ்வை உயர்த்திக் கொள்ளவும், சுயமரியாதையைப் பெறுவதற்காகவும் தீவிரமாகச் சிந்திக்கத் துவங்கினர். இறுதியாக, இந்து மதத்தை விட்டு வெளியேறுவதென முடிவு செய்தனர்.

நான் இசுலாமிற்கு மதம் மாறியதானது, ஆர்.எஸ்.எஸ் காரர்களின் தலையில் பாறாங்கல்லை வைத்தது போலாகி விட்டது. எங்களைத் தொடர்ந்து சாதிரீதியாக ஒடுக்கப்படும் அனைத்து மக்களும், தம்முடைய அடிமைகள் அனைவரும் மதம் மாறி விடுவார்களோ என்ற அச்சத்தில் உறைந்து போனார்கள் பார்ப்பனர்கள்.

உடனடியாக, அன்றைய பாதுகாப்புத் துறை அமைச்சராக இருந்த வாஜ்பாய், மீனாட்சிபுரத்திற்கு ஓடோடி வந்தார். எங்களிடம் குறைகள் கேட்டார். நாங்கள் நடந்ததை நேர்மையாகச் சொன்னோம். வாஜ்பாய் மட்டுமல்ல, அவருக்கு முன்னரும், பின்னரும் வந்திறங்கிய எம்.ஜி.ஆர், ஆர்.எம். வீரப்பன், இராசாராம் உள்பட அனைத்துப் பிரமுகர்களும், ''உங்களுக்கு மதம் மாறுவதற்கு எவ்வளவு பணம் கொடுத்தார்கள்'' எனக் கேட்டார்கள். அவ்வாறு கேட்டவர்களுக்கெல்லாம், ''பணத்திற்கும், பதவிக்கும் ஆசைப்படுபவர்கள் நீங்கள்தான், சமத்துவமாக வாழ்வதற்கு மட்டுமே நாங்கள் ஆசைப்படுகிறோம்'' என்று முகத்திலறைந்தாற் போலப் பதிலளித்தோம்.

இன்றும் அறிவில்லாதவர்கள் நாங்கள் பணத்திற்காக மதம் மாறினோம் என்று கூறுகிறார்கள். அவர்களைப் போல நாங்கள் பணத்திற்காக ஆசைப்பட்டவர்களில்லை. மானத்தைக் காக்க வேண்டும் என்ற உணர்ச்சியில் வாழ்பவர்கள் நாங்கள். நாங்கள் உழைக்கிறோம், ஏர்பிடிக்கிறோம், மண் வெட்டுகிறோம், வியர்வை சிந்தி உழைத்து நல்ல முறையில் பாடுபட்டுச் சாப்பிடுகிறோம். எங்களுக்கு எதற்காக அந்நியனுடைய பணம்? மானத்திற்காக மட்டுமே நாங்கள் மதம் மாறினோமேயன்றி, பணத்திற்காக அல்ல. நாங்கள் உழைத்துக் கொடுப்பதை உண்ணும் நீ உயர்ந்தவனா? நான் ஏன் மதம் மாறினேன் என்று கேட்க உனக்கு என்ன அருகதை? நாங்கள் இந்த மண்ணில் பிறந்தவர்கள், எங்கோ ஆரிய நாட்டிலிருந்து வந்து எங்களை அடக்க நினைக்கிறாயே, உன்னுடைய ஆணவத்தை அடக்குவதே எங்களது மனஉறுதி''

**முகம்மது இஸ்மாயில் இம்தாதி, மீனாட்சிபுரம்.**

''1981–ல் நாங்கள் மதம் மாறினோம். நாங்கள் மதம் மாறியதற்காக எத்தனையோ தொல்லைகள் கொடுத்தார்கள். இப்போதும் கொடுத்து வருகிறார்கள்.

விதவிதமான பத்திரிக்கையாளர்கள் மீனாட்சிபுரத்திற்கு வந்து குழுமுகிறார்கள். ''மீனாட்சிபுரத்தில் மதம் மாறிய தலித்துகள் மீண்டும் தாய் மதத்துக்குத் திரும்பி விட்டனர்'' என்ற பொய்ப் பிரச்சாரத்தைப் பரப்புகின்றனர். இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும். நாங்கள் ஏன் மதம் மாறினோம்? எங்கள் முன்னோர்கள் தொலைத்த சுதந்திரத்தைத் திரும்பப் பெற வேண்டி, சுதந்திரம் பெற்ற இந்நாட்டில், சுதந்திரமாக, சுயமாக, தன்மானத்தோடு வாழ்வதற்காக மதம் மாறினோம்.

எனவே, தமிழகத்தைப் பார்ப்பன நாடாக்க வேண்டுமென்ற சதித்திட்டத்தை முறியடிக்க, உழைக்கும் வர்க்கம் என்ற முறையில் நாம் ஒன்று திரண்டு சதிகாரப் பார்ப்பனக் கும்பலுக்குப் பாடம் புகட்டியாக வேண்டும்.''

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.

(TAMIL MONTHLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA UNDER No. 42647/67
Regd. No: TN/PMG (CCR)/239/03-05

